₹10

fmpb

# அறைகூவல்

Volume 50 Issue 4 April 2020

**... அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.**

ரோமர் 6:5



இயேசுவின் தனித்துவம்

# ‘தனித்துவத்திற்கு’ ஓர் அழைப்பு!

இயேசுவின் தனித்துவச் சிறப்புகளை அளவிடவே முடியாதது. அவர் பிறப்பிலேயே ஒரு ராஜா; குழந்தைப் பருவத்திலேயே தமது தெய்வீக ஞானத்தினால், மிகவும் வேதஅறிவு படைத்த வேதபாரகர்களையும், பரிசேயர்களையும் வியப்புக்குள்ளாக்கியவர்; வாலிபப் பருவத்தில் கடலின்மேல் நடந்து இயற்கையையே கட்டுப்படுத்தியவர். இவர் தமக்கென எந்த செல்வத்தையோ, செல்வாக்கையோ தேடிக்கொள்ளவில்லை; இவர் முறையான கல்வியையோ, பயிற்சியையோ பெற்றுக்கொள்ளவில்லை, ஆனால் இவரைப் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களைப்போல உலகில் வேறு எவருக்கும் எழுதப்படவில்லை. இவர் எந்தவொரு மருந்துமின்றி திரளான மக்களைக் குணப்படுத்தினார். இவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அதிகதூர பயணங்கள் ஒன்றும் மேற்கொள்ளவில்லை; எந்த தேவாலயமும் கட்டவில்லை; ஆனால், இன்று உலகமெங்கிலும் இவரை வழிபடுபவர்கள்தான் அதிகம். இவர் மனுக்குல சரித்திரத்தின் நடுநாயகனாகவும், மனிதஇன மறு மலர்ச்சியின் தலைசிறந்த கட்டமைப்பாளராகவும் காணப்படுகிறார்.

ஆம்! இயேசு நித்தியமானவர். இவர் கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் நித்திய மானவராய் இருக்கிறார் (யோவான் 1:1-3). இவரது இவ்வுலகப் பிறப்பையும். வாழ்க்கையையும், மரணத்தையும் மற்றும் பரமேறுதலையும் நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. (லூக்கா 24:44). பரிசுத்த ஆவியினால் அற்புதமாக உற்பவிக்கப்பட்டு இவ்வுலகில் பிறந்த ஒரே நபர் இவர்தான் (லூக்கா 1:35). நம்மைப் பாவங்களிலிருந்து மீட்டு இரட்சிப்பதற்காக, தம்மையே பலியாக்கிய பாவமறியா பரிசுத்தரும் இவரே ( ஏசாயா 53; மத்.1:21; 1கொரி.15:1-3). இவரே மரணத்தை வென்றவர். இவரால்தான் தமது ஜீவனைக் கொடுப்பதற்கும் மீண்டும் எடுத்துக்கொள்வதற்கும் முடியும் (யோவான் 2:19; 10:17- 18). இவருடைய உயிர்த்தெழுதல் சரீர ரீதியானது; வெறும் ஆவியில் நடந்ததல்ல (லூக்கா 24:39). மரித்த கிறிஸ்து மீண்டும் மரிப்பதில்லை என்பது, இவர் பிதாவின் முதற்பேரான குமாரன் என்கிற தனித்துவத்தன்மையை ஊர்ஜிதப்படுத்துகிறது ( ரோமர் 1:4,5 ). தமது வேளை வந்தபோது, இவர் இப்பூமியை விட்டு பரலோகத்திற்குப் பிதாவிடம் எடுத்துக்கொள்ளப்பட்டார். மீண்டும் மகிமையோடும், வல்லமையோடும் இவ்வுலகிற்கு மனுக்குலத்தை நியாயந் தீர்க்கத் திரும்பி வருவார் (மத்.24:30, அப்.17:31). பரலோகில் பரிசுத்தவான்கள் மற்றும் தேவதூதர்களின் ஆராதனையின் மையமாகக் காணப்படுகிறவரும் இவர்தான் (வெளி.21-22). நித்திய ஜீவனாகிய பரிசுப் பொருளை நாம் அடைவதற்குச் சார்ந்திருக்க வேண்டிய ஒரேநபரும் இவர் தான் (யோவான் 3:16), அவரின்றி நமக்கு வேறு இரட்சிப்பில்லையே (அப். 4:12).

நாம் தேவசாயலில் படைக்கப்பட்டுள்ளோம். அது நமக்கு அடையாளத்தை அளித்திருந்தாலும் தனித்துவத்தைத் தரவில்லை. நாம் மாறுபட்ட கைரேகைகள், கண்அடையாளங்கள் மற்றும் மரபணுக்களைப் பெற்று இப்பிரபஞ்சத்தில் மற்றவர்களைவிட தனி அடையாளத்தோடுக் காணப்பட்டாலும், தனித்துவத்தைப் பெறவில்லை. ஆனால், இயேசு தமது பரிசுத்த இரத்தத்தைக் கொடுத்து, நம்மை மீட்டு நமக்கு மறுபிறப்பை நல்கியதின் மூலம் நம்மைத் தனித்துவம் பெற்றவர்களாக மாற்றியுள்ளார். ஆம், நாம் இவ்வுலகில் ‘தனிப்பிறவி.’ தனித்துவம் நிறைந்த நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, அவரைப் பின்பற்றுகிறவர்களும் அவரைப்போல தனித்துவத்துடன் வாழ, வளர வேண்டுமென எதிர்பார்க்கின்றார். கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை ஆசரிக்கிற நாம், கிறிஸ்துவால் பெற்றுள்ள இத்தனித்துவத்தின் வளர்ச்சியை ஆராய்தல் அவசிய மன்றோ!

- J.J. ஹாரிஸ் *(தகவல் தொடர்பு துறை)*



"கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தார்; நாமோ வாழ்ந்து மரித்துப் போகிறோம்."
– ஜாண் ஸ்டாட்

"நமது பழைய வாழ்க்கை சிலுவையுடன் முடிவடைகிறது; புதிய வாழ்க்கையோ உயிர்த்தெழுதலுடன் தொடங்குகிறது." – வாட்ச்மேன்நீ

"இயேசுகிறிஸ்துவின் சிலுவையேயன்றி, இந்த உலகிற்கு நம்பிக்கையே கிடையாது. மனுக்குலத்தின் ஒரே நம்பிக்கையான நற்செய்தி கிறிஸ்துவின் சிலுவையும், உயிர்த்தெழுதலுமேயாகும்." – ரவி சகரியா

"விசுவாசிகள் சாத்தானை, மாம்சத்தை, தீங்கை மற்றும் தீங்கு விளைவிப்போரை மேற்கொள்வதற்கு, தங்களின் பார்வையை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை நோக்கிச் செலுத்தும்போது மட்டுமே, அவர்களில் கிறிஸ்துவின் சிலுவை வெற்றியடைகிறது." – ஜாண் கால்வின்

... கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகலதேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. (லூக்கா 24:46-47)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


பொதுச் செயலாளர்:
S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ**
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுகாரியதரிசியிடமிருந்து...

அன்பிற்குரிய பெரியோரே, சகோதர, சகோதரிகளே மற்றும் சிறார்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

சிலுவை, நாம் செய்த தவறுகளுக்காக நாம் அனுபவிக்கும் பாடுகளின் அடையாளம் அல்ல. அது மற்றவர்கள் நமக்கு எதிராக செய்த தவறுகளுக்காக நாம் அனுபவிக்கும் பாடுகளின் அடையாளமாய் இருக்கிறது. இயேசு, தமது பாவங்களுக்காக சிலுவையை சுமக்கவில்லை, ஏனெனில் அவர் 'பாவமில்லாதவர்' என்று எபிரெயர் 4:15-ல் காண்கிறோம். இயேசு சுமந்த சிலுவை நமது பாவங்களின் விளைவாகும். நாம், ஏதாவது துன்பங்களை அனுபவிக்கும் போதெல்லாம் உடனே அதை கிறிஸ்துவின் சிலுவைக்கு நிகரானதாக கருதக்கூடாது. மாறாக அத்துன்பம், கிறிஸ்துவைப் போல் நாம் நடந்து கொள்ளாததினால் உண்டானதா என நாம் சிந்திக்க வேண்டும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், யாராவது ஒருவர் நம்மை துன்புறுத்தும்போது, நாம் கிறிஸ்துவை போல அதை சகித்துக்கொள்ள தீர்மானித்து, கோபப்படாமல் அமைதியை காத்துக்கொள்வதினால் நாம் அடைகிற காயத்தின் வலியே சிலுவையை சுமப்பதற்கு ஒப்பாகும். மாறாக, நாம் கோபத்துடன் நடந்துக் கொண்டு, கடுஞ்சொற்களைப் பயன்படுத்தி, உறவை முறித்துக் கொண்டு பின்னர் அதன் விளைவாக நாம் அனுபவிக்கும் வலியை சிலுவையை சுமப்பதற்கு ஒப்பானதாகக் கருதக்கூடாது. ஏனெனில், இது நமது சுயசெயல்பாட்டினால் நமக்குக் கிடைத்த துன்பமாகும். 1 பேதுரு 3:17-ல் "தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" என்று சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வாறாக, கிறிஸ்துவின் சிலுவை நன்மை செய்தும் நமக்கு இழைக்கப்படும் துன்பத்தின் அடையாளமாயிருக்கிறது. இதை நமது வாழ்வில் ஏற்றுக்கொண்டு சிலுவையை சுமக்க நாம் தயாராகக் காணப்படுகிறோமா?

## ஒடிசா மாநில மாநாடு

பல ஆண்டுகளுக்குப் பின்னர், ஒடிசா மாநில மாநாடு புவனேஷ்வரில் கடந்த 2020 பிப்ரவரி 20 முதல் 22-ம் தேதி வரை நடைபெற்றது. நமது விரிவுப்பணி செயலாளர்களின் கடின முயற்சியாலும், அப்பகுதியிலுள்ள திருச்சபை போதகர்கள், குறிப்பாக அசெம்ப்ளிஸ் ஆப் காட் மற்றும் யூனியன் திருச்சபை போதகர்களின் ஒத்துழைப்புகளினாலும், கிட்டத்தட்ட 300 பேர் இம்மாநில மாநாட்டில் கலந்துக் கொண்டு சிறப்பித்தமைக்கு மிகவும் நன்றி கூறுகிறோம். இம் மாநாட்டில் கலந்துக் கொண்ட அனைவரும் மிஷனெரிப்பணியைக் குறித்து நல்ல விழிப்புணர்வைப் பெற்றுக்கொண்டார்கள். பிற மாவட்டங் களிலிருந்தும் அநேகர் இம்மாநில மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

## சாஹிப்கஞ்ச் சந்தால் மேளா

ஜார்க்கண்டிலுள்ள சாஹிப்கஞ்ச் பிராந்தி யத்தில் நமது சந்தால் திருச்சபைகளின் வருடாந்திர மேளா 2020 பிப்ரவரி 28-ம் தேதி முதல் மார்ச் 1-ம் தேதி வரை மிகச்சிறப்பாக நடந்தது. இம்மேளாவை அப்பிராந்தியத்திலுள்ள நமது திருச்சபை விசுவாசிகளும், மூப்பர்களும் மற்றும் சுவிசேஷகர்களும் தன்னார்வத்தோடு பொறுப்பேற்று, நமது மிஷனெரிகளோடு இணைந்து நடத்தியது மிகவும் வியக்கத்தக்கதாக அமைந்தது. இம்மேளாவின் ஒட்டு மொத்த நிதி தேவைகளையும் நமது இளம் விசுவாசிகளே சந்தித்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும். இம்மேளாவில் கலந்து கொண்ட சுமார் 5000 பெரியவர்களும், 2000 இளைஞர்கள் மற்றும் சிறார்களும் தங்களது ஆவிக் குரிய வாழ்வில் உற்சாகத்தையும், எழுப்புதலையும், அர்ப்பணிப்பையும், உத்வேகத்தையும் இம்மேளா மூலம் பெற்றுக்கொண்டனர்.

## கொரோனாவைரஸ் தொற்றுநோய்

இக்கொரோனாவைரஸ் தொற்று நோயின் வீரியத்தை முறியடிக்க மருத்துவ பரிசோதனை செய்தல், சமுதாய கூட்டு வாழ்விலிருந்து விலகியிருத்தல், சுயமாக தனிமைப் படுத்தல் மற்றும் சுகாதார நடை முறைகளை கடைப்பிடித்தல் மற்றும் பரப்புதல் போன்ற முயற்சிகளை மேற் கொள்வதோடு, இந்நோயின் தாக்கத்தி லிருந்து விடுதலைபெற தேவனை நோக்கி தீவிரமாக ஜெபிக்க வேண்டும். இந்நோயால் எதிர்பாராது பொதுவாழ் வில் பல பாதிப்புகள் ஏற்பட்டாலும், எல்லாவற்றையும் படைத்த ஆண்ட வரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது ஒன்றுமில்லை என்கிற விசுவாசத்தோடு செயல்படுவோம். நன்றி!

கிறிஸ்துவின் பணியில்



S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்



# சிலுவையின் வெற்றியே உயிர்த்தெழுதலும் மிஷனெரிப்பணியும்!

*"தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து, என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள்." (2 தீமோ.2:8)*

இயேசுகிறிஸ்துவின் சிலுவையும் உயிர்த்தெழுதலும் கிறிஸ்தவ விசுவாசத்தின் இதயமும் ஆன்மாவும் போன்றது. இவைகள்தான் தேவனின் இரட்சிப்புக்கான மூல சித்தாந்தங்கள். இவைகளிலிருந்துதான் இரட்சிப்புக்கான புதிய சகாப்தம் உதயமாயிற்று. கடந்தகால, நிகழ்கால மற்றும் வருங்கால அனைத்து மக்களின் இரட்சிப்புக்குரிய அளவுகோலும் சரத்துகளும் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மற்றும் உயிர்த்தெழுதலில்தான் அடங்கியுள்ளன. ஆம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சிலுவையினூடே பொதியப்பட்டுள்ளது எனலாம். சிலுவையிலிருந்து கல்லறைக்கும், கல்லறையிலிருந்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் ஒரு தொடர்ச்சியைக் காணலாம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின்றி சிலுவை அர்த்தமற்றதாகிவிடும்; உயிர்த்தெழுதல் கிறிஸ்து மரணத்திலிருந்து கொண்ட வெற்றியின் விளைவாகும். சிலுவையில்லாமல் உயிர்த்தெழுதலை நினைத்துப் பார்க்கவே முடியாது; அதுபோல உயிர்த்தெழுதல் இல்லாமல் சிலுவையைக் குறிப்பிடவே முடியாது.

கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் சரிசமமான முக்கியத்துவம் வாய்ந்தது. கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் தனித்தனியாக நடைபெற்றாலும், ஒன்றோடொன்று தொடர்புக் கொண்டவையாகும். ஆம், கிறிஸ்துவின் சிலுவையையும், உயிர்த்தெழுதலையும் பிரிக்க முடியாது; ஏனெனில், அது நெசவுக்கான தறியில் காணப்படும் நூலும் பாவும் போன்றதாகும்.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் முக்கியமானது; ஏனென்றால், அது இல்லாமல் பாவமன்னிப்பு அல்லது நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கை நமக்கு கிடைத்திருக்காது. நம்மைப் பரலோகத்திலிருந்து பிரிக்கிற ஒரேயொரு விஷயம் பாவமாகும். நம்முடைய பாவங்கள் இவ்வுலகில் தேவனுக்கும் நமக்கும், பின்னர் நித்தியவாழ்விற்கும் நமக்கும் பிரிவினையை உருவாக்குகிறது. இதன் விளைவாக நாம் தேவனிடமிருந்து பிரிந்து நித்திய ஆக்கினைக்குரியவர்களாகக் காணப்பட்டபோது, கிறிஸ்து தமது சிலுவை மரணத்தின் மூலம் நாம் அடையவேண்டிய ஆக்கினையை சுமந்து, வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, தேவன்

“பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்’’ (2 கொரி.5:21). கிறிஸ்துவின் சிலுவையினாலே நாம் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொண்டோம்.

அதுபோல, இயேசுகிறிஸ்துவின் உயிர்த் தெழுதல் முக்கியமானது; ஏனென்றால், அதன் மூலமாக இயேசு தாம் தேவக்குமாரன் என்பதை நிரூபித்தார். அதற்கு மேலாக அவர் தம்முடைய உயிர்த்தெழுதலால் மரணத்தையும், நரகத்தையும், சாத்தானையும் நமக்காக வென்றார். இப்போது நாம் மரணத்திற்கு அஞ்சத் தேவையில்லை; ஏனென்றால் சாவின் கூரை நமக்காக வென்றார். அவர் இதினிமித்தமாக நமக்குக் கொடுத்துள்ள வாக்குத்தத்தம் என்னவெனில், “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக் கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்” (யோவான் 11:25) என்பதாகும்.

ஆகவே, கிறிஸ்துவின் மரணத்தை அவருடைய உயிர்த்தெழுதலிலிருந்து பிரிக்க முடியாது. இவற்றுள் ஒன்றை விட்டுவிட்டு மற்றொன்றை நம்புவது இரட்சிப்பற்ற தவறானச் செய்தியை நம்புவது போலாகும்.

## கிறிஸ்துவின் சிலுவையும் உயிர்த்தெழுதலும் ஒரு முழுமையான நற்செய்தி:

கிறிஸ்துவின் சிலுவையும், உயிர்த் தெழுதலும் இரண்டு வெவ்வேறு நற் செய்திகள் அல்ல, மாறாக இவைகள் ஒரே நற்செய்தியின் இரண்டு முக்கிய கூறுகள். இவை ஒவ்வொன்றும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. வேதாகமத்தில் சிலுவை மற்றும் உயிர்த்தெழுதல் ஒவ்வொன்றும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு முக்கிய மான ஆதாரங்களாகக் கொடுக்கப் பட்டுள்ளன. கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை வேதாகமம் இணைக்கிறது போல நாமும் இணைத்தே பயன்படுத்த வேண்டும். **இயேசு மரித்து கல்லறைக்குச் சென்றதும், பின்னர் உயிர்த்து கல்லறையினின்று வெளியேறியதும் சரிசமமான முக்கியத்துவம் வாய்ந்தது (1கொரி. 15:3-5).** அதனால்தான், இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் (அவருடைய அடக்கம் மூலம் நிரூபிக்கப்பட்டது) மற்றும் மூன்றாம் நாள் அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார் (பல சாட்சிகளுக்கு அவர் தோன்றியதன் மூலம் நிரூபிக்கப்பட்டது) என்ற இரட்டை உண்மையை பவுல் தனது சுவிசேஷத்தில் தெளிவாக வரையறுக்கிறார். இந்த உண்மையான நற்செய்தியே மிக முக்கியத்துவமும் பிரதானமானதுமாகும் (வசனம்.3).

கிறிஸ்துவின் சிலுவை மற்றும் உயிர்த் தெழுதல் நிகழ்வுகளைப் பவுல் முக்கியப் படுத்தி அதை நேரடியாக சுட்டிக்காட்டு கிறார். இது மட்டும்தான் இரட்சிப்புக்கான நற்செய்தியாய் இருப்பதால், அவர் வேறு எந்த சத்தியத்தை பற்றியும் அதிக மாக கவலைப்படவில்லை. எந்த வொரு பொய்யான சத்தியத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு எதிராக கலாத்திய ருக்கு இவ்வளவு அழுத்தமாக ‘நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்து கிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்’

என அடிகோடிட்டுக் காட்டுவதைப் பார்க்கிறோம். இதற்கு ஏன் இத்தனை முக்கியத்துவம் என்றால், 'கிறிஸ்து வானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்' என்பதாகும். **சிலுவையும், வெறுமையான கல்லறையும் கிறிஸ்தவ விசுவாசத்தின் மையத்தில் இருக்கின்றன. இவை இல்லாமல், இரட்சிப்பிற்கான வேறு எந்தவொரு நற்செய்தியும் இல்லை - (1கொரி.15:1-4).**

சுவிசேஷத்தை மிகச் சுருக்கமாக பவுல், "தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு கிறிஸ்து, என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள்" (2தீமோ.2:8) என்று தீமோத்தேயுக்கு கூறுவதைப் பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் சிலுவையை மட்டும், வேறுசில இடங்களில் உயிர்த்தெழுதலை மட்டும் மக்களின் தேவைக்கேற்ப வெவ்வேறு சூழ்நிலைகளிலும் குறிப்பிட்டிருந்தாலும், இதன் நெருங்கிய உறவையும் மையக் கருத்தையும் சிதைக்காது வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காணலாம் (1கொரி.1:18-2:5). ஆம், இரண்டுமே முழுமையான இரட்சிப்புக்கு இன்றியமையாததாகவும், அவசியமானவைகளாகவும் கருதப்பட்டுள்ளதைக் காணலாம்.

## கிறிஸ்துவின் சிலுவையும் உயிர்த்தெழுதலும் வாழ்வையே மாற்றும்:

கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் வல்லமை நமது ஆவிக்குரிய விசுவாச வாழ்விற்கு அதி முக்கியமானது.

- இது தேவனுக்கும் நமக்கும் ஒரு பாலமாகக் காணப்படுகிறது. நாம் கற்பனைக் கூட செய்து பார்க்கமுடியாத அளவில், நம்மை உருவாக்கி நேசிக்கும் சர்வவல்லமையுடைய தேவனிடம் நமக்கு ஒரு தனிப்பட்ட உறவை இது நமக்கு உருவாக்குகிறது. சிலுவை இல்லாமல் கடந்து மறுபக்கத்திலுள்ள அவரது அன்பைப் பெற வழி இல்லை. அவரேதான் நமக்கு வழியாகிறார்.

- இது பாவ மன்னிப்பைப் பெறுவதற்கான வாய்ப்பை நமக்கு நல்குகிறது. கல்வாரியில் இயேசு கொடுத்த விலைக்கிரயத்தின் மூலம், நமது பாவங்கள் மன்னிக்கப்பட வாய்ப்புகள் கிட்டிற்று. இயேசு தாமே நமது பாவங்களையும், அவமானங்களையும் சிலுவையில் சுமந்து தீர்த்தார். நமக்குப் பதிலாக அவரே நொறுக்கப்பட்டார். அவர் நம்மீது கொண்ட அன்பும், அவர் நமக்காக செய்த தியாகமும் அளவிடப்பட முடியாதது.

- இதை விசுவாசிக்கும் அனைவரும் மகாப்பெரிய விடுதலையை அடைகிறார்கள். அதாவது, பாவபாரத்திலிருந்து விடுதலை, அவமானத்திலிருந்து விடுதலை, பயத்திலிருந்து விடுதலை, கவலையிலிருந்து விடுதலை, நம்பிக்கையற்ற தன்மையிலிருந்து விடுதலை, விரக்தியிலிருந்து விடுதலை, குற்ற உணர்விலிருந்து விடுதலை, இருளிலிருந்து விடுதலை; ஆம், நித்திய ஆக்கினையிருந்து விடுதலையைப் பெறுகிறார்கள்.

- இது நமக்குப் புதிய வாழ்க்கையை நல்குகிறது. நாம் மன்னிக்கப்பட்டு விடுவிக்கப்படுவது மட்டுமல்லாமல், கிறிஸ்துவில் ஒரு முழுமையான வாழ்வை

யும், கட்டளைகளையும் பெறுகிறோம். நாம் கிறிஸ்துவால் புதுப்பிக்கப்பட்டு உள்ளார்ந்த மனமாற்றம் அடைகிறோம். நமது இதய எண்ணங்களையும் விருப்பங்களையும் அவரே மாற்றுகிறார். எதிர்காலத்தைக் குறித்த புதிய நோக்கத்தை அவர் தருகிறார்.

❑ இது நாம் வாழ்வதற்கு வல்லமை யைத் தருகிறது. இயேசு சிலுவையில் மரித்து அடக்கம் செய்யப்பட்டதோடு அது நின்றுவிடவில்லை. அவர் தமது வல்லமையான உயிர்த்தெழுதல் மூலம் சிலுவையை வென்றார். அவர் இறந்து முடிவடையவில்லை, மாறாக உயிர்த்து இன்று நம்மில் வல்லமைப் பொருந்தி யவராக வாழ்கிறார். விசுவாசிகளாகிய நாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்று தினமும் அவரில் வாழ்வதற்கும், அவருக்காய் செயல்படுவதற்கும் இது வழிவகுக்கிறது.

❑ இது சாத்தானுக்கு எதிரான போராட் டத்தில் வெற்றி பெறுவதற்கான வழியை நல்குகிறது. ஆதலால், அவனது தாக்குதல் களைக் கண்டு நாம் பயப்படத் தேவை யில்லை. அவனுடைய தந்திரங்களை நாம் அறிந்திருக்கும்போது, நமது வாழ்வில் காணப்படும் கிறிஸ்துவின் வல்லமை சாத்தானின் தந்திரங்களை மேற்கொள்ள தகுந்த பெலனையும் பாதுகாப்பையும் தருகிறது. நம்மை தற்காத்துக்கொள்ள நாம் அஞ்சவில்லை, ஏனெனில் நாம் நமது சொந்த பெலத்தில் போராட மாட்டோம். நாம் இயேசுகிறிஸ்து எனும் நாமத்தில் வல்லமைப் பொருந்திய வர்களாகக் காணப்படுகிறோம்.

❑ இது நமக்கு நித்திய பரலோக வாழ்வை நல்குகிறது. நாம் மரித்தப்பின் என்ன நடக்குமென ஒருபோதும் பயப்படத் தேவையில்லை. கிறிஸ்துவால் நமக்கு நித்திய ஜீவன் எனும் பாக்கியம் அருளப்பட்டுள்ளது. இந்த உலகம் நமக்கு ஒரு தற்காலிகமான வீடுதான். தேவன் நமக்கு அவருடன் என்றென்றும் வாழ ஒரு இடத்தை தயார் செய்கிறார். நாம் நினைப்பதைவிட இது மிகவும் சிறப்பானதாக இருக்கும் என்பதற்கு எந்தவித சந்தேகமுமில்லை.

ஆம், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1கொரி.15:57).

## கிறிஸ்துவின் சிலுவையும் உயிர்த்தெழுதலும் ஊழியத் திற்கான முன்மாதிரிகள்:

நமது விசுவாச ஜீவியத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை மற்றும் உயிர்த்தெழுதல்; உந்துதலாக அமைவதால் நாம் இவை இரண்டையும் சேர்த்தே நமது வாழ்வில் அப்பியாசப்படுத்த வேண்டும். நமது ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கு உந்துதலையும், நம்பிக்கையையும் அளிப்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மட்டுமல்ல, சிலுவையும் இதற்கு அடிப் படையானதாகும். பவுலைப் பொறுத்தவரை கிறிஸ்துவின் சிலுவை மரணமே நமது பரிசுத்தமான வாழ்விற்கான உந்துதலாகும். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத் திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம்" (2கொரி.5:14-15).

கலாத்தியர் 2:20-ல் இதுதொடர்பான செய்தியை பவுல் கூறுவதைப் பார்க்கிறோம்- "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." ஆம், விசுவாசியின் வாழ்க்கையில் கிறிஸ்துவின் ஈடுபாடு உண்மையானது என்பது நிச்சயமாகிறது. கிறிஸ்துவில் நமது மறுபிறப்பு, அவருடனான நமது ஐக்கியம் மற்றும் பரிசுத்த ஆவியின் ஈவு ஆகியவை நமது வாழ்வை அவருக்குகந்ததாக மாற்றுகிறது.

ஆனால், தற்போதைய இவ்வுலக வாழ்வு முழுவதும் வெறும் மகிமையும் வெற்றியும் நிறைந்ததாகக் காணப்படுமென நாம் அறுதியிட்டுக் கூறமுடியாது. நாம் இந்த பாவம் நிறைந்த உலகில், கிறிஸ்துவின் வருகைக்குப்பின் எல்லாம் சரியாகும்வரை, அனுதினமும் தொடர்ந்து பாவத்தை எதிர்த்துப் பேராடியே ஆகவேண்டும். "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்'' (பிலி.3:10), நாம் இவ்வாழ்வின் ஓட்டத்தில் பங்குப் பெற்றேயாக வேண்டும். இதற்காக நாம் அழைக்கப்பட்டுள்ளோம்; "ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்காக மாதிரியைப் பின் வைத்துப் போனார்" (1பேதுரு 2:21). அவரைப் பின் தொடர்வதற்கு அடிப்படையானது, நம்மை நாமே வெறுத்து சிலுவையை எடுத்து அவர்பின் செல்வதிலே அமைந்துள்ளதாக இயேசு கூறியிருப்பதைப் பார்க்கிறோம் (மாற்கு 8:34-35, 9:35, 10:42-45). கிறிஸ்தவ ஜீவியத்தில் சிலுவையையோ, உயிர்த்தெழுதலையோ தனிமைப்படுத்துவது முழுமையானதாக அமையாது. ஆம், ஒவ்வொரு சீடனுடைய வாழ்விற்கும் கிறிஸ்துவின் சிலுவையும், உயிர்த்தெழுதலும் ஒரு பெரிய மாதிரிகளாகவும், கோட்பாடுகளாகவும் அமைகிறது.

சிலுவையும், உயிர்த்தெழுதலும், ஆத்தும அறுவடைப்பணியும் இணைந்தே செயல்படுகிறது. சிலுவையின் கொண்டாட்டமாக உயிர்த்தெழுதலும் அறுவடைப் பணியும் அமைந்து, விதைத்த சத்திய விதைகளை அறுவடை செய்கின்றன. சிலுவையின் நோக்கம் இயேசு கிறிஸ்துவாகிய அசல் விதையை போன்ற விதைகளை விதைத்து விளையச்செய்து அறுவடை செய்வதாகும். **தேவன் இயேசுவை இவ்வுலகில் விதைத்து அறுவடைசெய்த தானியங்களே நாம். அதாவது விசுவாசிகள் நாம் அனைவரும் தேவனின் கரத்திலுள்ள உணவளிக்கும் விதை போன்றவர்கள். இயேசு ஜீவஅப்பமானதுபோல நாமும் உலகிற்கு வாழ்வளிக்கும் அப்பமாக வேண்டும். அதுவே நமது நோக்கமாக அமைய வேண்டும்.** இது நாம் முதலில் கிறிஸ்துவோடு சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். நாம் கிறிஸ்துவில் வளமான வாழ்வு வாழ்வதற்கு, நாம் ஒன்றுமில்லை

என ஏற்றுக்கொண்டு, நமது சுயத்தை சாம்பலாக்கி கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் ஏதாவது ஓர் அங்க மாகச் செயல்படுவதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது மட்டுமே இது சாத்தியமாகிறது. இதுவே சிலுவையின் உண்மையான வெற்றியாகும். இங்கு தான் உயிர்த்தெழுந்த கிறிஸ்து வெற்றி வீரராக நம்மில் முன்னிலையைப் பெறுகிறார். மிஷனெரிப்பணியும் நம்மூலம் செயலாக்கம் பெறுகிறது. உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து கொடுத்த பிரதான கட்டளையும், அக்கட்டளைக்குக் கீழ்ப் படிவோருக்கு அவர் கொடுத்துள்ள மிகச் சிறப்பான வாக்குத்தத்தமும் என்னவெனில், கட்டளை –“நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.” வாக்குத்தத்தம்– “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” (மத்.28:19-20) என்பதாகும். ஆமென்.




# பணித்தள விஜயம் – ஜார்க்கண்ட் மாநிலம்

கோவை மாவட்டத்திலிருந்து 17 பேர்கள் அடங்கிய குழுவினராக 2019 நவம்பர் 12 முதல் 20 வரை பணித்தள விஜயமாக ஜார்க்கண்ட் மாநிலத்திற்குச் சென்றோம். பாக்குடியா கிராமத்தில் நடந்த இரவுக் கூடுகையில் கலந்து கொள்ளவும், பின்பு சந்திராடி கிராமம் ஆலய பிரதிஷ்டையில் பங்குகொள்ளவும் தேவன் கிருபை பாராட்டினார். பின்னர் கோவை மாவட்டத்திற்கான ஜெப மாநிலமான மேற்கு வங்காளத்திலுள்ள கங்காராம்பூர் சென்று பிராந்திய ஊழியர்களோடு இணைந்து உபவாச ஜெபம் செய்யவும், ஓய்வுநாள் அன்று டர்ஃபான் பகுதியிலுள்ள பாஸ்பாடா ஆலயத்தில் ஆராதனை செய்யவும் தேவன் கிருபை செய்தார். இதில் 12 பேர் முதல் முறையாக பணித்தளத்தை பார்வையிட வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

– திரு பா. பால்ராஜ் ஆபிரகாம், விரிவுப்பணி செயலர், கோவை.

# மெய்யாகவே இயேசு உயிர்த்தெழுந்தார்!



*“கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்.” ( 1கொரி. 15:17 )*

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ கோட்பாடுகளின் அச்சாணியாகும். கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்தவம் இருந்திருக்க முடியாது. கிறிஸ்தவம் வரலாற்று ரீதியாக நிருபணம் செய்யப்பட்ட ஒரு சமயம் என்று கூறலாம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அநேக வரலாற்று சான்றிதழ்களும், வேதாகமமும் அறுதியிட்டுக் கூறுகின்றன. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு சுவிசேஷகர்களும் தங்களது சுவிசேஷப் புத்தகங்களில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை தெளிவாகக் கூறுகின்றனர். சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து தமது உயிர்த்தெழுதல் மூலம் வெற்றி வீரராகிறார். The victim has become the Victor.

இயேசு சிலுவையிலறையப்பட்டு மரிக்கக் கூடாது என்பதில் இயேசுவைச் சுற்றிலும் காணப்பட்ட அவரின் அன்புக்குரியவர்கள் மற்றும் அனுதாபிகளைக் காட்டிலும், சாத்தான் தான் மிக அதிகம் விரும்பினான். ஆதலால் மேசியாவாக அவர் கன்னி மரியின் மடியில் பிறந்தபோது, அவரை குழந்தைப் பருவத்திலேயே கொன்றுவிட வேண்டுமென ஏரோது இராஜா மூலமாகச் செயல்பட்டான். ஆனால், அதில் அவன் தோல்வியடைந்ததை வேதாகமத்தில் பார்க்கிறோம். அடுத்தபடியாக இயேசு இவ்வுலகில் ஊழியத்திற்கு காலடியெடுத்து வைத்ததும் வேதபாரகர் மற்றும் பரிசேயர் மூலமாக, ‘காலம் நிறைவேறுமுன்’ அவரைக் கொலை செய்ய முயற்சி செய்தான்; அதிலும் தோல்வியைக் கண்டான். ஆனால், இயேசு தமது வேளை வந்தவுடன், தாமாகவே முன் வந்து சிலுவை மரணத்தை ஏற்றுக்கொள்கிறார். அதனால் இயேசு உலக இரட்சகரானார். He becomes King of kings and Lord of lords.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஒரு காலவரையறைக்குட்பட்டதும், வரலாற்றில் நிருபணம் செய்யப்பட்டதுமாகும்: The resurrection of Christ is datable and historical.

அது மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், ஏதோ அவரின் ஆவியிலோ அல்லது சிந்தையிலோ நடந்த நிகழ்ச்சியல்ல; அது இயேசுவின்

சரீரத்தில் நடந்த நிகழ்ச்சியாகும். It is physical, not metaphysical event.

அநேகர் கிறிஸ்துவின் பிறப்பைத் தவறாக 'அவதாரம்' எனக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். கிறிஸ்து ஒரு அவதாரம் அல்ல; ஏனென்றால், அவதாரம் என்பது போலியானது; கிட்டத்தட்ட மாறுவேடம் பூண்டு வந்தது போலாகும். ஆனால், வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகிறது – "தேவன் மனிதனானார்" (பிலி. 2:5-8); The Word became flesh - God became man (Jn. 1:14).

தேவன் எப்படி மனிதனானாரோ, அதே போல் இங்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சரீர ரீதியாக உயிர்த்தெழுந்தார். இதை புனித பவுல் மிகத் தெளிவாக (1கொரி.15: 3-4) வசனங்களில், "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங் களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்" எனக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். அதனால்தான் திருச்சபைப் பிதாக்கள் தாங்கள் வடித்துக்கொடுத்த 'விசுவாசப்பிரமாணத்திலும்' மிகத் தெளிவாக – இயேசுகிறிஸ்து 'பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார்' என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

## 1 முதலாவதாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மைச் சான்றுகள் யாவை?

அநேகர் இயேசுகிறிஸ்துவை தீர்க்க தரிசியாக, பெரிய மகானாக ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால், உயிர்த்தெழுந்த தெய்வம் என ஏற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கு அநேக சான்றுகள் காணப்படுவதைக் காணலாம்.

### கல்லறையில் அவர் உடல் காணப்படவில்லை:
### The tomb was empty:

இயேசுகிறிஸ்து இறந்த மூன்றாம் நாளில் கல்லறைக்குச் சென்ற மகதலேனா மரியாளுக்கு, தேவதூதர்கள் கூறு கிறார்கள்– "அவர் இங்கே இல்லை; ... உயிர்த்தெழுந்தார்," (மத்.28:6). இயேசுவின் கல்லறை வெறுமையாகக் காணப்பட்டது.

இயேசுவின் சரீரத்தை சீஷர்கள் மறைத்து வைக்க வாய்ப்பில்லை (மத்.28:13). ஏனென்றால், சீஷர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி நினைத்துக்கூட பார்க்கவில்லை. மீண்டும் அவர்கள் பழைய தங்களுடைய மீன் பிடிக்கும் தொழிலுக்கே செல்லுவதைப் பார்க்கிறோம். அப்படியே அவர்கள் இயேசுவின் சரீரத்தை மறைத்து வைத்திருந்தால், அவருக்காக எப்படி சாகத்துணிவார்கள். இயேசுவின் 12 சீஷர்களில் 10 பேர் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார்கள் என்பதை சரித்திரத்தின் வாயிலாக அறியலாம். யோவானை எண்ணெய் சட்டியில் போட்டு பொரித்தும் சாகாமையால், அவர் பத்மு தீவுக்கு கடத்தப்பட்டு, முதிர்வயதாகி இறந்தார் என அறியலாம். மற்றபடி யூதாசின் நிலைமை நமக்கு நன்றாகத் தெரியும்.

ஒருவேளை இயேசுவின் சரீரத்தை ரோம, யூத அதிகாரிகள் மறைத்து வைத்தி ருந்தால், இயேசுவின் சீஷர்கள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்று அறிவித்தவுடன் அவர்கள் அவரது சரீரத்தை காட்டி யிருப்பார்கள் அல்லவா?

**▶▶ உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தமது சீஷர்கள் மற்றும் மற்றவர்களுக்கு காட்சிக் கொடுப்பதைப் பார்க்கிறோம்.**

இயேசு, தாம் உயிர்த்தெழுந்தப்பின் சுமார் ஆறு வாரக்காலங்கள் தமது சீஷர்கள் மற்றும் மற்றவர்களுக்கு காட்சி அளித்தார் என்பதை நாம் வேதாகமத்தில் காண்கிறோம். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து மகதலேனா மரியாளுக்கும், பேதுரு, யாக்கோபுக்கும், பின்னர் 12 பேருக்கும், பின்னர் தோமா மற்றும் 500 பேருக்கும் காட்சியளித்தார் என வேதாகமம் சொல்வதைப் பார்க்கிறோம். தோமா கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசிக்காவிட்டாலும், பின் அவரைத் தொட்டுப் பார்த்து விசுவாசிப்பதைப் பார்க்கிறோம். 1கொரி.15:6-ல் புனித பவுல் தெளிவாக எழுதுகிறார், உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து "கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப் பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்" என்பதாக.

ஆம், இன்று உலகமெங்கிலும் இயேசுவுக்கு சாட்சிகள் உண்டு. கிறிஸ்தவம் உலகிலேயே அதிகமான மக்களால் பின்பற்றக் கூடிய சமயமாகக் காணப்படுகிறது. Christianity is the fastest growing religion in the world.

## 2 இரண்டாவதாக, இயேசுவின் உயிர்த்தெழுதல் தனிச்சிறப்பு வாய்ந்தது: The resurrection of Jesus is an unique event.

உலகில் எத்தனையோ மக்கள் இறந்தவர்கள் உயிர்த்தெழுந்தார்கள் என அறிகிறோம். இயேசுகிறிஸ்து மனிதனாக இந்த உலகில் ஊழியம் செய்து வந்த காலக்கட்டத்தில்கூட மூன்று பேரை உயிரோடெழுப்பியதாக வேதாகமத்தில் பார்க்கிறோம். அதாவது யவீருவின் மகள், நாயீனூர் விதவை மகன், லாசரு ஆகியோர்தான் இவர்கள். இம்மூவரின் உயிர்த்தெழுதலைவிட கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எங்ஙனம் சிறப்புத்தன்மை வாய்ந்தது என்பதை நாம் அறிய வேண்டும். அதில்தான் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் தனிச்சிறப்புத் தன்மை அடங்கியுள்ளது.

**▶▶ ஆம், உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஒரு உயிர்ப்பிக்கப்பட்ட மாமிசமுடைய மனிதருமல்ல; அதே சமயம் இறந்துபோன ஒரு ஆவியும் அல்ல: The risen Lord is neither a corpse, not a ghost.**

மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த மனிதனுக்கு மறுபடியும் சாவு உண்டு. கிறிஸ்துவால் உயிர்ப்பிக்கப்பட்ட யவீருவின் மகள், நாயீனூர் விதவை மகன் மற்றும் லாசரு ஆகியோர் இன்று உயிருடன் காணப்படவில்லை. அவர்கள் எப்போதோ மீண்டும் இறந்து விட்டனர். ஆனால் யோவான் தமது வெளிப்படுத்தல் புத்தகம் 1:18-ல் மிகத் தெளிவாக கிறிஸ்துவின் கூற்றாக வெளிப்படுத்துகிறார். - "மரித்தேன்,

ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்," என்பதாக. ஆம், மரித்துயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவுக்கு இனி மரணமே கிடையாது.

மேலும், உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை வெறும் உயிர்த்தெழுந்த ஆவி என்றும் கூற முடியாது. ஏனென்றால் ஆவிக்கு பொதுவாக உருவம் கிடையாது; ஆவிகளைப் பகலிலே பார்க்கவும் முடியாது என்பர். ஆனால் உயிர்தெழுந்த கிறிஸ்துவை தோமா தொட்டுப் பார்க்கிறார்; அவர் பகலிலே காட்சிக் கொடுத்ததை வேதாகமத்திலே பார்க்கிறோம்.

**▶▶ உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து இறந்தும் வாழ்பவர்கள் போலன்று:**

நமது தேசத்தில் மகாத்மா காந்தி, அன்னை தெரசா மற்றும் அநேக பெரிய வர்கள் இவ்வுலகை விட்டு மரித்தப்பின்பும், இன்னும் அவர்களை 'இறந்தும் வாழ்ப வர்கள்' எனக் கூறுவது வழக்கம். ஆனால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அப்படிப் பட்ட 'இறந்தும் வாழ்பவர்கள் கூற்றுக்கு ஒப்பாகாது. ஏனெனில் உயிர்த்தெழுந்த கிறிஸ்து மற்ற உயிர்த்தெழுதலைப் போலல் லாது, முற்றிலும் ஒரு மாறுபட்ட தன்மை யைப் பெறுகிறார். தமது உயிர்த்தெழுதல் மூலம் கிறிஸ்து ஒரு நிலைமாற்ற மடைந்த, உருமாற்றமடைந்த, மகிமை யடைந்த சரீரத்தைப் பெறுகிறார். The resurrection gave Him a transformed, transfigured and glorified body. பவுல் (1கொரி.15:42-54)-ல் இந்த தனித்தன்மை வாய்ந்த கிறிஸ்துவின் சரீரத்தைப் பற்றிக் கூறுவதைப் பார்க்கிறோம். அது (1 பேதுரு 3:18, அப். 13:34, 2 கொரி.5: 16) மாம்சமும் இரத்தமும் இல்லாத சரீரம், வெறும் ஆவி அல்லது ஜென்ம சரீரமல்ல; அது ஆவிக்குரிய சரீரம், வல்லமையுள்ள சரீரம். ஆம்! கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்துவுக்கு புது வல்லமையையும், அழியாமையையும் நல்குகிறதைக் காண்கிறோம். நாமும் கிறிஸ்துவுக்குள் மரித்து மீண்டும் அவருடைய நாளில் உயிர்த்தெழும்போது அப்படிப்பட்ட சரீரத்தைத்தான் பெறுவோம் என்பதற்கு எந்தவித சந்தேகமுமில்லை.

## 3 மூன்றாவதாக, இயேசுவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் என்ன?

கிறிஸ்து உயிர்த்தெழுந்து இரண்டாயிரம் ஆண்டுகளாகியும், அவ்வுயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் என்ன என அறிதல் அவசியம். ஆம், கிறிஸ்துவின் உயிர்த் தெழுதல் கிறிஸ்தவத்தின் உயிர்நாடி!

கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் நாம் பாவத்தில் வாழ்ந்திருப்போம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் தனிச்சிறப்புத் தன்மைக்குக் காரணம், நமது ஆண்டவர் பாவமன்னிப்பு தருபவர், பரலோகத்தில் நம்மை வாழ்விக்கிறவர். பாவமன்னிப்பு கிறிஸ்து தரும் மாபெரும் ஈவு. அது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. இயேசு நமது பாவத்திற்கு பரிகாரமாக மரணத்தை ஏற்றுக்கொண்டு, தமது உயிர்த்தெழுதல் மூலமாக நமக்குப் புதுவாழ்வைத் தருகின்றார்.

**▶▶ கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு வல்லமையைத் தருகிறது.**

உயிர்த்தெழுந்த கிறிஸ்து தமது சீஷர் களுக்கு வல்லமையைத் தருகிறார். மிகச்சாதாரணமான கல்வியறிவற்ற, பயந்த சுபாவமுள்ள அவர்கள் பிற்காலத் தில் அவருடைய வல்லமையால்

உலகத்தைக் கலக்குகிறவர்களானார்கள். The ordinary became extra-ordinary.

ஆம், உயிர்த்தெழுந்த கிறிஸ்து பிரதான கட்டளையைத் தருகிறார். "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்கிறார். இப்பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு இயேசுகிறிஸ்து கொடுத்துள்ள மிக சிறப்பான வாக்குத்தத்தம் – "இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத். 28:19–20) என்கிறார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை அறிவிப்பதிலே நமது பங்கு என்ன? கிறிஸ்துவின் வல்லமையைப் பெற்றவர்கள் நிச்சயமாக கிறிஸ்துவை அறிவிப்பார்கள்.

**▸▸ கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நித்திய இராஜ்யத்தைக் குறித்த நம்பிக்கையை நமக்கு உறுதிப்படுத்துகிறது:**

கொலோசெயர் 3:1–2 வசனங்களில், "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" என்று எழுதியிருப்பதைக் காணலாம். Christianity is primarily a futuristic religion. நமது கிறிஸ்தவ ஜீவியம் இதோடு முடிவடைவதில்லை. எனவே இவ்வுலகப் பாடுகளை நித்திய ராஜ்ய கண்ணோட்டத்தோடு அணுகி, நாம் நித்திய ராஜ்ய சுதந்திரவாளிகளாவோமாக! ஆமென்.

## ஆலய பிரதிஷ்டை – மத்தியப் பிரதேசம்



அடையாறு பிராந்தியம், திருவான்மியூர் பணி மாவட்டத்தைச் சார்ந்த டாக்டர் B. ப்ரீத்தா (சென்னை மைலாப்பூர்) அவர்கள் சார்பில் ஓர் ஆலயம் மத்தியப் பிரதேசத்திலுள்ள சிரியா பணித்தளத்தில் பாமன்பூரி என்ற இடத்தில் கட்டி முடிக்கப்பட்டு 23.02.2020 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. டாக்டர் குடும்பத்தின் சார்பில் திருமதி. A.S. சுசீலா, டாக்டர். ரூத் விஜித்தா மற்றும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பொறுப்பாளர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மிஷனெரி திரு. வில்சன், திருமதி. ரஸ்மித்தா வில்சன் அன்புடன் எங்களை வரவேற்று மிஷனெரி பாரத்தை தங்கள் சாட்சி மூலம் கூறினார்கள். மிஷனெரி தரிசன பணித்தள விஜயத்தின் மூலம் இந்த டாக்டர் குடும்பம் மேலும் 2 சபைகள் கட்டி கொடுக்க வாக்கு கொடுத்துள்ளார்கள். இக்குடும்பத்தினரை நமது ஜெபத்தில் தாங்கிக் கொள்வோம். ஜெபத்துடனும் தரிசனத்துடனும் திரும்பி வர தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– A. திரு. தேவதங்கம் – கௌரவ விரிவுப்பணி பிராந்திய செயலர், அடையாறு.

# தேசிய திட்டக்கூடுகை 2020-ன் அறிக்கை



ஆயத்த திட்டக்கூடுகை - செகந்திராபாத்



ஆயத்த திட்டக்கூடுகை - கொல்கத்தா

"திட்டமிட தவறுவது தோல்வியுற திட்டமிடுது" போலாகும் என்பது ஒரு அர்த்தம் நிறைந்த கருத்தாகும். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களை ஆரம்பக் காலங்களிலிருந்தே திட்டமிட்டுச் செயல்படுத்த தேவன் கிருபை செய்துள்ளார். தேவ ஒத்தாசையால் கடந்த 2020 பிப்ரவரி 8-9 தேதிகளில் சென்னையிலுள்ள குருகுலம் இறையியல் கல்லூரியில் வைத்து தேசிய திட்டக்கூடுகை இனிதே நடைபெற்றது.

இக்குடுகைக்கு முன்பாக, மூன்று இடங்களில் ஆயத்த திட்டக்கூடுகைகள் மிகச்சிறப்பாக நடைபெற்றன. அதாவது தெலுங்கானா மாநிலத்திலுள்ள நமது ஊழிய பொருப்பாளர்களுக்கு செகந்திரா பாத்தில் 2020 ஜனவரி 11-ம் தேதியும், வட இந்திய பொருப்பாளர்களுக்காக கொல்கத்தாவில் 18-ம் தேதியும், ஆந்திரப் பிரதேசத்திற்காக எலுரில் 25-ம் தேதியும் மிகச்சிறப்பாக ஆயத்த திட்டக்கூடுகைகள் நடத்தப்பட்டன. இக்கூடுகைகளில் முன்மொழிந்த ஊழியத் திட்டத் தீர்மானங்கள், தேசிய திட்டக்கூடுகைக்கு பரிந்துரைக்கப்பட்டன. இந்த திட்டக்கூடுகைகளின் கருப் பொருள் யோசுவா 22:5-ஐ மையமாகக் கொண்ட 'சாவதானமாயிருங்கள்' என்கிற வார்த்தையாகும். அத்துடன் அப்போஸ்தலர் 20:20-ஐ அடிப்படை யாகக் கொண்ட "வீடுகள் தோறும்" என்கிற செயல்திட்டத்தையும் மையமாக வைத்து இக்கூடுகைகள் நடத்தப்பட்டன.



ஆயத்த திட்டக்கூடுகை - எலுரு



தேசிய திட்டக்கூடுகை - சென்னை

பின்னர் தேசியத் திட்டக்கூடுகையை முன்னிட்டு நமது தேசமெங்கிலுமிருந்து நமது மிஷனெரிகளும், ஊழியப் பொருப்பாளர்களும் சென்னையில் கூடிவந்தனர். நமது இயக்கத்தின் தலைவர் C. ரெஜினால்ட் அவர்கள் இந்த தேசியக் கூடுகையின் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைத் தாங்கினார்கள். பெங்களூரிலுள்ள SAIACS இறையியல் கல்லூரியின் முதல்வர் Dr. பிரபுசிங் அவர்கள் தேவவார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள். அவர்களது செய்தி அக்கூட்டத்தில் கலந்துக்கொண்ட அனைவருக்கும், இவ்வூழியத்தோடுள்ள உறவை மேம்படுத்த ஊக்கம் அளிப்பதாக அமைந்தது. பொதுச்செயலாளர் சகோ. சுதர்சன் தாமஸ் அவர்களின் அறிக்கையைத் தொடர்ந்து, பொருளாளர், மற்றும் துறைசார்ந்த பொருப்பாளர்களும், மிஷனெரிகளும் தங்களது ஊழிய அறிக்கைகளைப் பகிர்ந்து கொள்ள, அவற்றின் அடிப்படையில் கலந்துக்கொண்டோர் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டு கலந்துரையாடினர்.

இத்தேசியத்திட்டக் கூடுகையின் 2-ம் நாள், ஞாயிறன்று திருவிருந்து ஆராதனை மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, குழுகலந்துரையாடல்களில் கூறப்பட்டக் கருத்துக்கள் அக்கூடுகையில் முன்மொழியப்பட்டு தீர்மானம் செய்ய பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. இக்கூடுகையின் நிறைவு செய்தியை பொதுச்செயலாளர் அவர்கள் அளிக்க, அதைத் தொடர்ந்து நமது இயக்கத்தின் உபதலைவர் சகோ. ஜேம்ஸ் தர்மபாலன் அவர்கள் ஜெபிக்க, தலைவரின் முடிவுரையோடு இக்கூடுகை மிகச்சிறப்பாக முடிந்தது.

இக்கூடுகையில் கலந்துக் கொண்ட அனைவரும் புதிய உற்சாகத்துடனும், ஏகசிந்தையோடும், தரிசனத்துடனும் ஒருவரோடொருவர் அன்பை பகிர்ந்துகொண்டு விடைபெற்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தேவனுக்கே மகிமை!

– அருள்திரு. K. பிரபாகர சாரதி, செயலர் – தலைமை செயலகம்.

## பணித்தள விஜயமும், ஆலய பிரதிஷ்டையும்

### குஜராத் மாநிலம்



தேவ கிருபையால், குஜராத் மாநிலம், ராணிப்பூர் கிராமத்தில், 14.02.2020 அன்று, புதிதாக கட்டப்பட்ட நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆலயம், தேவநாம மகிமைக்காக மங்கலபடைப்பு செய்யப்பட்டது. திருமதி. கிறிஸ்டி ராஜன் மற்றும் திரு. விமல்ராஜ் ராஜன் அவர்கள் குடும்பத்தினரால் ( N.R.Sweet, அங்கோலா ) Late திரு. ராஜன் அவர்கள் நினைவாக நன்கொடை அளிக்கப்பட்டு, கட்டப்பட்டுள்ள தேவாலயம் இது. குடும்பத்தினர் மற்றும் நண்பர்களாக 25 பேர் இப்பிரதிஷ்டை வைபவத்தில் பங்குப் பெற்றோம். தேவனுக்கே மகிமை!

– M. யோகராஜ், கௌரவ விரிவுப்பணி பிராந்திய செயலர், அம்பத்தூர், சென்னை.




கிறிஸ்து தம்மை உலகுக்கு அறிமுகம் செய்ய அன்றும் இன்றும் பயன்படுத்தும் ஒப்பற்ற தொடர்புச் சாதனம் **கிறிஸ்துவோடு புதிய ஒப்பந்தம் செய்துகொண்டு வாழ்க்கையில் திருப்பம் கண்ட மனிதர்களே.** – வில்லியம் பார்க்கலே

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இயேசுவைப் பற்றி தங்கள் வாழ்நாளில் ஒருமுறையேனும் கேள்விப்பட்டிராத இந்தியருக்கு நேரடியாகச் சென்று இயேசுவை அறிவிக்கும் மகத்தான பணியை நிறைவேற்றி வரும் ஒரு சுதேச உள்நாட்டு சுவிசேஷப்பணி இயக்கம்.

நம் நாட்டில் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட நிலையிலிருக்கும் மக்களைச் சந்தித்து, நற்செய்தி அறிவிப்பதன்மூலம் அவர்கள் கிறிஸ்துவோடு புதிய ஒப்பந்தம் செய்துகொண்டு வாழ்க்கையில் திருப்பம் காண்கின்றனர். இப்படி திருப்பம் கண்டு விசுவாசத்தில் முதிர்ச்சிபெற்றவர்களில் சிலரை திருச்சபையில் மூப்பர்களாகவும், ஊழிய வாஞ்சையுள்ள சிலரை தன்னார்வ ஊழியர்களாவும், ஊழிய அழைப்புப் பெற்றவர்களைச் சுதேச ஊழியர்களாகவும் நியமித்து வருகிறோம். இவர்களுக்கு கிரமமாக பயிற்சி அளிக்கப்பட்டு, நமது மிஷனெரிகளுடன் நற்செய்திப் பணிக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்தச் சுதேச ஊழியர்கள் தங்கள் சொந்த மண்ணின் மைந்தர்கள்; ஆகையால் அறியப்படாத கிராமங்களுக்கு நமது மிஷனெரிகளை அழைத்துச் செல்வதிலும், மிஷனெரிகள் விரைவில் உள்ளூர் மொழிகளைக் கற்றுக்கொள்வதிலும் உறுதுணையாக இருந்து செயல்படுகின்றனர். தங்கள் சமுதாயத்தினர் வாழும் கிராமங்களின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் சென்று நற்செய்தியைப் பறைசாற்றியும், ஆராதனைக் குழுக்களை நடத்தியும், விசுவாசிகளை உற்சாகப்படுத்தியும் வருகின்றனர். சிலர் பிற மாநிலங்களில் சுதேச ஊழியராகப் பணிசெய்யவும் புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர்.

கிறிஸ்துவை அறியாமல் பாவத்தின் அடிமைத்தனத்திலும், சமுதாயத்தின் தீய கலாச்சார நடைமுறைகளிலும் கட்டப்பட்டிருக்கிற மக்கள் மத்தியிலிருந்து தேவன் இவர்களைத் தெரிந்தெடுத்து தமது உன்னதமான பணியைச் செய்ய நியமித்திருக்கும்போது, இவர்களை நமது உற்சாகமான ஜெபத்தாலும் ஈகையாலும் ஆதரிப்பது நமது கடமை.

**“...உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக் கடவன்”** என்று பவுல் கலாத்திய திருச்சபையினருக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே.

ஆகவே நற்செய்தி ஊழியத்தில் முழுமூச்சுடன் செயல்படும் இவர்களுடைய அடிப்படை தேவைகளைச் சந்திக்க வேண்டுமென்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு முடிவெடுத்து, அதற்கென்று ஒரு வரையறை அமைத்து, செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு மாதந்தோறும் ரூ. 5,500/- ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2020 - 21 ஆம் நிதியாண்டின் **சுதேச ஊழியர்களின் ஊதியத் தேவை ரூ. 9,00,00,000/-** என்று இயக்கமாக திட்டமிட்டுள்ளோம். மேலும், மாதந்தோறும் புதிதாக சுதேச ஊழியர்கள் இவ்வியக்கத்தில் இணைந்து வருகிறார்கள். இதுவரை 1332 சுதேச ஊழியர்கள் நம் இயக்கத்தில் பணிசெய்து வருகிறார்கள். இப்புதிய நிதியாண்டில் ஊழிய வளர்ச்சியாக மேலும் புதிதாக 100 சுதேச ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க திட்டமிட்டுள்ளோம்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு எனும் மிஷனெரி குடும்பத்தின் பல்வேறு ஊழிய தேவைகளுக்கென்று நீங்கள் உதாரத்துவமாகக் கொடுத்து உதவி வருகிறீர்கள்; தேவனைத் துதிக்கிறோம். இவர்களுடைய மாதாந்திர ஊதியத் தொகை பொது நிதியிலிருந்தே செலவிடப்படுவதால் ஊழியத்தேவைகளைச் சந்திப்பதில் சற்று சிரமம் ஏற்படுகிறது. எனவே இம்மாபெரும் தேவையைச் சந்திக்க நீங்கள் தனி நபராக, குடும்பமாக, ஜெபக்குழுக்களாக, திருச்சபையாக முன்வருவீர்களானால் பேருதவியாக இருக்கும். இத்தேவைக்கென்று ஜெபித்து நிதியுதவி அளித்து ஆதரிக்க முன்வாருங்கள்; கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்கள் குடும்பங்களில் தழைத்தோங்கட்டும்.

நம் இயக்கத்தில் பணிசெய்து கொண்டிருக்கும் 1332 சுதேச ஊழியர்களுக்காகவும், அவர்கள் குடும்பத்தினருக்காகவும் ஜெபியுங்கள். இவர்கள் கிறிஸ்துவின் நற்கந்தங்களாய் திகழ்ந்து, கிறிஸ்துவுக்காக சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்து அநேகரைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தவும், இவர்களுடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

**மேலும் கூடுதல் விபரமறிய விரும்பினால் உங்கள் அருகில் வாழும் முன்னேற்றப்பணி செயலரையோ, கௌரவ முன்னேற்றப்பணி செயலரையோ அல்லது ஜெபக்குழுத் தலைவர்களையோ தொடர்பு கொள்ள பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.** - நிதித்துறை

---

**குடும்பக் கூடுகை 2020**

**கன்னியாகுமரி மாவட்டம்**

நாள்: 01.05.2020 வெள்ளிகிழமை,

நேரம்: காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை,

இடம்: மகளீர் கிறிஸ்தவ கல்லூரி (W.C.C) நாகர்கோவில்.

வாலிபர், இளம் வாலிபர், சிறுவர்கள் தனித்தனி கூடுகைகள் உண்டு.

காலை, மதிய உணவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தொடர்பு: 94451 19789.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



கன்னியாகுமரி மாவட்டத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு – ஸ்கேன் பணி ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலிருந்தே அழகிய மண்டபம் மற்றும் மார்த்தாண்டம் பகுதிகளில் திறம்பட செயல்பட்டவர் திரு. ஜான் டேவிட் அவர்கள், பணித்தள விஜயம் ஆண்டுதோறும் குடும்பமாக தவறாமல் செல்வ தோடு, புதிய நபர்களையும் அழைத்து செல்வார்கள். பணித் தளத்தில் தாங்கள் பெற்ற அனுபவங்களை குமரி மாவட்டத் தின் பல திருச்சபைகளில், பகிர்ந்து கொள்வார்கள். இவர்கள் 18.02.2020 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர்கள் விட்டுச் சென்ற மனைவி, 3 பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளை தேவன் ஆற்றி தேற்றி பெலப்படுத்த ஜெபிப்போம்.



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் நெல்லை மத்திய பிராந்தி யத்தைச் சேர்ந்த திருமதி. ரத்னா ஜூலியஸ் (வயது 86) 30.11.2019 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். நெல்லைத் திருமண்டலத்தில் பணியாற்றிய காலஞ்சென்ற கனம். ஜூலியஸ் ஐயரவர்களின் துணைவியாரான இவர்கள், ஆசிரியையாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிகளில் மிகவும் ஈடுபாடு கொண்ட இவர்கள், மிஷனெரிப் பணிக்கென காணிக்கை சேகரிக்கும் ஊழியத்தை ஆர்வமுடன் செய்தவர்கள். ஊழியத்திற் காக ஜெபிப்பதிலும், கொடுப்பதிலும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவர்கள். தான் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இவ்வூழியத்தை அறிமுகம் செய்து வைப்பதிலும் புதிய பங்காளர்களை ஊழியத்தில் ஈடுபடுத்துவதிலும் தவறாது உழைத்தவர்கள். அன்னாரது அர்ப்பணிப்புள்ள வாழ்க்கைக்காக ஆண்டவரைத் துதிக்கிறோம். இவர்கள் விட்டுச்சென்ற குடும்பத்தாரை ஜெபத்தில் தாங்கிக் கொள்வோம்.



திரு. M. செல்லத்துரை அவர்கள் 1969-ம் ஆண்டு முதல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவுடன் இணைந்து கூட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் அதனை பொறுபேற்று நடத்துவதிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வந்தார்கள். காடு, மேடுகள் சென்று மக்களை ஆண்டவருக்குள் நடத்தினார்கள். ஊழியர்களை அன்புடன் விசாரித்து உபசரித்து அவர்களை ஊக்குவித்தார்கள். அரசு பள்ளியில் பணிபுரிந்தாலும் தனது மாணவர்களுக்கு விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்தி புதிய ஏற்பாடு கொடுப்பது இவர்களது வழக்கம். இதனால் குன்னத்தூரில் ஒரு தேவாலாயம் உருவாயிற்று. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழுஇரவு ஜெபம், வாரந்தோறும் ஜெபம், புதன்கிழமை ஜெபம், மூன்று நாள் உபவாச ஜெபம் போன்ற வற்றை நடத்தினார்கள். அநேகரை ஜெபக்குழு தலைவர்களாகவும், மிஷனெரிகளாகவும்

உருவாக்கினார்கள். இவர்களது மகள் பிரின்சஸ் நகோமி விக்டர், ஜார்க்கண்ட் மாநிலம் பந்தேனியிலும், மகன் பிரின்ஸ் ஜோசப் வேதாகம மொழிபெயர்ப்பாளராக குஜராத்தி லும் பணி செய்கின்றனர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆலயம் கட்டுவதற்கும், பள்ளி கட்டிடம் கட்டுவதற்கும், மருத்துவ உதவிக்கும், பிள்ளைகளை தாங்குவதற்கும் தேவன் இவர்களுக்கு கிருபை பாராட்டினார். மற்றும் தனது வீடு கட்டும் நேரத்தி லும் ஓய்வு பெற்ற நிலுவை தொகையிலிருந்து உதாரத்துவமாக ஊழியத்திற்கெனக் கொடுத்தார்கள். இறுதி மூச்சுவரை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தலைவர் என்று தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை உண்மையுடனும், சுகவீனத்தின் மத்தியிலும் பிப்ரவரி மாதம் வரை காணிக்கையை சேகரித்து அனுப்பினார்கள். மார்ச் மாதத்திற்கும் ரசீது போட்டு வைத்துள்ளார்கள். இப்படி உண்மையும், உத்தமுமாய் ஊழியம் செய்த இவர்கள் சில நாட்கள் சுகவீனமாய் இருந்து தனது 78-வது வயதில் 09.03.2020 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அண்ணனின் தியாகமான, அர்ப்பணமுள்ள வாழ்க்கை அநேகருக்கு இன்றைக்கும் சவாலாக இருக்கிறது. இதற்காக தேவனைத் துதிக்கிறோம். இவர்களது மனைவி மற்றும் 4 பிள்ளைகளின் குடும்பத்தினரை தேவன் ஆற்றி தேற்றி அரவணைத்துக்கொள்ள நாம் ஜெபிப்போம்.

– விரிவுப்பணி செயலர் – நெல்லை.

---

## பணித்தள விஜயமும், பத்தல்காவ் சிறுமியர் விடுதி பிரதிஷ்டை வைபவமும்



சென்னை கே. கே. நகர் பிராந்தியத்திலிருந்து 13 பேராகச் சென்று சத்தீஸ்கட் மாநிலம் பத்தல்காவ் பணித்தளத்திலுள்ள சிறுமியர் விடுதியை பிரதிஷ்டை செய்ய ஆண்டவர் உதவி செய்தார். சிறுமியர்களின் பெற்றோர் மற்றும் விசுவாசிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள். பின்னர் அருகிலுள்ள CDC-க்கு சென்று, ஊழியர்களோடு இணைந்து, அவர்களின் தேவைகளை கேட்டறிந்து பாரத்தோடு ஜெபித்தோம். Rev. தாமஸ் அண்ணன் விடுதியின் தேவைகளை குறித்தும், சத்தீஸ்கட் மாநில இன்றைய சூழ்நிலைகளை குறித்தும் மிகவும் கண்ணீரோடு பகிர்ந்துகொண்டார்கள். தொடர்ந்து 23.02.2020 ஞாயிறு சீத்தாபூர் ஆலய விசுவாசிகளோடு இணைந்து தேவனை ஆராதித்தோம். பின் ரெகுநாத்பூரிலுள்ள சிறுமியர் விடுதியை பார்வையிட்டு அவர்களோடு சற்றுநேரம் செலவிட்டு, ஜெபித்து திரும்பினோம். மாலையில் அம்பிகாபூர் பணித்தளத்திலுள்ள பகத்பரா ஆலய விசுவாசிகளோடு இணைந்து எங்களது சாட்சிகளை பகிர்ந்து கொண்டோம். அந்த பிராந்தியத்திலுள்ள ஊழியர்களின் அர்ப்பணத்தையும், விசுவாசிகளின் சாட்சிகளை கேட்டும், அங்குள்ள அத்தியாவசிய தேவைகளை கேட்டறிந்தும் மிகுந்த ஜெபத்தோடும், பாரத்தோடும், சவாலோடும் சென்னை திரும்பினோம்.

– திரு. ஆஸ்டின், கௌரவ பிராந்திய விரிவுப்பணி செயலர், சென்னை கே.கே. நகர்.

# பதால்காதி திருச்சபை சரித்திரம்

அருள்திரு. எல். மாசிலாமணி



பதால்காதி நடுத்தர கிராமம், குஜராத் மாநிலம், டாங் மாவட்டம். டாங் தாலுகாவில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் 178 குடும்பங்களும் 813 மக்களும் உள்ளனர். பதால்காதி கிராமத்தின் பரப்பு 8 சதுர கிலோ மீட்டர். அருகிலுள்ள நகரம் அஹ்வா. இது 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பதால்காதி கிராமத்தில் 4% காடு. 99% மக்கள் பழங்குடியினர். 1% மக்கள் பொதுப்பிரிவினர்.

## ஆரம்பம்

பைப்பல்தகாத் கிராமத்தில் 08.05.1981-ல் அருள்திரு. மாசிலாமணி குடும்பத்தினரால் அஹ்வா பணித்தளம் திறக்கப்பட்டது. 1985-ல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் வாயிலாக சிக்லி திருச்சபை உதயமானது. பதால்காதி திருச்சபை உருவாவதற்கு சிக்லி கிராமமே காரண மாயிற்று என்று கூறமுடியும். தன்னுடைய நோயிலிருந்து சுகம் பெறுவதற்காக சிக்லி ஆலயத்திற்குச் சென்ற முதல் நபர் ஜிப்ருபேன். பதால்காதி கிராம வாசியான இவர் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பின்பற்றி வந்தார். இவர் 2004-ல் மரணமடைந்தார். தன்னுடைய மகன் சுகம் பெறுவதற்காக இந்த ஆலயத் திற்கு வந்த இரண்டாவது நபர் ஜானுபாய். சித்தார்பாய் பார்புயா ஆகிய நோயுற்றோர் குணமடைவதில் ஜானுபாய் முக்கியப் பங்காற்றினார். பதால்காதி கிராமத்தில் ஆலயம் கட்டப்படும் வரையில் ஜானுபாய் மக்களை சிக்லி ஆலயத்திற்கு வழி நடத்திக் கொண்டிருந்தார்.

**ஜானுபாயால் சிக்லி ஆலயத்திற்கு வழி நடத்தப்பட்ட சக்கரம்பாய் தன்னுடைய சாட்சியை விவரிக்கின்றார்:**

“என் மனைவியின் வயிற்றில் அடிக்கடி வலி ஏற்பட்டது. ஆலயத்திற்கு வந்து ஜெபிக்கு மாறு ஜானுபாய் எனக்கு ஆலோசனை கூறினார். ஆனால் மந்திரவாதிகளை நான் நாடினேன், பலியிடுவதற்காக கோழிகளையும் தேங்காய்களையும் கொண்டுவருமாறு மந்திரவாதி என்னிடம் கூறினார். அவ்வாறு நான் செய்யாமல் சிக்லி ஆலயத்திற்குச் சென்றேன். திருச்சபை மூப்பர் ஜதாரியாபாய் எனது மனைவிக்காக ஜெபித்தார். பதினைந்து நாட்களில் என் மனைவி பூரண சுகம் பெற்றார். எனவே, தோலியம்பார் கிராமத்தில் திருமுழுக்கின் மூலமாக எங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டோம்.”

இவ்வாறு ஜானுபாயின் ஜெபத்தின் வழியாகவோ அல்லது சிக்லி ஆலயத்திற்குச் செல்வதின் மூலமாகவோ சுகம் பெற்றோரின் எண்ணிக்கை 15 என்று உயர்ந்தது. சுகம் பெறுவதற்காக சிலர் லாவ்சாலி மாரநாதா ஆலயத்திற்குச் சென்றனர். தோலியம்பார் கிராமத்தில் 20 பேர் திருமுழுக்கு பெற்றனர். சுதேச ஊழியர்களான நானுபாய், ஜிவாலியாபாய் ஆகியோர் வீடுகளைச் சந்தித்து, நற்செய்தி அறிவித்து, விசுவாசிகளை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினர். 1996-ல் இருந்து இரவு கூடுகைகள் ஒழுங்காக நடைபெற்றன. பதால்காதி கிராமத்தில் திங்கட்கிழமை தோறும் கூடுகைகள் நடத்துவதற்கு நானுபாய் நியமிக்கப்பட்டார். இந்த கூடுகை கங்காபாயின் இல்லத்தில் நடைபெற்றது. தற்காலிக ஆலயம் கட்டப்படும் வரையில் இரவுக் கூடுகைகளை சுதேச ஊழியர்கள் நடத்தினர். 2003-ம் ஆண்டில் தற்காலிக குடிசை ஆலயம் கட்டப்படும் வரையில் இரவு கூடுகைகள் நடைபெற்றன.

## ஆலய வளர்ச்சி

90 பேர் விசுவாசிகளாகத் திருச்சபையில் இணைந்தனர். 1998-ல் நடைபெற்ற உபத்திரவத்தின் விளைவாக சில குடும்பங்கள் பின் வாங்கின. மதுவுக்கு அடிமைப்பட்டிருந்ததாலும் சில குடும்பங்கள் விசுவாச வாழ்க்கையினின்று பின் வாங்கினர். 2003-ல் குடிசை ஆலயம் கங்காபாயின் நிலத்தில் கட்டப்பட்டது. ஏழு ஆண்டுகளாக வாராந்திரக் கூடுகைகள் இந்த ஆலயத்திலேயே நடைபெற்றன. இக்குடிசை ஆலயம் மிகச் சிறியதாக இருந்ததால், நிலையான ஆலயம் கட்டித்தருமாறு மிஷனெரி அருள்திரு. டி. ஆபிரகாமை விசுவாசிகள் கேட்டுக் கொண்டனர். புதிய ஆலயத்திற்கான நிலத்தை ஜானுபாய் வழங்கினார். அதன் அளவு 45 அடி நீளம், 30 அடி அகலம். விசுவாசிகள் தங்கள் உழைப்பை இலவசமாக வழங்கினர். ஆலயத்திற்குத் தேவையான மரங்களையும் விசுவாசிகள் நல்கினர். அஸ்பெஸ்டாஸ் கூரையுடன் முழுமையான ஆலயம் கட்டப்பட்டது. ஆலயக்கட்டுமானப்பணி 15.03.2008-ல் ஆரம்பிக்கப்பட்டது. 10.10.2008-ல் கட்டுமானப்பணி முடிவுற்றது. 14.10.2008-ல் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**ஆலயத்திற்கான நிலத்தை வழங்கிய ஜானுபாய் தன் சாட்சியை விவரிக்கின்றார்:**



“என் விசுவாசப்பயணத்தில் 1991 முதல் 25 ஆண்டுகளாக நிலைத்திருக்கின்றேன். ஒரு சமயம் என் மகன் சுகவீனமுற்றான்; ஜுரமும் இருந்தது. லாவ்சாலி ஆலயத்திற்குச் செல்லுமாறு காசிராம்பாய் எனக்கு ஆலோசனை வழங்கினார். அவர் கிறிஸ்தவ விசுவாசி. என் மகனின் பெயர் சாந்தாராம் ஜானு. என் மகனின் ஜுரம் நீங்குவதற்காக, மந்திரவாதிகளிடம் பூஜைகளுக்கு ரூ.50,000/- செலவழித்தேன், 10 கோழிகள் பலியிடப்பட்டன. நான் லாவ்சாலி ஆலயத்திற்குச் சென்றேன். லாவ்சாலி ஆலயத்தில் என் மகன் சுகம் பெற்றான். பின்னர் பகாடியா கிராமத்தில் நடைபெற்ற கூடுகைகளில் பங்கேற்றேன். மீண்டும் மாரநாதா ஆலயத்திற்குச் சென்றேன். குடிசை

ஆலயம் கட்டப்பட்டபோது, நான் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவால் கட்டப்பட்ட ஆலயத்திற்குச் சென்றேன். என்னுடைய எல்லா வேலைகளிலும் கர்த்தர் என்னை ஆசீர்வதித்து வருகின்றார்.”

## அற்புதங்கள்



**லக்சுபாய் & சுந்திபேன்:** “சிறு குழந்தையாயிருக்கும்போதே எங்கள் மகள் வர்ஷா பேன் ஆஸ்துமாவினால் அவதியுற்றாள். அஹ்வா மருத்துவமனையில் சிகிச்சை அளித்தும் அவள் சுகம் பெறவில்லை. பாரம்பரிய வைத்திய முறைகளான மாந்திரீகமும் மந்திரவாத முறைகளையும் பின்பற்றினேன். ஏராளமான பணம் செலவழிந்தது. ஆயினும் சுகம் கிட்டவில்லை. நான் ஜெபக்கூடுகைக்கு எங்கள் மகளை அழைத்து வந்து ஜெபித்தால், எங்கள் மகள் குணமாவாள் என்று கங்காபாய் என்னிடம் கூறினார். அவருடைய அழைப்பை ஏற்று, ஜெபக்கூடுகைக்குச் சென்றேன். அப்பொழுது அங்கே ஆலயம் இல்லை. சனிக்கிழமை கூடுகைக்குச் சென்றோம். ஐந்து நாட்களில் எங்கள் மகள் சுகம் பெற்றாள். தற்சமயம் 12-ம் வகுப்பை முடித்து, செவிலியர் படிப்பை மேற்கொண்டுள்ளாள்.”

**சுனிபாய் & நீதுபேன்:** “2002-ல் எங்கள் மகள் அமினா சிறு குழந்தையாயிருக்கும் போது, வயிற்றுப்போக்கினால் கஷ்டப்பட்டாள். அஹ்வா மருத்துவமனையில் குளுகோஸ் ஏற்றப்பட்டது. மூன்று மந்திரவாதிகளிடம் முயற்சி செய்தும் பலனில்லை. நான்கு நாட்களாக எங்கள் மகள் பால் குடிக்க முடியவில்லை. எங்கள் கிராம கிறிஸ்தவ விசுவாசியான ஜானுபாயை ஜெபத்திற்காக அழைத்தோம். இரவிலும், அதிகாலையிலும் அவர் குழந்தைக்காக ஜெபித்தார். உடனடியாகவே உடல்நிலையில் மாற்றம் ஏற்பட்டு, பின்னர் அவள் முழு சுகம் பெற்றாள். தற்சமயம் இந்த ஆலயத்தில் நான் உபதேசியாராக ஊழியம் செய்து வருகின்றேன்.”

**ரமேஷ் துல்ஜி பவார்:** “என் மகள் ரமிலா பால் குடிக்க முடியாமலும், ஜீரணம் செய்ய முடியாமலும் அவதியுற்றாள்; வாந்தியும் எடுத்தாள். மருத்துவமனை சிகிச்சையிலும் எந்தவித பலனும் இல்லை. மந்திரவாதிகளிடமும் முயற்சி செய்தேன் ஜுன்னர் கிராமத்திலுள்ள சாய்பேனிடம் ஜெபத்திற்குச் செல்லுமாறு கங்காபாய் ஆலோசனை வழங்கினார். என் குழந்தைக்காக ஜெபித்து, மூலிகை மருந்தும் வழங்கினார். நான் கிராமத்திற்குத் திரும்பிய போது, குழந்தையின் உடல் நிலையில் முன்னேற்றம் வந்தது. பின்னர் அவள் பூரண சுகம் பெற்று தன் விசுவாசத்தை அறிக்கையிட்டாள்.”

**லலிதாபேன் ராமன்பாய் காத்வி:** “காய்ச்சலினால் அவதியுற்ற என் கணவர் ஒவ்வொரு முறையும் காய்ச்சல் வரும்போது, இருமாதங்கள் தொடர்ந்து காய்ச்சல் நீடிக்கும். மருந்துகளால் குணமாகவில்லை, ஆலயத்திற்கு வந்து ஜெபித்தால் சுகமாவார் என்று அவரது பாட்டி பாருபேன் ஆலோசனை

வழங்கினார். ஜானுபாய் எங்கள் இல்லத்திற்கு வந்து, என் கணவருக்காக ஜெபித்தார். நான்கு நாட்களில் என் கணவர் சுகம் பெற்றார். எனவே, தற்போது ஆலய ஆராதனைகளில் ஒழுங்காக பங்கேற்கிறோம். அந்த நாட்களில், தற்காலிக குடிசை ஆலயத்தில் ஆராதனை நடைபெற்று வந்தது."



**சோனிபேன் மன்சுபாய் காத்வி:** திருமண மாகி ஏழு ஆண்டுகளாகியும் எங்களுக்குக் குழந்தை இல்லை. குழந்தைக்காக வெவ்வேறு இடங்களுக்குச் சென்று முயற்சி செய்தோம்; பலனில்லை. என்னுடைய உறவினரான சித்தாராபாய், ஆலயத்திற்குச் சென்று ஜெபித்தால் குழந்தைகள் பிறக்கும் என்று கூறினார். ஆலயத்திற்குச் சென்ற எங்களுக்காக அங்கிருந்த விசுவாசிகள் ஜெபித்தார்கள். கோத்மால் ஆலயத்திற்குச் சென்றோம்; என் கணவரின் உறவினர்கள் குப்டியா ஆலயத்திற்குச் சென்றனர். எங்கள் கிராமத்தில் ஆலயம் கட்டப்பட்டுள்ளதால், அந்த ஆலயத்திற்குச் செல்கின்றோம். எங்கள் மூத்த மகளின் வயது 18.

## 2006-க்குப்பின் பதால்காதி திருச்சபையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்

1) பதால்காதியில் ஆலயக்கட்டுமானத் திற்கான அஸ்திபாரம் மார்ச் 2008-ல் போடப்பட்டது.

2) பதால்காதி கிராமத்தில் 22.05.2008 முதல் 24.05.2008 வரையில் விடுமுறை வேதாகமப்பள்ளி நடைபெற்றது. 110 சிறுவர்கள் பங்கேற்றனர்.

3) 21.06.2008-ல் பெண்கள் கூடுகை பதால்காதி கிராமத்தில் நடைபெற்றது. 50 பெண்கள் பங்கு பெற்றனர். திருமதி. கமலாபேன் - குடும்பத்தில் கிறிஸ்தவ விசுவாசம் என்பதைப் பற்றிப் பேசினார்.

4) 14.10.2008-ல் பதால்காதி திருச்சபை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

5) 07.11.2008-ல் வடஇந்தியத் திருச் சபைப் பேராயர் மேதகு. அறிவர். அருள்திரு. மாளவியா, பதால்காதி திருச்சபைக்கு வந்து ஒரு கூடுகையை நடத்தினார். 500 பேருக்கும் அதிகமான விசுவாசிகள் இந்த ஆராதனையில் பங்கு பெற்றனர். ஜெபத் தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேராயர் விளக்கினார்.

6) கிறிஸ்துமஸ் கீத பவனியை முடித்து விட்டு பதால்காதி கிராமவாசி ரமேஷ் பாய் 09.12.2008-ல் வத்பாடா கிராமத் திலிருந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வரும் வழியில் ஒருபுலி அவரைப் பின்தொடர்ந்து வந்தது. இதை உணர்ந்த ரமேஷ்பாய் தனது சைக்கிளை நிறுத்தி, கர்த்தரை நோக்கிப் பாதுகாப்புக்காக ஜெபித்தார். ஜெபத் திற்குப் பதிலளித்த கர்த்தர், புலியைக் காட்டுப்பகுதிக்கு அனுப்பினார்.

7) பதால்காதி கிராமத்தில் 25.05.2009-ல் நடைபெற்ற எழுப்புதல் கூடுகையில் 500

விசுவாசிகள் பங்கு பெற்றனர். திரு. அனுப் பிலிப் இக்கூடுகையில் செய்தியளித்தார்.

8) பதால்காதி ஆலயத்தின் உபதேசியார்கள், சுதேச ஊழியர்கள், சபை மூப்பர்கள் மற்றும் சேகர குழு அங்கத்தினர்களுக்காக 12.12.2009-ல் ஒரு கூடுகை நடத்தப்பட்டது.

## திருச்சபையின் செயல்கள்

ஏப்ரல் 2013-ல் பதால்காதி திருச்சபை வட இந்தியத் திருச்சபையுடன் இணைக்கப்பட்டு, குஜராத் பேராயத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## எதிர்ப்புகள்

1998-ல் பதால்காதி திருச்சபை, குஜராத் முழுவதுமாக நடைபெற்ற எதிர்ப்பைச் சந்திக்க நேரிட்டது. மக்களுக்காக நடத்தப்பட்ட இரவு கூடுகையில் பங்கு பெற ஜதியாபாய் வந்தபோது, 1998-ல் அவர் அடிக்கப்பட்டார். அவரைத் தாக்கியவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப் பட்டது. பின்னர் இது சமாதானமாகப் பேசி தீர்க்கப்பட்டது. 2003-ல் தற்காலிக குடிசை ஆலயம் கட்டப்பட்டபோது, சுதேச ஊழியர் சந்துபாய் தாக்கப்பட்டார்.

இரண்டு குடும்பங்கள் வார்லி மக்கள் இனத்தினர், நான்கு குடும்பங்கள் பீல் இனத்தவர். 24 குடும்பங்கள் குக்னா இனத்தவர்.

சுனில்பாய் உபதேசியாராக செயல்படுகின்றார். பேருந்து செலவிற்காகப் பணம் கொடுத்தபோதும் அதை வேண்டாம் என்று தவிர்த்து விட்டார். கூடுகைகளை உபதேசியாரே நடத்துகின்றார். விசுவாசிகளின் வீடுகளைச் சந்திக்கின்றார். ஆலயக் கமிட்டி சபையின் உபதேசியாரைத் தேர்ந்தெடுக்கின்றது.

கரும்புத் தோட்டங்களில் வேலைச் செய்வதற்காக இக்கிராம மக்களில் சிலர் இடம் பெயர்கின்றனர். இக்கிராமத்தைச் சார்ந்த ரமேஷ்பாய், வத்பாடா கிராமத்தில் பகுதிநேர உபதேசியாராக இருக்கின்றார். இக்கிராம வாசியான சுரேஷ்பாய் சுதேச ஊழியராகப் பணியாற்றுகின்றார்.

ஆலயக்கமிட்டியில் 11 அங்கத்தினர்கள் உள்ளனர். அவசியப்படும்போதெல்லாம் கமிட்டி கூடுகின்றது. இக்கிராமத்தில் மொத்தம் 200 விசுவாசிகள் உள்ளனர். இவர்களில் 100 பேர் மாரநாதா சபைக்குச் செல்கின்றனர். இக்கிராம மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டு, நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. மதுப் பழக்கத்தால் விசுவாசத்திற்குள் வர பலர் தயங்குகின்றனர். சுகவீனமானோருக்கு மட்டுமே கிறிஸ்தவ விசுவாசம் தேவை என்ற கருத்தை இம்மக்கள் கொண்டுள்ளனர்.

டாங் மக்களின் கலாச்சாரம் பின்பற்றப்படுகின்றது. திருமணங்களில் டாங் கலாச்சார நடனம் முக்கியப்பங்கு வகிக்கின்றது. கிறிஸ்துமஸ் விழாக்களின்போது பாரம்பரிய நடனங்கள் செயல்படுத்தப்படுகின்றன. டாங் உணவுகளும் பரிமாறப்படுகின்றன.

## ஜெபக்குறிப்பு

ஆலயத்தின் தரைத்தளம் போடப்படவும், ஆலய வராந்தா செப்பனிடப்படவும், புதிதாக மக்கள் விசுவாசத்திற்குள் கொண்டு வரப்படவும், விசுவாசிகள் சீஷத்துவத்தில் பலப்படுத்தப்படவும் ஜெபிப்போம்.

# காலச் சுவடுகள்

## பாலைவன நீரோடைகள்






தன்னுடைய தியானமாகிய “பாலைவன நீரோடைகள்” - Streams in the Desert” தின தியான என்ற புத்தக வெளியீடு வழியாக கர்த்தருடைய ஆலோசனைகள் தேவைப்படுகின்ற லட்சக்கணக்கான மக்களை 100 ஆண்டுகளுக்கு மேலாக லெட்டி பர்ட் கௌமன் உற்சாகப்படுத்தி வருகின்றார். தங்களுடைய ஊழியமான Every Creature Crusade மூலமாக லெட்டியும், மிஷனெரிக் கணவரான சார்லஸும் ஜப்பானில் நற்செய்தியை அறிவித்து வந்தனர். இதன் விளைவாக ஓரியன்டல் மிஷனெரி சங்கம் Oriental Missionary Society என்ற மிஷனெரி ஸ்தாபனத்தையும் நிறுவினர். தன்னுடைய கணவரை இழந்த பின்னர் தன்னுடைய தியான சிந்தனைகளின் வாயிலாக உலகம் முழுவதும் உள்ள வாசகர்களைத் தூண்டி வருகின்றார்.1928-1948 காலக் கட்டத்தில் ஓரியன்டல் மிஷனெரி சங்கத்தின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றார். தாங்கள் உருவாக்கிய Every Creature Crusade ஊழியத்தை உலகம் முழுவதுமாக விரிவாக்கம் செய்ய தன் முழு முயற்சிகளையும் மேற்கொண்டார்.

இயோவா மாகாணத்திலுள்ள அஃப்டன் என்னுமிடத்தில் லெட்டி பர்ட் கௌமன் 03.03.1870-ல் பிறந்தார். சிறுவயதிலிருந்தே அவருக்கும் சார்லஸ் கௌமனுக்கும் நட்பு துளிர்விட்டது. 1889-ல் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். சிகாகோவில் உள்ள வெஸ்டர்ன் யூனியன் தந்தி அலுவலகத்தில் சார்லஸ் மேலாளராகப் பணியாற்றினார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மீது தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தினர். சிகாகோவிலுள்ள மூடி திருச்சபையில் 1894-ல் நடைபெற்ற ஆவிக்குரிய கூடுகையில் சார்லஸ் & லெட்டி பங்கேற்றனர். சிறப்பு பேச்சாளரான ஏ. பி. சிம்ப்ஸன் (கிறிஸ்டியன் & மிஷனெரி அலையன்ஸ் திருச்சபை ஸ்தாபகர்) தன்னுடைய பிரசங்கத்தில் புதிய மிஷனெரிகளுக்கான அறைகூவலை விடுவித்தார். அயல் நாட்டில் மிஷனெரி தம்பதியினராகச் செல்லுவதற்காகத் தங்களை அர்ப்பணித்து கௌமன் தம்பதியர் எழுந்து நின்றனர். பின்னர் அவர்கள் மூடி பைபிள் கல்லூரியில் பயிற்சிக்காகத் தங்களை இணைத்துக் கொண்டனர்.

பயிற்சி முடிந்ததும் இளந்தம்பதியினர் பிப்ரவரி 1901-ல் ஜப்பான் வந்தடைந்தனர். ஜப்பானிலுள்ள ஊழியரான ஜீஜி நக்கடாவுடன் சேர்ந்து ஒரு ஊழியத்தை ஆரம்பித்தனர், அங்கே இரவு கூடுகைகள் நடத்தி, வேதாகமக் கல்லூரியை ஆரம்பித்தனர். சிகாகோவில் சார்லஸுடன் பணியாற்றிய எர்னஸ்ட் கில்பர்ன் மிஷனெரியாக ஜப்பான் வந்தார்; அவரும் கௌமன் தம்பதியரும் சேர்ந்து ஓரியன்டல் மிஷனெரி சங்கம் என்ற மிஷனெரி ஸ்தாபனத்தை உருவாக்கினர். அவர்கள் ஒன்றிணைந்து Every Creature Crusade என்ற மாபெரும் அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பு ஜப்பானில் உள்ள 1,03,20,000 வீடுகளில் எழுதப்பட்ட நற்செய்தியை வழங்கினர். இராணுவ வரைபடத்தை ஜப்பான் அரசு ஆச்சரியப்பிரகாரமாக வெளியிட்டதின் விளைவாக அனைத்து வீடுகளிலும் நற்செய்தி எழுத்து வடிவத்தில் வழங்கப்பட ஏதுவாயிற்று.

Every Creature Crusade வாயிலாக ஜப்பானின் லட்சக்கணக்கான மக்களுக்கு நற்செய்தி சென்றடைந்த அதே சூழலில் சார்லஸின் உடல் நலம் மிகவும் அதிகமாக நோய்வாய்ப்பட்டது. எனவே, கௌமன் தம்பதியர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் திரும்பினர். கலிபோர்னியாவில் இருக்கையில் சார்லஸுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. எனவே, சார்லஸின் நிலை இன்னும் அதிகமாக மோசமாகியது. அடுத்த ஆறு ஆண்டுகளாக லெட்டி தன் கணவருக்குப் பணிவிடை செய்து வந்தார். மிகவும் அதிகமாக வாசிக்கும் பழக்கமுடையவர் லெட்டி, தங்கள் வீட்டில் உள்ள நூலகத்தில் உள்ள புத்தகங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவைகளிலிருந்து சில குறிப்புகளையும் கவிதைகளையும் கணவருக்கு வாசித்துக் காட்டினார். இதன் விளைவாக சார்லஸுக்கும் உடல் வேதனை குறைய உதவியாயிருந்தது; உணர்வுகளிலும் ஆவிக்குரிய போராட்டங்களிலும் சார்லஸ் பலப்படுத்தப்பட்டார். எனினும், நீண்ட போராட்டங்களுக்குப்பின் செப்டம்பர் 1924-ல் சார்லஸ் மரணமடைந்தார்.

சார்லஸின் மரணத்திற்குப்பின் அப்போஸ்தலனாகிய பவுலும் 2 கொரிந்தியர் 1:4-ல் கூறுவதுபோல, லெட்டி ஆறுதலின் உருவமாக மாறி, கர்த்தர் தனக்குக்கொடுத்த ஆறுதலைப் பிறரிடமும் பகிர்ந்து ஆறுதலை அளித்தார். கவிதைகளின் தொகுப்புடன் புத்தகங்களின் சிறுகுறிப்புகள், மேற்கோள்கள் ஆகியவற்றைத் தொகுத்து, தியான புத்தகமாக ‘‘பாலைவன நீரோடைகள்” என்ற தலைப்பில் எழுதினார். புத்தகப்பதிப்பாளருக்கு சந்தேகம் எழுந்தது. இப்புத்தகம் விற்கப்படுமா? என்ற சந்தேகம்! ஒருவேலை இதுதான் முதலும் கடைசியுமான பதிப்பாக இப்புத்தகம் இருக்கும் என்று கருதினார். எனவே, 3000 பிரதிகளே வெளியிடப்பட்டன. தனிப்பட்ட நண்பர்கள், ஊழியங்களில் தொடர்புடைய நண்பர்களுக்கு மட்டுமே இப்புத்தகம் சென்றடையும் என்று புத்தகப் பதிப்பாளர் கருதினார். பாலைவன நீரோடைகள் புத்தகத்தின் ஆசிரியர் யாரென்று தெரியாதிருந்த சூழலில், இப்புத்தகம் மாபெரும் வெற்றியாக அமைந்தது. புத்தக வெளியீட்டாளர்களுக்கு மிகவும் ஆச்சரியமான வெற்றியாக இப்புத்தகம் அமைந்தது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், பாலைவன நீரோடைகள் எவ்வாறு உருவாயிற்று என்று திருமதி. கௌமன் எழுதினார், “1373-ல் நார்விச் பகுதியைச் சார்ந்த ஜூலியன் எழுதினார், “நீ சோதிக்கப்படமாட்டாய் என்று அவர் கூறவில்லை; நீ நோயுறமாட்டாய் என்று அவர் கூறவில்லை; ஒவ்வொரு வீழ்ச்சியிலும் நீ தோற்கடிக்கப்படாமல் மீண்டும் எழுந்திருப்பாய்’’ என்று அவர் கூறினார். ‘‘பயந்து போகாமல், விசுவாசத்தோடு வீறுகொண்டெழு!” என்று அவர் கூறினார்.

வெற்றிக்கனிகளைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால், நம்முடன் போராடுபவர்களும் இத்தகைய வெற்றியைப் பெற அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். தான் பணியாற்றுகின்ற இராணுவத்துடன் இணைந்து செயல்படும் போதுதான் ஒரு இராணுவ வீரன் உறுதி பெறுகின்றான். இந்த நோக்கத்திற்காகத்தான் பாலைவன நீரோடைகள் உருவாயிற்று. இத்தியான நூலின் வாயிலாக உலகின் பல்லா யிரக்கணக்கான மக்களுடன் ஐக்கியம் ஏற்பட சாதகமாயிற்று.

கடந்த 90 ஆண்டுகளாக “பாலைவன நீரோடைகள்” அச்சிடப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அச்சிடப்படுவதிலிருந்து நிறுத்தப்படவில்லை. இதுவரை 60 லட்சம் புத்தகங்கள் விற்பனைச் செய்யப் பட்டுள்ளன. குறைந்தது 15 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்புத்தகத்திற்கு இணையான வேறொரு புத்தகம் உண்டு என்றால் அது ஆஸ்வால்டு சேம்பர் எழுதிய "My Utmost for His Highest." சிறந்த இலக்கியப் பண்புகள் இப்பாலைவன நீரோடைகள் புத்தகத்தில் இருப்பதால், இப்புத்தகத்தைத் தொடர்ந்து உரிமையுடன் வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டே இருக்கின்றனர். ஐம்பதிற் கும் மேற்பட்ட பதிப்புகளில் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. லெட்டி, தன்னுடைய மரணத்திற்கு முன்னதாக வேறு ஐந்து தியான புத்தகங்களையும் தன் கணவனின் சுய சரிதையையும் எழுதி வெளியிட்டார்.

1928-ல் கணவரின் சுயசரிதை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. ஓரியன்டல் மிஷனெரி சங்கத்தின் தலைமைப் பொறுப்பை லெட்டி ஏற்றார். இப்பொழுது இதன் பெயர் ஒன் மிஷன் சங்கம் (One Mission Society). லெட்டி, உலகின் வெவ்வேறு கண்டங்களுக்கு மிஷன் சங்கத்தின் சார்பாகப் பயணம் செய்து ஊழியத்தை நிறைவேற்றி வந்தார். 1949 வரையில் OMS ஊழியத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் தென் அமெரிக்காவின் ஊழியத்தைக் கவனித்து வந்தார். பல பத்திரிக்கை களுக்குத் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். தன்னுடைய எண்பதாவது வயதில் ‘‘எண்பதில் ஆரம்பிக்கும் வாழ்க்கை” (Life Begins at Eighty) என்ற புத்தகத்தை எழுதினார். தன்னு டைய வாழ்க்கையின் இறுதியில் பல மக்களுக்கு தன் எழுத்துக்களால் ஆறுதல், வழிநடத்துதல், ஞானம் ஆகியவற்றை வழங்கி வந்தார். தன்னுடைய 90-வது வயதில் ‘உயிர்த்தெழுந்த பண்டிகை’ நாளில் 17.04.1960-ல் லெட்டி மரணமடைந்தார்.

அவர் எழுதிய ஒரு கட்டுரையில் கீழ்க்கண்ட கவிதை காணப்பட்டது.

*உன்வேலையை முடி,*
*காலம் குறைவாக உள்ளது.*

*சூரியன் மேற்கில் இறங்கிக்*
*கொண்டிருக்கின்றது.*

*அதுவரையில், ஓய்வைப்பற்றி*
*நினைக்காதே!*

*ஓய்வு? பணியை முடித்தபின்னரே ஓய்வு.*

*அவரில் ஓய்வு என்பதே இல்லை.*

60 நாடுகளிலுள்ள 180 திருச்சபைப் பிரிவு களோடு பங்காளராக OMS தன் ஊழி யத்தை நிறைவேற்றுகின்றது. இதை நிறுவியவர்களின் ஊழியக் கனவை இவ்வூழியம், திருச்சபை நாட்டுதல், தலைவர் களுக்கான பயிற்சி, பங்காளத்துவம் ஆகியவற்றின் மூலமாக நிறைவேற்றி வரு கின்றது. 45 மொழிகளில், 14000-க்கும் மேற்பட்ட உள்ளூர் ஊழியர்களின் பங்களிப் புடன் ஆண்டுதோறும் 6000 திருச்சபைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

*– சகோ. டேவிட் பென்னி*



# மறக்க முடியாத மாமனிதர்கள்

## அருள்திரு. டாக்டர் சாமுவேல் தேவதாசன்

(1938- 2004)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் பணியாற்றி சாதனைப் படைத்தவர்களுள் ஒருவர், அருள்திரு. டாக்டர். சாமுவேல் தேவதாசன் ஆவார். இளம் வயதிலிருந்தே பக்தி வைராக்கியத்தோடு ஆண்டவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு உடையவர். ஆசிரியப்பணியைத் துறந்து மிஷனெரிப்பணிக்கு வந்த இவர், கலாச்சாரம் கடந்து பணியாற்ற அநேக மிஷனெரிகளை உருவாக்க பாரம் கொண்டு, பல ஆண்டுகளாக மிஷனெரிப்பயிற்சிக்குப் பொறுப்பாய் இருந்து பணியாற்றினார். பின்பு, இவர் பணித்தள இயக்குநராகப் பொறுப்பேற்று 'மக்கள் கூட்ட (People Movement) சுவிசேஷப்பணிக்கு' நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் வித்திட்டு பலன் கண்டவர்.

### இளமைப் பருவம்

அருள்திரு. டாக்டர். சாமுவேல் தேவதாசன், தூத்துக்குடி அருகேயுள்ள ஐயன் அடைப்பு என்ற கிராமத்தில் 1938-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் தேதி பிறந்து வளர்ந்தார். அவருடைய தந்தை திரு. வன்னியக்கண் ஒரு கிறிஸ்தவர் அல்லாதவர். தன்னுடைய வாலிப நாட்களில் கிறிஸ்துவை அவர் ஏற்றுக்கொண்டார். அவர் ஆட்டு வியாபாரம் செய்து வந்தார். இலங்கைக்கு ஆடுகளை ஏற்றுமதி செய்து, செல்வச் செழிப்பாக வாழ்ந்தவர். ஒரு நாள் இரவில் அவர் ஒரு கனவு கண்டார். அதில் அவருடைய நண்பன் பரலோகத்தில் இருப்பதையும்; 'நீ இங்கு வருவாயா?' என்ற கேள்வியை அவன் கேட்டது போன்றதுமான கனவு அது. மறுநாள் அவருக்குள் பெரிய ஒரு போராட்டம், "நான் பரலோகம் செல்வேனா? நான் பரலோகம் செல்ல என்ன செய்யவேண்டும்?" என்ற கேள்விகளுக்கு விடை காண ஒரு கிறிஸ்தவ போதகரிடம் செல்ல, அப்போதகர் அவரை வழிநடத்தியதின் வாயிலாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அது மட்டுமல்ல ஐயன் அடைப்பில் ஒரு ஆலயம் கட்ட தன்னுடைய நிலத்தைக் கொடுத்தார். அவருடைய செலவில் ஒரு ஓலை கொட்டகையைக் கட்டி, அங்கு வழிபாடும் நடத்தப்பட்டது. அந்த ஊர் மக்கள் பலர் எதிர்ப்பை தெரிவித்து அந்த ஆலயத்தை தகர்த்தனர். எனினும் மனம் தளராது போராடி, காவல் அதிகாரிகள் மற்றும் திருச் சபைத் தலைவர்களின் உதவியோடு மறு

படியும் ஆராதனை தொடரப்பட்டு, இன்று ஒரு பெரிய ஆலயம் அங்கு கட்டப்பட்டு, பல நூறுபேர் ஆண்டவரை ஆராதித்து வருகிறார்கள்.

திரு. வன்னியக்கண் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தனது பெயரை 'சாமுவேல்' என மாற்றிக் கொண்டார். அவர் திருமதி. சுந்தரம் அம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். சுந்தரம் அம்மாள் நல்ல கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்தவர்கள். தங்கம்மாள் புரத்தைச் சார்ந்த நெல்லை திருமண்டலப் பேராயர் மாமறை திரு. ஜெபராஜ் அவர்களின் உறவினர்தான் திருமதி சுந்தரம் அம்மாள். தேவன் திரு. சாமுவேல், திருமதி. சுந்தரம் அம்மாள் குடும்ப வாழ்வை ஆசீர்வதித்து 8 பிள்ளைகளைக் கொடுத்தார். முதல் 2 பிள்ளைகளும் சிறிய வயதில் இறந்து விட்டார்கள். மற்ற 6 பிள்ளைகளையும் கிறிஸ்துவை அறிகிற அறிவிலும், நெறிமுறைகளிலும் வளர்த்தனர். ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்லவும், மற்றும் வேதம் வாசித்து ஜெபிக்கும் வழக்கத்தையும் சிறு வயதி லிருந்தே அனைத்து பிள்ளைகளும் கடைப்பிடித்து வந்தனர். சகோ. சாமுவேல் தேவதாசனுக்கு இந்த ஆவிக்குரிய குடும்பச் சூழ்நிலை, பிற்காலத்தில் ஊழியத்தில் பெரிதும் உதவிற்று.

## ஆவிக்குரிய வளர்ச்சி

தன்னுடைய பள்ளிப்படிப்பை தூத்துக் குடியில் முடித்து விட்டு, வ.உ.சி கல்லூரியில் தன்னுடைய இளம்நிலை பட்டப்படிப்பை ஆரம்பித்தார். பி.ஏ.,பொருளாதாரப் பிரிவில் இணைந்துப் படித்து வந்த சகோ. தேவதாசனுக்கு அநேக நண்பர்கள் கல்லூரியில் கிடைத்தனர். அவர்களுடன் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தார். மாணவர்களுக்காக நடத்தப்படும் வேத ஆராய்ச்சி கூடுகையிலும் பங்கு பெற்று கிறிஸ்துவில் வளர்ந்து வந்தார். 'மாணவர் நற்செய்தி இயக்கம்' வழியாக நடத்தப்படும் அனைத்து கூடுகைகளிலும் பங்கு பெற்றார். "நான் தேவனுடைய பிள்ளை, என்னை ஆண்டவர் ஒரு நோக்கத்திற்காக படைத்திருக்கிறார். எனவே, அவருக்காகவே வாழ வேண்டும்," என்ற துடிப்பு அவருக்கு இருந்தது. அவருடைய வாலிப நண்பர்களாகிய திருவாளர்கள் ஜேம்ஸ் இரத்தினராஜ், மாணிக்கவாசக திரவியம், ஆண்ட்ரூ சுவாமிதாஸ், ஐவன் பாலசிங் மற்றும் சிலர், இவர்களோடு இணைந்து ஜெபித்து வந்தனர். இவர்களுடைய ஜெப ஐக்கியம் மற்றும் சி. எஸ். ஐ. பேட்ரிக் ஆலய வாலிபர் ஐக்கியமும் இவரை கிறிஸ்துவில் வேரூன்றி நிற்க உதவியாக இருந்தது.

## வேலையும் தேவ அழைப்பும்

தன்னுடைய கல்லூரிப் படிப்பை முடித்து திரு. சாமுவேல் தேவதாசன், தமிழ்நாடு அரசாங்கத்தின் பொதுப்பணித்துறையில் அலுவலராக இணைந்து பணியாற்றி வந்தார். முதன் முதலாக மதுரை பட்டணத்தில் பொதுப்பணித்துறையிலும் பின்னர் பவானி சாகரிலும் பணி செய்து வந்தார். அங்கு பணியாற்றும் போது அலுவலகத்தில் நடக்கும் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்கள் குறிப்பாக, லஞ்சம் வாங்கி பணியாற்றி வந்த மற்றவர்களைப் பார்த்து சோர்வுற்றார். தான் நேர்மையாக, உண்மையாக வாழ்ந்தபடியால் உடன் வேலையாட்களின் விரோதத்தைச் சம்பாதித்தார். எனவே, அந்த வேலை திரு. சாமுவேல் தேவ தாசனுக்கு பிடிக்காததால் ராஜினாமா செய்து விட்டார். பின்பு அவருடைய நண்பர்களின் ஆலோசனையின்படி வ.உ.சி. கல்லூரியிலுள்ள ஆசிரியர் பயிற்சி

கல்லூரியில் (B.Ed) பட்டப்படிப்பில் இணைந்துப் படித்து முடித்து, கோவில் பட்டியில் 1 வருடம் ஆசிரியராகப் பணியாற்றினார். அதன்பின் தூத்துக் குடியில் உள்ள கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இணைந்து பணி யாற்றலானார். ஆசிரியராகப் பணியாற்றும் போதே அனைத்து ஊழியங்களிலும் பங்கு பெற்று, அநேக மாணவர்களை கிறிஸ்துவிடம் வழிநடத்தினார். அப்படி வழிநடத்தியவர்களுள் ஒருவர்தான் அருள்திரு. ஜாண் கிருபாகரன் அவர்கள்– இவர் பிற்காலத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஊழியராக இணைந்து பொதுச்செயலராகவும் இருந்தவர்.

திரு. சாமுவேல் தேவதாசன், திரு. பி. சாமுவேல் அவர்களுடன் இணைந்து 1953-ம் ஆண்டு முதல் பல இடங்களில் இயக்குநராக இருந்து விடுமுறை வேதாகமப்பள்ளியை நடத்தி வந்தார். மிஷனெரிப்பணியில் அதிக ஈடுபாடும் ஜெப வாஞ்சையுமுடைய திரு. சாமுவேல் தேவதாசனை திரு. பி. சாமுவேல், முழுநேரப்பணியில் இணைய உற்சாகப்படுத்தி வந்தார். 1959-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவோடு ஆரம்பத்திலிருந்து இணைந்து திரு. தேவதாசன் உழைத்து வந்தார். தேவனுடைய அழைப்பின் பேரில், 1970-ம் ஆண்டு தன்னு டைய ஆசிரியர் பணியை ராஜினாமா செய்துவிட்டு, தன்னுடைய இளநிலை இறையியல் பட்டப்படிப்பிற்காக யவத் மாலில் உள்ள Union Bible Seminary-ல் இணைந்தார். இக்கல்விக்குப் பின், நமது இயக்கத்தில் இணைந்து மிஷனெரிகளைப் பயிற்சிவிக்கும் பொறுப்பேற்றார்.

## திருமண வாழ்க்கை

1970-ம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதி சகோதரி ரேய்ச்சலை திருமணம் செய்தார். திருமதி. ரேய்ச்சல் சமாதானம் ஒரு பட்டதாரி. திரு. தேவதாசனுடைய ஊழியத் திற்கு மிக உறுதுணையாக இருந்து வந்தார். இவர்களுடைய திருமண வாழ்வை தேவன் ஆசீர்வதித்து, 1972-ம் ஆண்டு ஜுலை மாதம் 7-ம் தேதி ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தார். அப்பிள்ளைக்கு 'ரூத் ஜப்லெட் 'என்ற பெயரிட்டு செல்லமாக வளர்த்துவந்தார்கள். தற்போது சகோதரி ரூத் திருமணமாகி, தன்னுடைய கணவன் அருள்திரு. ஜெனாவுடன் India Graduate School Of Missiology என்ற இறையியல் கல் லூரியில் பணியாற்றி வருகிறார்கள்.

## திருச்சபை நாட்டும் பணியில்

1973-ம் ஆண்டு தூத்துக்குடியில் மிஷனெரிப் பயிற்சி நிலையம் ஆரம்பிக் கப்பட்டு அதற்குப் பொறுப்பாக திரு. தேவதாசன் நியமிக்கப்பட்டார். நான்கு வருடம் அநேக மிஷனெரிகளுக்குப் பயிற்சி அளித்தார். அதன்பின்பு மேல் படிப்பிற்காக அமெரிக்கா தேசத்தில் பாசடேனா பட்டிணத்திலுள்ள புல்லர் இறையியல் கல்லூரிக்கு 1976-ல் சென்றார். அங்கு தன்னுடைய முதுகலை இறையியல் பட்டத்தையும், டாக்டர் பட்டத் தையும் பெற்று, 1978-ம் ஆண்டு ஜுன் மாதம் இந்தியா வந்தடைந்தார். புல்லர் இறையியல் கல்லூரியின் பேராசிரியர் டாக்டர் டொனால்டு ஆண்டர்சன் மெகாவரன் அவர்களிடம் இருந்து People Movement, Church Growth Principles, Mass Movement Strategies, Cross Cultural Mission Principles & Strategies (Win the people while they are winnable) கற்று வந்தார். மற்றும் ஒரு பேராசிரியரான டாக்டர். வால்டர் ஹன் அவர்களிடமிருந்து, மிஷனெரிகளை

எவ்வாறு மிஷன் கோட்பாடுகளில் பயிற்றுவிக்க வேண்டும்? என்பதை அறிந்து, தான் கற்றவைகளை தன்னுடைய ஊழியத்தில் உடனே பயன்படுத்தினார்.

டாக்டர். தேவதாசனுக்கு மிஷனெரிப் பயிற்சி பொறுப்பு கொடுக்கப்பட்டு, சேலம்-டேனிஷ்பேட்டிலுள்ள பெத்தேல் வேதாகம நிலையத்தில் இணைந்து மிஷனெரிகளுக்குப் பயிற்சி அளித்து வந்தார். 1978 முதல் 1983 வரை சிறப்பாக பயிற்சிப் பொறுப்பை நிறை வேற்றி வந்தார். இந்நாட்களில் திரு. எபநேசர் சுந்தர்ராஜ் அவர்களின் உடல் நலக்குறைவால் அவர்களால் பணித்தள இயக்குநர் பொறுப்பை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. தனக்கு வேறு பொறுப்பை கொடுக்கும்படி கேட்டுக் கொண்டபடியால், அந்த பொறுப்பை நிர்வாகம் டாக்டர். சாமுவேல் தேவதாச னுக்கு கொடுத்தது. அவர்கள் அந்த பொறுப்பை ஏற்று நாக்பூரில் பணித்தள இயக்குநர் அலுவலகத்தை அமைத்து அங்கு செயல்பட்டு வந்தார்கள். 1987 முதல் தனது சுகவீனத்தினிமித்தம் தன்னு டைய பொறுப்பை யவத்மாலிலுள்ள YCLT -ல் தங்கி நிறைவேற்றி வந்தார்கள்.

## சுகவீனம்

1988-ம் ஆண்டு, இவர் முட்டத்தில் நடந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர்கள் கூடுகையின் போது மாரடைப்பு வந்து அதிக அவதியுற்றார். அதன்பின்பு, 1992-ல் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அதன் பின்பு மறுபடியும் 1996-ம் ஆண்டு இருதயக்கோளாறின் காரணமாக அமெரிக்கா சென்று, அங்கு லெக்ஸ்டிங்டன் மருத்துவமனையில் வைத்து இரண்டாவது இருதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. சில நாட்களில் மறுபடியும் ஏற்பட்ட இருதயக்கோளாறினால் 3-வது முறை அறுவை சிகிச்சை வெற்றியாக நடைபெற்றது.

## பணித்தள ஊழியங்கள்

1980-ல் பணித்தளங்களில் ஆஷா, ஸ்சுவீப், சீட் 100, விண்ட் போன்ற ஊழியத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு நல்ல விளைச்சலைத் தந்தது. டாக்டர். தேவதாசன் 1983-ம் ஆண்டு முதல் பல புதிய பணித்தளத் திட்டங்களை அறிமுகம் செய்தார். மக்கள் கூட்ட சுவிசேஷப் (People Movement) பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து பணித்தளத்தில் பெரிய விளைச்சலைக்காண, சுவிசேஷத் திற்கு ஆர்வமுள்ள 10 மக்கள் கூட்டத்தை தெரிந்தெடுத்து அவர்கள் மத்தியில் அதிக மிஷனெரிகளை அனுப்பி அதிக கவனம் செலுத்தி ஊழியம் செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்தார். இதன் விளைவாக, மக்கள் கிராமம் கிராமமாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டதினால் பல நூறு திருச் சபைகள் உருவாகியது.

ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்தே (Indigenization) சுதேச மயமாக்கு வதற்கு முக்கியத்துவம் கொடுத்தார். சுதேச ஊழியர்களை உருவாக்குவது, மக்களின் மொழியைக் கற்று அம்மொழி யில் சுவிசேஷத்தை அறிவிப்பது, மக்களோடு கிராமங்களில் வாழ்ந்து அவர்களில் ஒருவராகவே மாறி சுவிசேஷத்தை அறிவிப்பது (Incarnation Ministry), மக்களின் கலாச்சாரத்தை காத்து கலாச்சாரத் தீங்குகளை மட்டும் நீக்கி பணியாற்றுவது, மக்கள் கலாச்சார ஆடைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், பாடல்கள் இவைகளை அப்படியே பின்பற்றுவது, சுதேச முறையில் ஆலயம் கட்டுவது, ஆராதனை நடத்துவது

போன்ற பல காரியங்களைப் பணித்தள மிஷனெரிகள் பின்பற்ற சுவிசேஷப்பயிற்சி கொடுக்க திரு. தேவதாசன் ஏற்பாடு செய்தார். டாக்டர். தேவதாசன் புல்லர் இறையியல் கல்லூரியில் டாக்டர். டொனால்டு மெகாவரன் (Donald Anderson McGavran) அவர்களிடம் இருந்து கற்றுக் கொண்ட மக்கள் கூட்ட சுவிசேஷப்பணி, கலாச்சாரம் கடந்து திருச்சபையை நாட்டும் விதம், திருச் சபையின் வளர்ச்சி மற்றும் பெருக்கம் போன்ற மிஷனெரிக் கோட்பாடுகளைப் பணித்தளத்தில் அப்பியாசப்படுத்தினார். யவத்மாலிலுள்ள YCLT -ல் வைத்து சிறப்புப் பயிற்சிகளை மிஷனெரிகளுக்குக் கொடுத்து, கலாச்சாரம் கடந்து திருச் சபை நாட்டும் பணிக்கும் அதிக முக்கி யத்துவம் கொடுத்தார். திருச்சபை வளர்ச்சி கருத்தரங்குகளை Church Growth Association of India-வுடன் இணைந்து நடத்தினார். சுதேச ஊழியர்களை இறையியல் படிக்க வைக்க நண்பர்கள் உதவியோடு 'அப்பொல்லோ திட்டம்' ஒன்றை அறிமுகப்படுத்தி, அதன் வாயிலாக நிதி உதவி செய்து அவர்களுக்குப் படிக்க உதவி செய்து வந்தார். டாக்டர். தேவதாசன் ஒரு ஜெப வீரர்; எனவே, அனைத்து மிஷனெரி களும் ஜெபத்தில் வளர முக்கியத்துவம் கொடுத்தார். அனைத்து புதன்கிழமை களும் கண்டிப்பாக மிஷனெரிகள் ஒன்றுகூடி ஜெபிக்க வலியுறுத்தினார். தனிப்பட்ட வாழ்விலும் மிஷனெரிகள் ஜெபிக்க, தவறாது வேதம் வாசித்து தியானிக்க உற்சாகப்படுத்தினார். ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஆவிக்குரிய எழுப்புதலுக்காக, (Spiritual life conference) வளர்ச்சிக்காகத் தேவையான காரியங்களான நிதி, நேரம் மற்றும் இதரத் தேவைகளுக்கான அனைத்தையும் செய்து ஆவிக்குரிய போராட்டத்தில் மிஷனெரிகள் வெற்றி பெற்று முன்னேறிச் செல்வதை உறுதி செய்தார். தனிப்பட்ட வாழ்விலும் குடுவாழ்விலும் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு, மாதிரியாக வாழ்ந்தார். கூடுகையில் அவர் இரவில் தனியாக ஜெபிப்பதை பலர் பார்த்து சாட்சி கொடுத்துள்ளார்கள்.

டாக்டர். தேவதாசன் மக்கள் மீது முதலீடு (Invest on People) செய்ய வேண்டும் என்றக் கருத்தை அடிக்கடி வலியுறுத்து வார். எனவே, 1982-ல் Indian Evangelical Education Trust ஒன்றை ஆரம்பித்து அநேகர் இறையியல் படிக்க உதவி செய்து வந்தார். மிஷனெரிகளுக்குத் தேவையான பயிற்சி, அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் வசதிகளை இயக்கத்தின் வழியாக கிடைக்கும்படி செய்வார். மிஷனெரிகளின் பயணம், திருமணம், பிள்ளைகளின் படிப்பு போன்ற அனைத்தும் தடையின்றி மிஷனெரிகளுக்குக் கிடைக்க இயக்கத்தின் தலைவர்களோடு பேசி பெற்றுத் தருவார்.

தலைவர்களை உருவாக்கும் பணிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தவர் டாக்டர். தேவதாசன். திறமை, உண்மை, கடின உழைப்பை கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான இறையியல் பயிற்சி அல்லது மேற்படிப்பு இவைகளுக்கு ஏற்பாடு செய்து, அவர்களுக்குத் தலைமைத்துவ பொறுப்பளித்து அநேக தலைவர்களை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. மிஷனெரிப்பயிற்சிக்காக 1984-ல் ஆரம்பிக்கப்பட்ட YCLT என்ற பயிற்சி கல் லூரியை நிறுவ இவருடைய பங்கு அதிகம். இவர் நேர்மையானவர்; கண்டிப்பானவர்; அதே நேரத்தில், மிக அன்பானவர் மற்றும் நகைச்சுவையுடையவர்.

தேவன் டாக்டர். தேவதாசனுக்கு கொடுத்த தாலந்துகள் மற்றவர்களைக் கட்டுவது,

பயிற்சி அளிப்பது ஆகும். இவர் ஆசிரியர் ஆனபடியால் மிஷனெரிக் கோட்பாடுகளையும் (Mission Principle and Strategies) திருச்சபை நாட்டும் நுணுக்கங்களையும் நன்றாக கற்றுக் கொடுப்பார். மற்றும் இவர் சிறந்த செய்தி யாளர், தேவனுடைய வார்த்தையை தெளிவாகப் போதிக்கும் வரம் பெற்றவர். டாக்டர் தேவதாசன் கடின உழைப்பாளி, அனைத்து பணித்தளங்களுக்கும் மற்றும் அனைத்து கூடுகைகளுக்கும் அதிகமான பயணங்களைச் செய்வார். இவருடைய உதவியாளர் இரயில் முன்பதி விற்காக இரயில்வே அலுவலகம் சென்ற போது, முன்பதிவு செய்யும் இரயில்வே பணியாளர், "யார் இந்த தேவதாசன், என்ன எப்பொழுதும் இரயிலில் தான் வாழ்கிறார் போல" என இவர் செய்த பயணங்களின் அடிப்படையில் வியந்து கூறினாராம். மிஷனெரிகளுக்கு வரும் துன்பம், எதிர்ப்புமிக்க நேரங்களில் அவர்களோடிருந்து தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் கொடுத்து வழிநடத்துவார்.

## இறுதி நாட்கள்

திருமதி. ரேய்ச்சல், டாக்டர். தேவதாசனின் ஊழிய வெற்றிக்கு உறுதுணையாக இருந்துவந்தார்கள். தன் கணவன் ஊழியத்தினிமித்தம் அடிக்கடி வெளியில் சென்றுவிடும் போது குடும்பத்தை நன்றாக நடத்தி வந்தார்கள். YCLT-ல் 1987 முதல் 1997 வரை ஆசிரியையாக இருந்து பணியாற்றினார்கள். அவர்கள் அல்சைமர் (Alzheimer) என்ற மறதி நோயால் பாதிக்கப்பட்டார்கள். கடைசி ஆறு மாதங்கள் படுத்தபடுக்கையாகி விட்டார்கள், சகோ. தேவதாசன் அவர்கள், தனது மனைவிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து நன்றாக தன் மனைவியை கவனித்துக் கொண்டார்கள். எந்தவித சிகிச்சையும் பலனளிக்காமல் திருமதி. ரேய்ச்சல் சமாதானம் 2002-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் தேதி கர்த்தருக்குள் நித்தி ரையடைந்தார்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணித்தள இயக்குநராக பணியாற்றிய டாக்டர். தேவதாசனுக்கும், இயக்கத்தின் ஏனைய தலைவர்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் 1998-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தன்னார்வ ஓய்வு பெற்றார். இவருடன் சில மிஷனெரிகளும் தங்கள் ஆலயங்களுடன் பிரிந்து செல்ல நேரிட்டது. வரலாற்றில் இப்படிப்பட்ட சில காரியங்கள் நடந்து விடுகின்றன. அதன் பின் 1999-ம் ஆண்டு ஹாஸ்பல் பார்ட்னர் மூவ்மண்ட் (Gospel Partner Movement) என்ற இயக்கத்தையும், India Graduate School of Missiology என்ற இறையியல் கல்லூரியையும் சென்னை அருகேயுள்ள ஈக்காடு கண்டிகை என்ற இடத்தில் டாக்டர். ஆண்ட்ரூ சுவாமிதாஸ் உடன் இணைந்து ஆரம்பித்தார். டாக்டர். ஆண்ட்ரூ சுவாமிதாஸ் அவர்கள் வெளி நாட்டிற்கு சென்றிருக்கும்போது, கல்லூரியின் பதிவாளர் திரு.டைட்டஸ் லிவிங்ஸ்டனுடன் மதிய உணவு அருந்திவிட்டு, தனது அறைக்கு திரும்பி வரும்போது அந்த இடத்திலேயே மயக்கமாகிக் கீழே சரிந்தார். உடனே அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர், மருத்துவர் அவர் இறந்து விட்டதை நிச்சயப்படுத்தி அனுப்பிவிட்டார்கள். இவ்வாறு டாக்டர். தேவதாசன் 2004-ம் ஆண்டு ஜனவரி 4-ம் தேதி விண்ணுலக அழைப்பை ஏற்று தேவ இராஜ்யம் அடைந்தார். உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு ஈக்காடுவில் உள்ள சி.எஸ்.ஐ. கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டார். டாக்டர் தேவதாசனின் வாழ்விற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

*– அருள்திரு. அறிவர். இ. ராஜன்*




## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சி. எஸ். ஐசாயா, திரு. ராபர்ட் ராஜலிங்கம்
திரு. தௌஜபாவ் குயிட்டே, திரு. தனய சுந்தர் நாயக்
திரு. சுங்லென்லல் சிங்சிட்
திருமதி. மன்னா ராஜ வித்யா அகஸ்டியன்
திரு. தங்கோகின் லுஃபெங்க்
திருமதி. மெலொடி டிம்சன்டிங்
திரு. ஸியான்லுன்தங்க் ஸௌ

# ஜம்மு

### ஆர். எஸ். புரா:

### டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** நான்கு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதின் விளைவாக ஏழுபேர் புதிய வாழ்விற்குள் வந்துள்ளனர். கருத்து வேறுபாட்டால் பிரிந்திருந்த கங்காயல் கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாச தம்பதியர் ரோஹித் &நேஹா மீண்டும் ஒன்றிணைந்தனர். படில்லா மற்றும் சக்ரோய் கிராமவாசிகளான இரு குடும்பத்தினர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்றனர். ஆக்ரா கிராமத்தைச் சார்ந்த நந்தன்லால், லட்சுமணன் ஆகியோரை கர்த்தர் மதுப் பழக்கத்திலிருந்து விடுவித்துள்ளார்.

**ஜெபிக்க:** கபீர் நகரில் புதிதாக ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட; நமது சுதேச ஊழியர் பஞ்சம் அவர்களின் மனைவி தைராய்டு பிரச்சனையிலிருந்து சுகம்பெற; சக் ஹரினா கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிப்போம்.

### ஜம்மு பிராந்தியம்:

### வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

**துதிக்க:** எதிர்ப்புகளால் ஆராதனை நிறுத்தப்பட்டாலும், சுங்வாலி கிராம விசுவாசிகள் கர்த்தரைப் பற்றிய விசுவாசத்தில் உறுதியாயுள்ளனர். பிற சுவிசேஷ ஊழியத்திற்கு உதவிசெய்ய நமது புதிய விசுவாசிகளான மஞ்சு தேவி, அசோக், குல்புசான் ஆகியோர் ஆவலாயுள்ளனர். சியோட் கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

**ஜெபிக்க:** தன்னுடைய மகன்களால் எதிர்க்கப்படுகின்ற நமது முன்னாள் சுதேச ஊழியர் தூரா சந்த் ஊழியத்தில் நிலைத்து நிற்க; பங்குதானி கிராம நமது புதிய விசுவாசி கோகு எதிர்ப்பின் மத்தியில் ஆலய ஆராதனையில் பங்கேற்க; பந்தோரி கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு ஆரம்பிக்கப்பட; தக்கோலி, ஜனியால் கிராம விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சம்பா பணித்தளத்தில் பிற சுவிசேஷ ஊழியத்திற்காக இரு குழுக்கள் உருவாக்கப்பட; நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரண், சக்தமோர்கா, கன்கோட்டா, சியோட் கிராமங்களில் வாழ்வோர் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வர; சுமா கிராமம், கோட்லி கிராமத்திலுள்ள பகத் மக்கள் குழு ஆகியவர்களிடம் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் உருவாக ஜெபிப்போம்.

ஏப்ரல்
2
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராஜதுரை பி., திரு. ஜெபராஜ் எஸ்.
திருமதி. ஆலிவ் ஜெனிஃபர் நத்தானியேல் எட்வர்ட்
திரு. செந்தில் முருகன் வி., திரு. ரபீந்திர முர்மு

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ராம்பூர்:

### த்சாங்சே சங்தம் & சுச்சானோ

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி கூறப்பட்டது; ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தார். கஷாபத், பத்ராஷ் கிராமங்களில் நடைபெறுகின்ற ஆராதனைகளில் புதிய மக்கள் பங்கேற்கின்றனர். நம்முடைய ஊழியத்தை எதிர்த்து வந்த ஒரு பண்டிட், தனது குடும்பத்திற்காக ஜெபிக்குமாறு தானாக முன்வந்து கேட்டுள்ளார். பத்தேதா, தக்ளேச் கிராமங்களில் புதிதாக வேதாகம வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**ஜெபிக்க:** தக்ளேச் கிராமத்தில் புதிய ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; கஷாபத் கிராமத்தில் நடைபெற்று வரும் ஆராதனையில் பங்குபெறுகின்ற எட்டுபேர் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பிறவியிலேயே பார்வையற்றோராய் பிறந்த சகோதர சகோதரியான சியான்சியால், வன்ஷ் ஆகியோரின் கண்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

## ரோஹ்ரு :

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** சுரேஷ் என்ற சுதேச ஊழியராகிய, தந்தையை இழந்துள்ள பிள்ளைகள் ஆரியன், பிரீத்தி ஆகியோரை தேவன் ஆறுதல்படுத்தினார். ஹட்கோட்டி கிராமத்தில் ராஜு, பூஜா என்ற புதிய தொடர்பாளர்களை கர்த்தர் தந்துள்ளார். ரனோல் பகுதியில் ஊழியம் செய்யச் சென்ற தன்னார்வ ஊழியரான ஹொர்சிங்கை கர்த்தர் ஆபத்திலிருந்து காப்பாற்றினார்.

**ஜெபிக்க:** திருச்சபையில் இணைய ஆயத்தப்படும் விசுவாசிகளுக்காக; ஆராதனை நடத்துவதற்குத் தங்கள் வீட்டைத் திறந்து கொடுத்துள்ள விசுவாசிகள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; அஜித், திலபிரித் ஆகியோர் இரட்சிக்கப்பட; நமது சுதேச ஊழியர்களான பிரபா, ஹிரா ஆகியோர் தங்கள் ஊழியத்தின் அர்ப்பணிப்பில் உறுதியாய் நிலைத்து நிற்க ஜெபிப்போம்.

# பஞ்சாப்

## மோகா:

### ஜஸ்டின் & சாராள் ஜாண்சி ராணி

**துதிக்க:** இருவர் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்துள்ளனர். பிரிந்து வாழ்ந்த தம்பதியரான அமஜித் & சோனி மீண்டும் இணைந்து வாழ்கின்றனர். கண்பிரச்சனையிலிருந்து அமன் தீப், கால்வலியிலிருந்து ரிம்பி, தைராய்டு பிரச்சனையிலிருந்து ரிம்மி ஆகியோர் சுகம் பெற்றனர். டுதிக்கே கிராமவாசி சம்கோர்சிங் என்பவரை அசுத்த ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் சுகப்படுத்தினார்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் ஆலய ஆராதனையில் ஒழுங்காகப் பங்கேற்க; அஜித்வால் சுடேஹாக்,ராய்கோட், கோட்லி, தரம்கேட், போபாரா, டுதிக்கே கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் உருவாக; பின்வாங்கிப்போன குடும்பங்களான சிம்ரன், சாரனோ, சோனி, பரம்ஜித், பல்விந்தர், லட்சுமி, கோமல் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ஏஞ்சல், கோமல், கேவால் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேரி டாரதி ராஜாசிங்
திருமதி. மரியம்மாள் பால் சாலமோன்
திரு. ஐசக் ஆர்., திருமதி. பியூலா முரளிதரன்
திருமதி. ஜெய சௌந்தரி ஜெபராஜ் சாமுவேல்
திரு. டாவுட் டுடு

### புத்லாடா:
### சஞ்சீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதின் வாயிலாக எழுவர் புதிய விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். நமது பணித்தளங்களில் லெந்து கால ஜெபங்கள் ஒழுங்காக ஏறெடுக்கப்படுகின்றன. பரேத்தா, மூனக், புத்லாடா பகுதிகளில் நடைபெற்ற சத்சங் கூடுகைகளை கர்த்தர் ஆசீர்வதித்தார். இயேசு திரைப்படத்தின் வாயிலாக 500-க்கும் மேற்பட்டோர் கிறிஸ்துவின் வாழ்க்கையால் தொடப்பட்டுள்ளனர்.

**ஜெபிக்க:** லெந்து கால ஜெபங்களில் பங்கேற்கும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கைக்காக; குர்னே, ரங்கேதால், சீனா கிராமங்களில் ஞாயிறு ஆராதனைகள் ஆரம்பிக்கப்பட; ஊழியங்களில் ஈடுபட வாலிபர்கள் தன்னார்வமாக முன்னேவர; அரசுத்தேர்வு எழுத ஆயத்தப்படுகின்ற விசுவாசிகளின் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

## ஹரியானா

### ஃபத்தேஹ்பாத்: விஜயகுமார் & ஜெபலா, கோஹ்மு & ரௌட்ஸி

**துதிக்க:** ஏழு கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டதின் வாயிலாக அறுவர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். ஆத்தும ஆதாயப் பயிற்சியில் 105 விசுவாசிகள் பங்கேற்று ஆசீர்வாதம் பெற்றனர். ஞாயிறு பள்ளியில் 56 சிறுவர்கள் உற்சாகமாகப் பங்கேற்றனர். பகுவாலி தானி, சோனி ஆகியோர் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். கர்னாவுலி பகுதியைச் சேர்ந்த ஜட் சீக்கியர் சமுதாயத்தைச் சார்ந்த பிக்கார் சிங் மற்றும் குடும்பத்தினர் நற்செய்திக்கு ஆவலாயுள்ளனர்.

**ஜெபிக்க:** நமது சுதேச ஊழியரின் மகள் நசீப் கவுரின் குடும்பப் பிரச்சனை சுமூகமாகத் தீர்க்கப்பட; இஷ்டா அனில் குடும்பம், சுமித்ரா குடும்பம் கர்ப்பத்தின் கனியால் ஆசீர்வதிக்கப்பட; நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்ற டுமோ மக்கள் இனத்தைச் சார்ந்த மிராசி இரட்சிப்பின் சந்தோஷத்திற்குள் வர; பொய்ப் போதகர்களின் ஆலோசனைகளிலிருந்து நமது விசுவாசிகள் விடுபட்டு வேதத்தைக் கற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### ரத்தியா: மிண்டு குட்டும் & சுப்ராபாக்

**துதிக்க:** 13 பேர் புதுவாழ்விற்குள் வந்தனர். 100 பெண்கள் பங்குபெற்ற பெண்கள் முகாமை கர்த்தர் ஆசீர்வதித்தார்; முகாமிற்கானத் தேவைகளைப் பெண்களே சந்தித்தனர். துல்ட் கிராமத்தைச் சேர்ந்த விசுவாசத்தில் பின்வாங்கிப்போன ஷியாம் சுந்தர் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்தார்.

**ஜெபிக்க:** இம்மாதத்தில் திட்டமிடப்பட்டுள்ள கூடுகைகள் வெற்றிகரமாக நடத்தப்பட; மிரானா கிராமத்தைச் சார்ந்த பரம்ஜித் ஃபுளு காய்ச்சலிலிருந்தும், ரத்தியா கிராமவாசியான கோக்கி சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், சுக்மான் சிங் இரத்தப் புற்றுநோயிலிருந்தும், சுனிதா சிறுநீரகக் கற்கள் பிரச்சனையிலிருந்தும், பம்மி முதுகு வலியிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

ஏப்ரல்
4
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கிரேஸி ஸ்டான்லி ஜார்ஜ்
திருமதி. அன்ன ரோஸ்லின்
திருமதி. கௌரம்மா @ சுவேதா அமரேந்திரன்

# உத்தரகாண்ட்

## தினேஷ்பூர்: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** ஒரு கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. குலார்பாஜ் கிராம வாசியான ஜோதி மூளையிலுள்ள கட்டியிலிருந்து சுகம் பெற்றார். தோல் ஒவ்வாமையிலிருந்து ஜாஃபர்பூரைச் சார்ந்த கமலேஷ் சுகம் பெற்றார். அலக்தேவி கிராமத்தைச் சேர்ந்த சரிதாவை பெரும் விபத்திலிருந்து கர்த்தர் பாதுகாத்தார். சந்தன் குடும்பத்திலுள்ள பிரச்சனைகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டது.

**ஜெபிக்க:** திம்ரிபிளாக் பகுதியைச் சேர்ந்த பின்மாற்றமடைந்த விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; மனநோய், அசுத்த ஆவியின்பிடி ஆகியவற்றிலிருந்து ஆகாஷ் சுகம் பெற; சிம்ரன், குரும்ராஜ் குடும்பத்திலுள்ள பிரச்சனைகள் சுமூகமாகத் தீர்க்கப்பட ஜெபிப்போம்.

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

## பி.ஜி. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** ஒரு கிராமத்தில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டதின் வாயிலாக 18 பேர் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். இலவச மருத்துவ முகாமின் மூலமாக 145 நோயாளிகள் பயன்பெற்றனர். கல்லீரல் பிரச்சனையிலிருந்து மீனாவும், டைஃபாய்டு நோயிலிருந்து ஜமுனாவும் சுகம் பெற்றனர். மூன்று நாட்கள் நடைபெற்ற ஆவிக்குரிய கூடுகையில் நமது விசுவாசி ஜெபத்துடன் பங்கேற்று, தனக்கு ஒரு குழந்தைப் பாக்கியம் கிடைக்கவேண்டுமென்று ஜெபித்தார்; கர்த்தர் அவரின் ஜெபத்திற்குப் பதிலளித்துள்ளார்.

**ஜெபிக்க:** குடியுரிமைத் திருத்த சட்டத்திற்கு எதிராக நடைபெறும் போராட்டத்தால் சமுதாயத்தில் நிலவும் குழப்பம் நீங்கி அமைதியான சூழல் உருவாக; ஆராதனையில் ஒழுங்காகப் பங்கேற்றாலும் திருச்சபையில் இணைய தயக்கம் காட்டும் சஜ்வான் நகரைச் சார்ந்த எட்டு குடும்பங்களுக்காக, தன்னுடைய தீய பழக்கங்களிலிருந்து விக்ரம் விடுபட்டு தன் குடும்பத்தின் பொறுப்பேற்க; நமது விசுவாசிகளான பூஜா, எலிசபெத் ராமாயின் மகன் ஆகியோருக்குத் தகுந்த வாழ்க்கைத்துணை அமைய ஜெபிப்போம்.

## ரூ.2000/-ஆல் ஓடாத பிசாசு 2 நிமிட ஜெபத்தால் ஓடியது!

*மத்தியப் பிரதேசம், ராணிகஞ்ச் பணித்தளம், ஹரிபுகர் கிராமத்தைச் சார்ந்த ஹிப்நாத் ஹெம்ரோம் குடும்பம் பிசாசினால் அடிக்கடி அலைக்கழிக்கப்பட்டனர். மந்திரவாதியைச் சந்தித்தபோது, அவர் பிசாசை விரட்ட ரூ.2000/- ஐக் கேட்டு வாங்கி மந்திரங்கள் செய்தார்; எந்த பயனும் விளையவில்லை. எனவே, குடும்பத்தின் அருகில் வாழ்ந்துவந்த விசுவாசியைச் சந்தித்தனர். ஹிப்நாத் வீட்டிற்குச் சென்று, விசுவாசி 2 நிமிடங்கள் மட்டுமே ஜெபித்தார்; பிசாசு குடும்பத்தை விட்டு விலகி ஓடியது. தற்போது ஹிப்நாத் குடும்பம் திருச்சபையில் இணைந்து, கர்த்தரை மகிமைப்படுத்தி வருகின்றனர்!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாலாஜி நெட்டாலம்
திரு. ராம கிருஷ்ணா அகிபாடா, திரு. அமரேந்திரன்
திருமதி. ஜெபா கிரேஸ் டேவிட்
திரு. ஜோதி ரஞ்சன் பர்தான்
திரு. லுங்மின் தாங் பைட்டே

# ராஜஸ்தான்

## பாவோட்டா:

### ஜெய்பீர் சிங் & தேவி ராணி

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டதால் மூவர் புது வாழ்விற்குள் வந்துள்ளனர். நமது விசுவாசி ரேணுவின் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் அவருக்கு ஒரு மகனைக் கொடுத்தார்; நமது விசுவாசியின் நான்கு வயது மகன் மோகித் சுவரிலிருந்து கீழே விழுந்ததால் தலையில் காயம் ஏற்பட்டது, கர்த்தர் குணமாக்கினார்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி ருக்மணி தன் அனைத்துக் கடனையும் திரும்பச் செலுத்த; நடக்க முடியாமலிருக்கும் ஷார்கி தேவி சுகம் பெற்று மீண்டும் நடக்க; அனைத்து விசுவாசிகளின் ஆன்மீக வளர்ச்சிக்காக; வயிற்றுப் பிரச்சனையிலிருந்து ஜீத்துவும், காலில் ஏற்பட்டுள்ள கட்டியிலிருந்து சுனிதாவும் சுகம் பெற ஜெபிப்போம்.

## ஸ்ரீ கங்காநகர்:

### வி. குமார் & பெட்ரிஷியா தமிழ்ச் செல்வி

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; ஒருவர் கிறிஸ்துவ விசுவாசத்திற்குள் வந்தார். ராய்சிங் நகரில் நடத்தப்பட்ட ஆய்வுப்பணியை கர்த்தர் ஆசீர்வதித்தார்; படேல் நகரைச் சார்ந்த இருவர் திருச்சபையில் இணைய ஆயத்தப்படுகின்றனர்.

**ஜெபிக்க:** சனந்த் கிராமத்தைச் சேர்ந்த குர்மித் கவுர், குரு சரண் ஆகியோரின் இரட்சிப்பிற்காக; தன் மனைவி, பிள்ளைகளோடு அம்ரித்பால் ஆராதனையில் கலந்து கொள்ள; விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை அமைய; நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்ற பக்கா சிங், மாயா குடும்பத்தினர் திருச்சபையில் இணைய; விசுவாசி வீர்ப்பாலியின் கணவர் ஆராதனையில் பங்கேற்க ஜெபிப்போம்.

## ஹனுமான்கட்:

### செல்வம் தவமணி & ஹெப்சி

**துதிக்க:** லக்குவாலி கிராமத்தைச் சேர்ந்த சுதேச ஊழியர் தானியேலின் மகனுடைய திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பக்ரவாலா பகுதியைச் சார்ந்த விசுவாசி பல்வீர் தனக்கு ஒரு வீடு கட்டிக்கொள்ள கர்த்தர் உதவினார். நமது புதிய தொடர்பாளர் மல்கித்தின் தந்தை மரணப்படுக்கையிலிருந்து சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** ஆலய ஆராதனையில் எல்லா விசுவாசிகளும் உற்சாகத்துடன் பங்கேற்க; புதிய விசுவாசிகள் பயத்தை முற்றிலும் தள்ளிவிட்டு திருச்சபையில் சேர; பின்வாங்கிப் போன மக்காசர், லக்சுமன் குடும்பம், தேவிலா குடும்பம் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

**ஏப்ரல்**
**6**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்
திரு. ஃபிராங்ளின் எம். ஒய். பாதம்
திருமதி. சூர்ஜ்யகாந்தி உதிப்தகுமார் பாக்
திரு. காடிசெலா பிரவீன், திரு. ராஜேஷ் முர்மு

# உத்தரப் பிரதேசம்

## காட்டம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** 20 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதால் 12 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். சபை மூப்பர் சிவ் பிரசாத் புதிதாக வீடு கட்டுவதற்குக் கர்த்தர் கிருபை கூர்ந்தார். நான்கு ஆண்டுகளாகக் காணாமற்போயிருந்த சபை மூப்பர் பப்புவின் மகன் ஆதித்யா சுகமாக வீடு திரும்பினார். விபத்தில் அகப்பட்ட மோனு, சிறுகாயங்களுடன் உயிர் பிழைக்க கர்த்தர் கருணை செய்தார்.

**ஜெபிக்க:** நற்செய்திக்குப் பலர் செவி மடுத்து இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நமது விசுவாசி மருந்தியல் பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடிக்க; காசநோயிலிருந்து பீனு, சிறுநீரகக் கற்களிலிருந்து பங்குமாரி, பல்வேறு நோய்களிலிருந்து உஸ்மானின் மனைவி ஆகியோர் சுகம் பெற; அம்பேத்கார் நகரைச் சார்ந்த ரஜ்னி அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## ஹசேரன்: ராஜன் & ஜெப மலர்

**துதிக்க:** ஆறு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஒரு நபர் விசுவாச வாழ்விற்குள் வந்தார். இப்ராகிம்பூர் கிராமவாசி மகாபீர், ரஹாம்ட்பூரைச் சார்ந்த ராதா ஆகியோர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டுகின்றனர். தேவ்காலி கிராமத்தைச் சார்ந்த விசுவாசி குஷ்புவைக் கர்த்தர் குழந்தை பாக்கியத்தால் ஆசீர்வதித்துள்ளார். விபத்திலிருந்து இந்திராணியின் மகனைக் கர்த்தர் தற்காத்தார்.

**ஜெபிக்க:** விசுவாசத்திலிருந்து பின் வாங்கியுள்ள பில்ஹோர் பணித்தள விசுவாசிகள் மீண்டுமாக விசுவாசத்திற்குள் வர; அப்பய்வாடியைச் சார்ந்த பாலிராம், பார்திபூரைச் சார்ந்த ராம்ஸ்ரீ, குரவுதாவைச் சார்ந்த லட்சுமி, ஹரிஜன்பூர்வாவைச் சார்ந்த மஞ்சு, பவுவாவைச் சார்ந்த ராம்காலி ஆகியோர் அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து விடுதலைப் பெற ஜெபிப்போம்.

## ரணியா :
## எபநேசர் ஜி. சாம் & ஜெபராணி

**துதிக்க:** ஒரு கிராமத்தில் புதிதாக நற்செய்தி கூறியதன் விளைவாக ஒருவர் கர்த்தரை ஏற்றுக்கொண்டார். ரெய்பூரிலிருந்து இரு குடும்பங்கள், தேகருவாபுர்வாவிலிருந்து ஒரு குடும்பம் புதிதாக நமது ஆராதனையில் பங்கேற்கின்றனர். ஹர்டிவாலி கிராமத்தைச் சார்ந்த ஷீலி அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து விடுதலைப் பெற்றார்.

**ஜெபிக்க:** ஹசேரன், முதேகாபுர்வா பகுதிகளில் ஆலயங்கள் கட்டுவதற்கு நிலம் கிடைக்க; பணித்தளத்திற்கு வந்துள்ள புதிய மிஷனெரிப் பயிற்சியாளர்கள் சரியானப் பயிற்சிப் பெற; ராய்பூரைச் சார்ந்த பிரஜேஷ், நரேஷ் ஆகியோர் புற்றுநோயிலிருந்து குணம் பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் டேவிட் ராஜ்
திரு. பவன் குமார், திரு. அல்போன்ஸ்

### பர்த்தனா:

**சுரேஷ் மால்தோ & பிரேம்லதா**

**துதிக்க:** 12 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; ஒன்பது பேர் கர்த்தரின் மந்தையில் இணைந்தனர். ஆலயக்கட்டுமானத்திற்கான நிலத்தின் பத்திரங்கள் ஆயத்தப்படுத்தப்படுகின்றன. மகெனா ஆலய ஆராதனையில் 35 பேர் பங்கேற்கின்றனர். மோர்கா கிராம விசுவாசிகளை கர்த்தர் எதிர்ப்பாளர்களிடமிருந்து பாதுகாத்தார். சுர்கேபுரா கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசியின் மகன் ஆசிரியர் தகுதி தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்றுள்ளார். பகர்பூர் கிராமவாசியான நமது விசுவாசி அகிலேஷ் குமாரி ஆலயம் கட்டித்தர முன்வந்துள்ளார்.

**ஜெபிக்க:** திராம்பூர், பிதுனா பகுதிகளில் ஆலயங்கள் கட்ட நிலம் கிடைக்க; அசாத்பூர், பகதூர்பூர், உதயகபூர்வாவிலுள்ள நமது சபைகளில் இடையூறு விளைவிக்கும் தனிப்பட்ட பாஸ்டர்களுக்காக; நடைபெறவுள்ள அரசு தேர்வில் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் சிறந்த மதிப்பெண்கள் பெற ஜெபிப்போம்.

### பக்ஷிகா தலாப்:

**கே. மேத்யூ & ஷியாமளா**

**துதிக்க:** இரு கிராமங்களில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது; மூவர் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். நமது விசுவாசி மாஸ்டர் பிரகாஷின் திருமணம் எவ்விதத் தடையுமின்றி சிறப்பாக நடைபெற்றது. பீகாமவுக்கலா கிராமத்தைச் சார்ந்த திருமதி. அஜித் கர்த்தரை ஏற்றுக் கொண்ட பின்னர், பல்வேறு வழிகளில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார். திருமதி. ராம் அவதார் உடல் வலியிலிருந்து சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** பூல்மதி தன் கணவரின் உறவினர்கள் மத்தியில் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; கோட்டுவா பகுதி விசுவாசிகளின் மத்தியில் ஒற்றுமையின்மையால் நிறுத்தப்பட்டுள்ள ஆராதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கேதுவாக விசுவாசிகளிடம் ஒருமனம் நிலவ; பணித்தளத்திலுள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிப்போம்.

## *முதல் விசுவாசியின் அடக்க ஆராதனை!*

*உத்தரப் பிரதேசம் ஜாலோத் பணித்தளத்தின் முதல் விசுவாசி ரூப்சிங்பாய், 20 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் கர்த்தரை ஏற்றுக்கொண்டார். சாட்சியுள்ள அவருடைய வாழ்க்கையின் மூலமாகப் பலர் கர்த்தரிடம் வந்தனர். அந்த ஊரில் ஒரு ஆலயம் கட்டப்பட்டு, இன்றுவரையில் ஆராதனை ஒழுங்காக நடைபெற்று வருகின்றது. நமது முதல் விசுவாசி ரூப்சிங்பாய் காச நோயால் தாக்கப்பட்டு, இறந்து போனார். அவருக்கு கிறிஸ்தவ விசுவாச முறையின்படி அடக்க ஆராதனையை நடத்தினர். கிறிஸ்தவ அடக்க ஆராதனையைப் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது!*

## ஏப்ரல் 8
புதன்
உபவாச ஜெபநாள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் எஸ்.
திரு. சாலமோன் ஜெபராஜ் ஜெ.
திருமதி. பின்னி ஞானம் ஜாண் தினேஷ்
திரு. ஜாண்சன் ஜெ., திருமதி. சாரா மால்தோ
திருமதி. அனியா ஜோஸ்பின் வெங்கடேசன்
திருமதி. ரேணு அருண் காந்தா

### டூண்ட்லா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** நான்கு கிராமங்களில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது; ஒருவர் கிறிஸ்துவண்டை வந்துள்ளார். கியாமாய், தானுமாய், நக்லா ரமியா ஆகிய கிராமங்களில் பலர் நற்செய்திக்கு ஆர்வம் தெரிவித்துள்ளனர். உபத்திரவத்தின் மத்தியில் சந்தோஷ் குடும்பம் விசுவாசத்தில் உறுதியாயுள்ளது நீதிமன்றத்தில் பொய் வழக்கின் அடிப்படையில் பல ஆண்டுகளாகத் துன்பப்பட்ட நமது விசுவாசி மித்லேஷுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வெளியாகியுள்ளது.

**ஜெபிக்க:** முன்னாலால், சூரஜ், ரஜ்னிஷ் குடும்பங்களின் இரட்சிப்பிற்காக; நக்லா தமியா, பாத புரா, நன்லா தாரு கிராமங்களில் மாலைக் கூடுகைகள் ஆரம்பிக்கப்பட; ஜாதவ், யாதவ், ரதோர், பகெத் சமூக மக்களிடம் நற்செய்தி வல்லமையாய் சென்றடைய; நமது கூடுகைகளில் ஒழுங்காகப் பங்கு பெறும் பெண்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### பாக்ய நகர்: அருண்குமார் & நான்சி ஜி. சந்திரா

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டது. திப்லியாபூர் ஆலய மங்களப்படைப்பு சிறப்பாக நடைபெற்றது. பிசாசின் கட்டுகளால் வாய் பேச முடியாமலிருந்த பாப்புவின் மகளின் வாயை கர்த்தர் திறந்தார்.

**ஜெபிக்க:** பதா கிராமத்தில் ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்கப்பட; 22 ஆண்டுகளாகப் பிசாசின் பிடியிலிருக்கும் விசுவாசி ராம்பாலின் மனைவி விடுவிக்கப்பட; சுதேச ஊழியர்களான விஜய்குமார், யதிஷ்குமார், ராகேஷ் சந்திரா ஊழியத்தை உற்சாகத்தோடு ஊக்கமாய் செய்ய ஜெபிப்போம்.

### பஹ்வா: காய் மின் தாங், அனில் குமார்

**துதிக்க:** நான்கு கிராமங்களில் நற்செய்தி பிரசங்கிக்கப்பட்டதால் 10 பேர் புது வாழ்விற்குள் வந்துள்ளனர். வீடியோ தயாரிக்கும் நிகழ்ச்சியில் சபை மூப்பர்களும் சுதேச ஊழியர்களும் தங்கள் சாட்சியைப் பகர்ந்தனர். மூன்று ஆண்டுகளாக மலேரியாவால் அவதியுற்ற குமாரியா ஜெபத்தால் சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** தன் இரு சிறுநீரகங்களிலும் அறுவை சிகிச்சைக்கு ஆயத்தப்படும் நமது விசுவாசி கோரிலாலுக்காக; சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் சந்தீப், சோனி, மான்டில் குடும்பங்கள் இயேசுகிறிஸ்துவைத் தம் இரட்சகராக ஏற்றுக்கொள்ள; எதிர்ப்பாளர்களால் மிரட்டப்படுகின்ற சுதேச ஊழியர் ஜெய்லால் தன் விசுவாசத்தில் உறுதியாயிருக்க ஜெபிப்போம்.

ஏப்ரல்
9
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. லிடியா அகஸ்டஸ் புஷ்பராஜ்

# மத்தியப் பிரதேசம்

## சிரியா & கண்ட்வா விடுதி:

**ஏகலைவன் ஜேம்ஸ் & பெரில்**

**துதிக்க:** 11 கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டது. நர்வாடி கிராமவாசியான விசுவாசி அருணாவை கர்த்தர் குழந்தையால் ஆசீர்வதித்துள்ளார். பாம்பு கடித்தபோதும் பாவ்சிங்கை கர்த்தர் காப்பாற்றினார். பள்ளிப்படிப்பு மற்றும் ஆவிக்குரிய வாழ்வு ஆகியவற்றில் விடுதி மாணவர்கள் நன்கு வளர்ந்து வருகின்றனர்.

**ஜெபிக்க:** கர்க்குண்டி கிராமவாசி சலிதா உடல் வீக்கத்திலிருந்தும், தம்காடா கிராமத்தைச் சார்ந்த தயாராம் வாய்பேச முடியாத நிலையிலிருந்தும், மண்ட்காட் கிராமவாசி கலாபாய் நரம்பு பிரச்சனையிலிருந்தும் சுகமாக; கொக்கடியா மொகல் கிராமத்தைச் சார்ந்த லால்சிங்கின் குடும்பப் பிரச்சனை சுமூகமாகத் தீர்க்கப்பட; விடுதியின் அனைத்து சிறுவர்களின் தேவைகளும் சந்திக்கப்பட; ஜெபிப்போம்.

## நேப்பாநகர்: ஜுபராஜ் பர்தன் & ஷீபா

**துதிக்க:** ஒரு கிராமத்தில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது; 21 பேர் இயேசுகிறிஸ்துவிடம் வந்துள்ளனர். கோல்கெதா கிராமவாசி சீதாராம் பக்கவாதத்திலிருந்து கர்த்தரால் சுகம் பெற்றார்; ரமலா கால் வீக்கத்திலிருந்தும், தேவிரபாடா கிராமத்தைச் சார்ந்த நூரிபாய் மூட்டுநோயிலிருந்தும், பளாசுர் கிராம வாசி அனிதா வாய்பேச முடியாத நிலையிலிருந்தும் ஷோபாராம் அடிவயிற்று வலியிலிருந்தும் சுகம் பெற்றனர்.

**ஜெபிக்க:** விசுவாசத்திலிருந்து பின்மாற்றமடைந்த தினேஷ், மகேஷ், கணேஷ், நிலேஷ், கோபால், சுரேஷ், அஷன், ஜித்தன் , கரன் மற்றும் தீப்சிங் ஆகியோர் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; உஜ்வாலா பகுதியைச் சார்ந்த கோல்தெதா வலிப்பு நோயிலிருந்தும், ஹைதர்பூர் பகுதியைச் சார்ந்த சீதாராம் பக்கவாதத்திலிருந்தும், படேல்தினா பகுதியைச் சார்ந்த ராதாபாய் தொடையிலிருக்கிற காயத்திலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## *அற்புத சுகத்தால் கர்த்தரிடம் வந்தார்!*

*உத்தரப் பிரதேசம், பஹ்வா பணித்தளம், பாந்தே கிராமத்தைச் சேர்ந்தவர் அருண் பாந்தி. இவரது இளைய சகோதரி, அசுத்த ஆவியின் தாக்குதலால் விஷ மருந்தைக் குடித்துள்ளார். மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது, பிழைக்கமுடியாது என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர்; அவரது வாயிலிருந்து இரத்தம் வர ஆரம்பித்தது. ஜெபத்திற்காக நமது ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டார். ஜெபத்தைக் கேட்ட கர்த்தர், அசுத்த ஆவியின் பிடியிலிருந்த அந்தப்பெண்ணை விடுவித்ததால் அவர் பூரண சுகம் பெற்றார். அவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஆராதனையில் ஒழுங்காகப் பங்கேற்கிறார். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக!*

ஏப்ரல்
10
வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆபிரகாம் ஜி., திருமதி. ஜெயந்தி துரைசாமி
திரு. டேவிட் ஹன்ஸ்தக்

## பீஹார்

### அரரியா: ஆனந்தன் & நிஷா, தினேஷ் பவார் & பாருடு சில்லாபாய்

**துதிக்க:** மூன்று கிராமங்களில் (மாதவா ரிசிதாவ், சௌரகா, லோடோலியா) நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டது. துமிரியா, கஜிவி, பெலலோபோடியா, ரங்தபா, பால்படி, குர்சகட்டா, கோத்திஹாட், ராணிகஞ்ச் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற பின்தொடர் ஊழியம் ஆசீர்வாதமாக அமைந்தது; பலர் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைப் புதுப்பித்துக்கொண்டனர். ஃபோர்பஸ்கஞ்ச் கிராமத்தில் நடைபெறவுள்ள விசுவாசிகளின் முகாமில் பங்குபெற விசுவாசிகள் முழு மனதுடன் சம்மதித்தனர்.

**ஜெபிக்க:** மதுவை தயாரித்து, கிராமம் முழுவதும் விற்று, பலரை மதுவுக்கு அடிமை யாக்கியுள்ளதற்குக் காரணமான டுன்டுன் ரிசிதாவ் இரட்சிக்கப்பட; அனைத்துப் பகுதி களிலும் நற்செய்தியை அறிவிக்க நமக்குக் கிடைத்துள்ள தொடர்பாளர்களான மாதவ், நிசிதாவ், சம்புரி சிதாவ், மனோஜ் ரிசிதாவ், சஞ்சய் ரிசிதாவ், ஆதார்ஸ்பாஸ்வான், தீரன் மண்டல், மித்லேஷ் ரிசிதாவ் ஆகியோரை கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்த; தங்கள் மக்கள் மத்தியில் புது விசுவாசிகள் தங்கள் சாட்சிகளை விவரிக்க; நமது ஊழிய விரிவாக்கத்திற்குத் தேவையான சுதேச ஊழியர், தன்னார்வத் தொண்டர் கிடைக்க ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### மோகுல் பஹாடி சிறுவர் விடுதி: பாகி சதீஷ் & முத்தா ரத்னகுமாரி

**துதிக்க:** 32 கிராமங்களில் நற்செய்தி புதிதாக விவரிக்கப்பட்டது; ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தார். பாஸ்கந்திரி, ரக்காபானி, குஷ்பஹாரி கிராமங்களில் புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளனர். நீண்டகால வலிப்புநோயிலிருந்து கர்த்தர் கார்த்திக்கை சுகமாக்கினார்.

**ஜெபிக்க:** குஷ்பகாரி, தலாஹி பகுதி களில் இயேசுபடம் திரையிடப்பட; பகத்பூர் சபையைச் சார்ந்த தனுபுஜார், நோடு புஜார், பத்ராஸ் புஜார் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; தல்கி கிராம ஆலயக்கட்டு மானப்பணி விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

### சப்பாண்டே மால்தோ சிறுவர் விடுதி: டிங்கேவ் செமா & இலா செமா

**துதிக்க:** அரசு தேர்வுக்காக ஆயத்தப்படும் மாணவர்கள் செய்முறைத் தேர்வை நன்கு எழுதியுள்ளனர். டோம்கா பகுதி யில் உள்ளூர் பணியாளர்களுக்காக நடை பெற்ற ஆவிக்குரிய கூடுகையை கர்த்தர் ஆசீர்வதித்தார். பல்வேறு நோய்களால் அவதிப்பட்ட விடுதிச் சிறுவர்களுக்கு கர்த்தர் சுகமளித்தார். ஐந்துமாத முயற்சிக்குப்பின் ஆஷா நிவாஸ் சிறுவர் விடுதிக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**ஜெபிக்க:** இளைஞர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் நிறைவேற்றப்பட; கோடை விடுமுறையில் சிறுவர்கள் தங்கள் விசுவாசத்தையும் பரிசுத்தத்தையும் பாதுகாத்துக்கொள்ள; சப்பாண்டே விடுதி யில் உணவு உண்ணும் அறை விரைவில் கட்டி முடிக்கப்பட தேவையான நிதி கிடைக்க ஜெபிப்போம்.

## ஏப்ரல் 11
சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பியூலா ஜெயக்குமார்
திருமதி. பெரில் சிரோமணி ஏகலைவன்
திரு. பீட்டர் பிரபாகரன், செல்வி. ராஜேஸ்வரி ஜெ.

### ராம்கார்: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** 10 கிராமங்களில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது; 11 பேர் புதுவாழ்விற்குள் வந்துள்ளனர். குக்குர்கட்டா பகுதியில் புது ஆலயம் கட்டத் தேவையான நிலம் பதிவு செய்யப்பட கர்த்தர் உதவினார். திருச்சபை மூப்பர்கள், ஜெபக்குழுத் தலைவர்கள், விடுதிச் சிறுவர்களின் பெற்றோர்கள் ஆகியோருக்கு நடைபெற்ற கூடுகையில் பலர் ஆசீர்வதிக்கப்பட்டனர். சில எதிர்ப்பாளர்களால் அச்சுறுத்தப்பட்ட மாராண்டியை கர்த்தர் பாதுகாத்தார்.

**ஜெபிக்க:** வாய்ப் புற்றுநோயினால் அவதியுறும் விசுவாசிக்கு ( டோல்கட்டா பகுதி ) கர்த்தர் சுகமளிக்க; தன்னுடைய குடும்பத்திலிருந்து பிரிந்துள்ள சபை மூப்பர் ஜோசப் சபாய்தமா மனந்திரும்ப ஜெபிப்போம்.

### பாக்குடியா & மகேஷ்பூர்: ரமேஷ் வேல்ராஜ் & பிரிசில்லா

**துதிக்க:** 37 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். 400 விசுவாசிகள் பங்கேற்ற விசுவாசிகள் கூடுகையை கர்த்தர் ஆசீர்வதித்தார். பனியாவிலுள்ள நமது சிறுவர் பராமரிப்பு மையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தோர் தற்சமயம் எதிர்ப்பைக் கைவிட்டுள்ளது கிராமத்தினரின் ஆதரவு பராமரிப்பு மையத்திற்கு இருப்பதே காரணம். மனுமராண்டி என்ற மந்திரவாதியை மரணப்படுக்கையிலிருந்து கர்த்தர் காப்பாற்றியதால், அவரும் அவருடைய குடும்பமும் திருச்சபையில் இணைந்தனர். தன்னுடைய குடும்பத்தில் சுகம் பெற்றதற்காக ஒரு விசுவாசி தம்கியோடோலா ஆலயத்திற்குக் காளையை இனாமாக வழங்கியுள்ளார்.

**ஜெபிக்க:** லக்டும் பகுதியில் ஆலயக்கட்டுமானப்பணியைத் தடுத்து நிறுத்தியுள்ள எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; மைக்கேல் ஹெம்ரோம் குடும்பம் குழந்தைச் செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; பரிசுத்த ஆவியின் வல்லமையுடனும் ஞானத்துடனும் சபை மூப்பர்கள் திருச்சபையை வழிநடத்த ஜெபிப்போம்.

### கத்திகுண்ட்: ஜேக்கப் ஞானப்பண்டிதன் & சாந்தி

**துதிக்க:** மால்தோ சுதேச ஊழியர் குடும்பக் கூடுகையை கர்த்தர் வல்லமையாக ஆசீர்வதித்தார். ஹாரஜோதி பணித்தளம் – சந்தால் சபை மூப்பர் குடும்பக் கூடுகை; மோகுல் பஹாடி பணித்தளம்– மால் பஹாரியா சபை மூப்பர்கள் கூடுகை மற்றும் மால்பஹாரியா பெண்கள் சிறு ஜெபக்குழு கூடுகை; தும்கா மாவட்டத்தில் எட்டு தாலுகாக்களில் ஆய்வுப்பணி நடத்தப்பட்டது. கால் வீக்கத்திலிருந்து குலாப் சிங் சுகம் பெற்றார். வீட்டிற்குள் நுழைய பயப்பட்ட பபிதாவின் பயத்தை கர்த்தர் நீக்கினார்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் சந்தோஷ்ராய் இரட்சிக்கப்பட; புதிய விசுவாசியான அஷாராய் முடக்கு வாதத்திலிருந்து சுகம் பெற; புய்யன் சமுதாயத்தில் ஊழியம் செய்ய தன்னார்வத் தொண்டர் ஒருவரும், அந்த மொழியைக் கற்பிக்க ஒரு ஆசிரியரும் தேவை என ஜெபிப்போம்.

ஏப்ரல்
12
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. சுசித்ரா லிம்மா

## சந்தால் சீஷத்துவ பயிற்சி ஊழியம்: சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** முதியோர் எழுத்தறிவு திட்டத்தின் வாயிலாக 22 பேர் வேதாகமத்தைத் தெளிவாக வாசிக்கக் கற்றுள்ளனர். தும்காவில் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சியை கர்த்தர் ஆசீர்வதித்தார். வேதாகம வகுப்பில் பங்கு பெறுகின்ற முதியோர் எளிதாக வேத வசனங்களை மனனம் செய்யும் முறையைக் கற்றுள்ளனர். தங்களுடைய அறுவடையிலிருந்து தசமபாகத்தை நமது விசுவாசிகள் தவறாமல் அளிக்கின்றனர்.

**ஜெபிக்க:** முதியோர் எழுத்தறிவு திட்டத்தில் பங்கேற்கும் அனைவரும் வேதாகமத்தை வாசிக்க; சுதேச ஊழியர் பத்ராஸ் பெஸ்ராவின் மனைவி இறந்ததால், சுதேச ஊழியரும் பிள்ளைகளும் கர்த்தரின் ஆறுதலில் நிலைத்திருக்க; மண்ட்ரோ, சுந்தர்பஹாடி, ராம்கார் பணித்தளங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு அளிக்கப்பட இருக்கும் பயிற்சி ஆசீர்வாதமாக அமைய; புதிய மிஷனெரிப் பயிற்சியாளர்களான சுசித்ரா லிம்மா, பாரதி மகாதேவ் ஆகியோர் ஊழியத்தைப் பற்றிய தெளிவானப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

## பதரியா:

**அகஸ்டின் பிஜி & மன்னா ராஜ வித்யா**

**துதிக்க:** கோக்டா, போட கோக்டா, காண்டியாமு, சிம்பி, ரோடி டெலோ, தும்பிரி கோடா பகுதிகளில் வாழும் விசுவாசிகள் மத்தியில் ஆறுநாட்களாக சுவிசேஷ ரத ஊழியம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலமாக இரு இடங்களில் சபைகள் மீண்டும் உயிர்பெற்றன. கோகடா கிராமத்திலிருந்து ஒரு குடும்பம் திருச்சபையில் இணைந்துள்ளது. சோக்னோ கிராமத்தில் பின்மாற்றம் அடைந்திருந்த விசுவாசிகள் மீண்டுமாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். தும்பிரிகோடா திருச்சபை ஆலயக்கட்டுமானப்பணி முற்றிலுமாக முடிக்கப்பட்டது.

**ஜெபிக்க:** இம்மாதத்தில் நடைபெறவுள்ள சபை மூப்பர்களின் கூடுகைகளின் ஆசீர்வாதத்திற்காக; காசநோயிலிருந்து தேவபஹாடியா சுகம் பெற; பின்மாற்றமடைந்த விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருக்க ஜெபிப்போம்.

## *மாற்றத்திற்காக சிறப்பு ஜெபம் தேவை!*

*மகாராஷ்டிரா மாநிலம், முக்காடா பணித்தளம், மொராதா கிராமத்தில் ஹோலி, வார்தி, கட்காரி இனத்தைச் சார்ந்த 300 குடும்பங்கள் வசிக்கின்றனர். இக்கிராமத்தில் நமக்கு சில விசுவாசிகளே உள்ளனர். மது தயாரித்தல், மது அருந்துதல், சூதாட்டம் ஆகியவற்றை இக்கிராம மக்கள் பின்பற்றி வருகின்றனர். ஆண்கள் வெளியே வேலைக்குச் செல்லாமல், சூதாட்டத்திலேயே நேரத்தைச் சோம்பலாகக் கழிக்கின்றனர். நற்செய்தியை இக்கிராமத்திற்கு எடுத்துச் செல்ல நமது மிஷனெரிகள் முயற்சி செய்கின்றனர். இந்த மக்களின் மனதையும் இதயத்தையும் கர்த்தர் திறப்பதின் மூலமாக இக்கிராம மக்களிடம் மாபெரும் மாற்றம் ஏற்பட வேண்டுமென ஜெபிப்போம்.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிடியா சுதர்சன் தாமஸ்
திருமதி. அகோனி குட்டோய் அச்சுமி
திரு. கிறிஸ்டியன் பிரகாஷ்
திருமதி. ஜெபமலர் ராஜன்

## தம்னி :

### ஜாண்பால் ஹேரீஸ் & விமலா டெய்சி

**துதிக்க:** 18 பேர் புதிய வாழ்விற்குள் வந்துள்ளனர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் கங்குபாடா சிறுமியர் விடுதியில் தம்னி பணித்தளத்திலிருந்து ஆறு சிறுமியர் சேர்ந்துள்ளனர். பெதகாதி கிராமத்தைச் சார்ந்த கோலியா மால்தோ, புராமாகா கிராமத்தலைவரான எட்ரோ மால்தோ ஆகியோர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டுகின்றனர்.

**ஜெபிக்க:** ஞாயிறு ஆராதனை நடத்துவதிலும் பயிற்சியில் பங்கேற்பதிலும் சபைமூப்பர்கள் இன்றும் அதிக உற்சாகத்தோடு செயல்பட; அடிக்கடி வலிப்பு நோயினால் அவதியுறும் லீலாதினி பகுதியைச் சார்ந்த மரியம் மால்தோ சுகம் பெற; குராமு பகுதி கிராமத்தலைவர் காவ்ரே மால்தோ, லீலாதினி பகுதியைச் சார்ந்த கிராமத்தலைவர் சம்ரா மால்தோ ஆகியோர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டவும் இதனால் அப்பகுதியே கிறிஸ்துவுக்குள் வரவும்; குவாதமு, குண்டெகோடா கிராமங்களில் ஆலயக் கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

## ஸஹர்ஜுடி:

### ஹென்றி & பியூலா, சிவ்சங்கர் & காந்தி

**துதிக்க:** 15 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; 8 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். மரணப் படுக்கையிலிருந்த சரஸ்பத் சபையைச் சார்ந்த எமிலி சுகம் பெற்றார். தங்கள் மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் சுதேச ஊழியர்களை கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்துகின்றார்.

**ஜெபிக்க:** ஸஹர்ஜுடி கிராமத்தில் திருச்சபையில் இணைய ஆயத்தப்படுகின்ற நான்கு குடும்பங்களுக்காக; பக்கவாதத்திலிருந்து தினேஷ் கிஸ்கு சுகம்பெற; ரோடன், கோஸ்லோரா, பொகோவா, இந்தாரி, கியோலோரியா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறதற்குத் திறந்த வாசல் உருவாக; லோபின் சோரேன், கடுதுடு, ஜெதா துடு ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## நாளா:

### ஜெரால்டு சேவியர் & ஜியோத்சனா

**துதிக்க:** மூன்று தன்னார்வ ஊழியர்கள் ஊழியத்தில் இணைந்துள்ளனர். சந்தால்டி கிராமத்தைச் சார்ந்த சபை மூப்பர் ஆலயம் கட்ட நிலத்தை இலவசமாகக் கொடுத்துள்ளார். சூரியபானி கிராம வாசிகயான சந்த் முனியைப் பல்வேறு நோய்களிலிருந்து கர்த்தர் சுகமாக்கினார்.

**ஜெபிக்க:** தஸ்குட்டி கிராமத்தில் நற்செய்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் மனந்திரும்ப; திருச்சபையில் இணைவதால் குடும்பத்தினரிடமிருந்து எதிர்ப்பு கிளம்பும் என்ற பயத்திலிருந்து கரியக்குட்டு கிராம வாசியான சுக்கு தர்மு விடுவிக்கப்பட; சந்தால்டி கிராமத்தில் ஆலயம் கட்ட எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியடைய ஜெபிப்போம்.

## ஏப்ரல் 14 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹெப்சிபா ஜேக்கப் பிரதீப் குமார்
திருமதி. ராஜம் பால் சம்பத்
திருமதி. கண்மணி ராஜாசிங், திரு. பிஜய் மால்தோ

### ஹன்ஸ்டிகா:
**உப்தேஷ்குமார் &**
**சீகோதாங் செள**

**துதிக்க:** புதிதாக 20 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; மூவர் கிறிஸ்துவுக்குள் வந்தனர். புது கிராமங்களில் நடைபெற்ற ஐந்து திரைப்பட நிகழ்ச்சிகளை கர்த்தர் ஆசீர்வதித்தார். சர்வா கிராம வாசியான ரோஹித் முர்முவை கண்நோயிலிருந்தும், குசாகா கிராமத்தைச் சார்ந்த மகு கிஸ்குவை புற்று நோயிலிருந்தும், பூனம் மராண்டியை நெஞ்சு வலியிலிருந்தும் கர்த்தர் காப்பாற்றி சுகம் கொடுத்தார்.

**ஜெபிக்க:** இம்மாதத்தில் நடைபெறவுள்ள நிகழ்வுகள் ஆசீர்வதிக்கப்பட; லுசியா கிராமத்தைச் சார்ந்த டெதி மாய்துடு காசநோயிலிருந்தும், தேவியாலா மராண்டி வாதநோயிலிருந்தும், மரிய சோரேன் வலிப்புநோயிலிருந்தும், தேனா முர்மு காலாசார்நோயிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

### ரானேஷ்வர்:
**குமரவேல் & மரியாள்**

**துதிக்க:** 21 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது லாரி விபத்திலிருந்து விசுவாசி கோரோன் துடு பாதுகாக்கப்பட்டார். பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட 13 கூடுகைகளை கர்த்தர் ஆசீர்வதித்தார். பகோலா, சூசைலியா, சல்டான்கால் கிராமங்களில் விசுவாசி களின் கூடுகை சிறப்பாக நடைபெற்றன.

**ஜெபிக்க:** ராம்நகர் பகுதியில் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவோர் திருச்சபையில் இணைய; பகோலா கிராமத்தில் விசுவாச பின்மாற்றம் செய்த விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்து உறுதிப்பட; மூன்று மாதங்களாக மரணப்படுக்கை யிலிருக்கும் ரூபிலால் கிஸ்கு சுகம் பெற; குலாம்தி கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

### நோனிகட்:
**லெட்கோலுன் பெய்ட் &**
**ஹேட்நெய்கிம்**

**துதிக்க:** ஆறு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; 18 பேர் கிறிஸ்துவிடம் வந்தனர். 14 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டது; இதன் வாயிலாகப் பலர் நற்செய்திக்குச் செவி சாய்த்துள்ளனர். கர்த்தரால் சோனோதி சோரேன் வலிப்புநோயிலிருந்து குண மாக்கப்பட்டார்.

**ஜெபிக்க:** தம்னா ஆலயக்கட்டுமானத் தின் இறுதிப்பணிகள் முடிக்கப்படவும், பிரதிஷ்டை ஆராதனை சுமூகமாக நடத்தப்படவும்; சோட்டோ முர்மு, மகு சோரேன் குழந்தைச் செல்வத்தால் ஆசீர் வதிக்கப்பட; அடிக்கடி ஓடிவிடும் சுதேச ஊழியர் யோசுவா முர்முவின் மகனுக் காக ஜெபிப்போம்.

## ஏப்ரல் 15 புதன்
உபவாச ஜெபநாள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. பாசுதேவ் மால்தோ
திருமதி. ஜெபா தெபேராள் வேதமாணிக்கம்

### சிக்காரிபாடா:
**மனோஜ்குமார் பானி & சந்தானி பானி**

**துதிக்க:** 19 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதின் விளைவாக 16 பேர் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர்; உல்தி கிராமத்தில் நடைபெற்ற சபை மூப்பர்களுக்கான பயிற்சியில் 85 பேர் பங்கு பெற்று பயனடைந்தனர். ஞாயிறு பள்ளிவகுப்பில் படித்துவரும் பிள்ளைகளின் பெற்றோருக்காகக் கூடுகை நடைபெற்றது; பெற்றோர்கள் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்றனர். ரம்போனி ஆலயத்தின் மேற்கூரைப்பணி விரைவில் முடிக்கப்பட வேண்டும்.

**ஜெபிக்க:** கிராமத்தலைவர் நற்செய்திக்காகத் திறந்தவாசல் ஏற்படுத்த; வாலிப விசுவாசிகள் சாட்சியுள்ள வாழ்க்கை நடத்த; துர்காபூர் கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் தொடங்க; நடைபெற்றுக்கொண்டிருக்கும் ரம்பூனி ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் முடிய ஜெபிப்போம்.

### மசலியா:
**முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்**

**துதிக்க:** 15 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; 10 பேர் புது வாழ்விற்குள் வந்தனர். தலைவர்கள் கூடுகையில் தலைமைத்துவத்தின் முக்கியம் விளக்கப்பட்டது. தலைவர்களின் கூடுகை ஆசீர்வாதமாக அமைந்தது. ஐந்து மணி நேரம் சுய நினைவற்றிருந்த மேங்கோல் துடு கர்த்தரால் சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** ஜில்வா கிராமத்தைச் சேர்ந்த ஹிவ்தோன் மராண்டி குடும்பம், போடோன் சோரேன் குடும்பம் இரட்சிக்கப்பட; குழந்தைப்பருவத்திலிருந்தே சரியாகப் பேசமுடியாமலிருக்கும் பிரச்சி மரியம் ஹெம்ரோம் சுகம் பெற; புது விசுவாசிகள் மீது மந்திரத்தை ஏவி அவர்களை விசுவாசத்திலிருந்து வழுவிப்போக முயற்சி செய்யும் மந்திரவாதிகள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### ஜமா & மண்ட்ரோ விடுதி:
**வடேகர் திலிப் &**
**கொன்கனி பாரதிபேன்**

**துதிக்க:** 12 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது, 3 பேர் கிறிஸ்துவிடம் வந்துள்ளனர். பக்குலு முர்மு, சோனாலி முர்மு ஆகியோர் மூளை மலேரியாவிலிருந்து ஜெபத்தால் சுகம் பெற்றனர். பள்ளிப்படிப்பு, ஆவிக்குரிய வாழ்க்கை ஆகியவற்றில் விடுதி மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

**ஜெபிக்க:** சபை மூப்பரான பாபுஜி கிஸ்கு, சுமி முர்மு மழலைச்செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; ரோசோதோன் மராண்டி, அனில் ஹெம்ரோம் வலிப்புநோயிலிருந்து சுகம் பெற; எல்லா விசுவாசிகளும் தீயப் பழக்கங்களை அடியோடு விட்டுவிட; பர்க்கா துடு, காலேசா் முர்மு ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஏப்ரல்**
**16**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன்
திருமதி. அமுதா குமார்பால்
திரு. ஸ்ரீனிவாசன் ஜெ., திரு. டென்சிங் ஆர்.
திரு. அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா

# மேற்கு வங்காளம்

## மால்டா , கசோல் :

### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** 12 கிராமங்களில் சுவிசேஷப்பணி மேற்கொள்ளப்பட்டது; 55 பேர் இயேசுகிறிஸ்துவண்டை வந்துள்ளனர். சீதாபூர் கிராமத்தில் நற்செய்திக்குத் திறந்த வாசல் ஏற்பட்டுள்ளதால், பலர் நற்செய்திக்கு ஆர்வம் தெரிவிக்கின்றனர். பணியின் காரணமாக வீட்டைவிட்டு எங்கோ சென்ற விசுவாசியின் மகன் பிரதீப், பலமாதங்களுக்குப் பிறகு பத்திரமாக வீட்டுக்கு வந்து சேர கர்த்தர் உதவினார்.

**ஜெபிக்க:** குமார்பூர், சகார்திகீ, தீப்திபூர் பகுதிகளிலுள்ள ஆசிரியர் பயிற்சி, கல்லூரிகளில் சுவிசேஷ இரத ஊழியம் ஆசீர்வாதமாக நடத்தப்பட; திருச்சபையில் இணையக் கூடாதபடி தடைசெய்கிற சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; ராம்சந்பூர், பகதூர்பூர் கிராமத்தினர் இரட்சிக்கப்பட; நற்செய்திக்கு ஆவல் காட்டும் சிராஷின் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வர ஜெபிப்போம்.

## ராணிகன்ஜ்:

### தாங்கோபௌ & சோங்நெய்கிம்

**துதிக்க:** ஹரிபுகூர், கலிதலா, முலானிபூர் ஆகிய கிராமங்களில் உள்ளூர் அமைப்பின்படி ஆலயக்கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பணித்தளத்திலுள்ள மக்களிடம் கர்த்தரின் வல்லமை அசைவாடுவதால் பல குடும்பங்கள் கிறிஸ்துவைப்பற்றி அறிந்து கொண்டனர். கனவுகள், அற்புதங்கள் வழியாக கர்த்தர் இங்குள்ள மக்கள் மத்தியிலே தலையிட்டு கிரியை செய்கின்றார். நீண்டநாளாக நோயினால் அவதியுற்ற ருதின் முர்மு கர்த்தரால் சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** லவன்டங்கா, காந்தோர் கிராமங்களில் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் முடிய; விசுவாசிகள் கட்டுமானப்பணியில் உற்சாகமாய்ப் பங்குகொள்ள; புற சுவிசேஷப்பணி சுமூகமாக நடைபெற; உறவினர்களிடம் நற்செய்தியைக் கூறுவதின் மூலமாகப் பலர் கிறிஸ்துவண்டை வர ஜெபிப்போம்.

## சம்சி: தீஹே & சரணி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 13 இடங்களில் நடைபெற்ற மாலைநேரக் கூடுகைகள் பலருக்கு ஆசீர்வாதமாக அமைந்தது, மக்கள் நற்செய்திக்கு செவி மடுத்தனர். நமது நாடகக்குழு மக்களின் நற்செய்தியை மக்களுக்கு அறிவிக்கின்றனர். இளைஞர் முகாமில், பல வாலிபர்கள் தங்களை கர்த்தருக்கு அர்ப்பணித்துள்ளனர்.

**ஜெபிக்க:** நமது சபை மூப்பர்கள் சியோன் துடு, டேனியல் மார்டி, ஜேக்கப் துடு தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருக்க; சம்சி பணித்தளத்திலுள்ள வாலிபர்கள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; விசுவாசிகளின் பிள்ளைகள் சிறந்த கல்விகற்று சமுதாயத்திற்கும், திருச்சபைக்கும் தூண்களாக விளங்க ஜெபிப்போம்.

## ஏப்ரல் 17 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்தனிஸ்லாஸ் சுவாமிதாஸ்
திரு. பிரபாகர சாரதி, திரு. பாபு பி.
திருமதி. மேரி ஜாண்சி ராணி பென்ஹர்

### ஹல்திபாரி:

**அனில் குமார் பிசோயி & ஆலிஸ்**

**துதிக்க:** ஐந்து கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டது. தனிநபர் சுவிசேஷ ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார், பலர் நற்செய்திக்கு ஆர்வம் தெரிவித்துள்ளனர்.

**ஜெபிக்க:** பாலதோங்கா, கல்பாரா, தயாபாரா கிராமங்களில் இயேசு திரைப்படத்தின் மூலமாக நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட; ராஜ்போன்ஷி மக்கள் இனத்தில் வீடுகள் தோறும் நற்செய்தி அறிவிப்பதன் வாயிலாக புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; புதிய தொடர்பாளர்கள் அல்டர்ஃபார் ஹுசன், ஜக்குர் ஹுசன், சாம்சோனாலி, சங்கர் ராய், ஹரிஷ் ராய், சுபாஷ் ராய், நிபேஷ் ராய், உஸ்மனி கனி, சுனில் ராய், ஜீன்போன்சில், அனில் ராய், கௌதம் ராய், ரோதன் ராய், தீபக் ராய் மற்றும் அசோக் ராய் – ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற்றம் காண ஜெபிப்போம்.

### தபன்: ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** எட்டு பேர் கிறிஸ்துவுக்குள் வந்துள்ளனர். 11 கிராமங்களில் நடைபெற்ற சுவிசேஷ பயிற்சியின் அங்கமாகிய புற சுவிசேஷ ஊழியத்தில் பங்குபெற புது மிஷனெரிப் பயிற்சியாளர்கள் ஊழியத்தில் இணைந்துள்ளனர். டைபாஃய்டு, மஞ்சள் காமாலைநோய்களிலிருந்து பாதோ முர்மு சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** தோக்கால்பூர் சபை விசுவாசிகள் மத்தியில் எழுப்புதல் எழும்ப, ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; நாராயண்பூர் கிராமத்தில் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவோர் கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ராம்கிருஷ்ணாபூர், குடிடோலா, பிர்பாரி, கோலன், பஞ்ச்கதா, ராம்பூர், தபான், மாலிகாவ், ஹம்ஜபூர், புரதன் கங்காராம்பூர் கிராமங்களில் ஆராதனை மையங்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

## அஸோம்

### சிலபதார்:

**பாகிரதி பிசோயி & லால்மணி டிகல்**

**துதிக்க:** ஒருவர் கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்துள்ளார். மதுவுக்கு அடிமையாயிருந்த சுபாஷ்மிலி ஆராதனையில் பங்கேற்றபோது, கர்த்தரால் தொடப்பட்டு மதுப் பழக்கத்தை விட்டுவிட்டார். சிலர் எங்களைத் தவறான கண்ணோட்டத்துடன் பார்ப்பினும், முரேகாங் சபுராய் கிராமத்தில் நற்செய்திக்குத் திறந்த வாசல் உருவாகியுள்ளது. சில கிராமங்களில் திறந்த வாசல்களை கர்த்தர் கொடுத்ததின் மூலமாக, பல புதிய தொடர்பாளர்கள் நமக்குக் கிடைத்துள்ளனர்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்ற நிருமாய் நோராவின் குடும்பம், புஸ்திக்காயென் குடும்பம், சோசின் மோகோராாங், கஜாதாயி குடும்பம், ரோஜாதோல் குடும்பம் ஆகியோர் இரட்சிக்கப்பட; பேச முடியாமலும் செவிகேளாமலுமிருக்கிற கபிதா சுகம் பெற; ஆலயத்தில் இணைவதற்குரிய தடைகளை மோரோமி மேற்கொள்ள; குந்தி, ஓரன்யி, போர்செலக், பொடுவா, கோபதுலி கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கத் திறந்த வாசல் உருவாக ஜெபிப்போம்.

## ஏப்ரல் 18 சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரூபன் சாமுவேல். ஜே
திருமதி. மேரிகுட்டி வின்செண்ட்
திருமதி. லிஸி வாவச்சன்
திரு. கோல்டன் ஜே. இன்பராஜ்
திருமதி. பிரிசில்லா ரமேஷ் வேல்ராஜ்
திருமதி. கீதாஞ்சலி நாயக்
திரு. ஜாண்டேவிட்சன் செல்வராஜ்

### மாஜூலி:

**ரபீந்திர மூர்மு & செலினா மராண்டி**

**துதிக்க:** மூன்று கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; நற்செய்திக்கு 25 பேர் செவிகொடுத்து, நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்றனர். வாலிபர்களுக்காக நடத்தப்பட்ட கூடுகையில் 52 வாலிபர்கள் தங்களை கர்த்தருக்கு அர்ப்பணித்துள்ளனர். புரோஜன் தோலேயின் மனைவி புற்றுநோயிலிருந்து சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்து, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைய; அர்ஜுன்குரி, பிகெஸமோரா, ஜுகிபாரி, பெக்கேலி, காம்ரெக் கிராமங்களில் நற்செய்தி அறிவிப்பதற்குத் திறந்த வாசல் கிடைக்க; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிராத இடங்களில் சுவிசேஷ ஊழியம் செய்ய சுதேச ஊழியர்கள் முன்வர; மிஸ்ஸிங் இனமக்களிடம் காணப்படும் தீயப் பழக்கங்கள் வேரறுக்கப்பட ஜெபிப்போம்.

### நாராயண்பூர்:

**சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா**

**துதிக்க:** ஒரு கிராமத்தில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது; மூவர் கிறிஸ்துவிடம் வந்தனர். லக்கிபதர் கிராமத்தில் ஜெப ஐக்கியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஊழியத்தில் தன்னார்வ விருப்பத்தை பிரனாபுகுட்டம் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஜெபிக்க:** லக்கிபதர், லகாசு, சிகலாந்துதி, போர்பில், போதகனா பகுதிகளில் நடைபெறும் ஜெப ஐக்கியம் ஒழுங்காக நடைபெற; செக்லின் சுதி, பொதகானா கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட; சோக்கியால் கிராமத்தில் எவ்விதத் தடையுமின்றி ஜெப ஐக்கியம் உருவாக ஜெபிப்போம்.

### வடகிழக்குப் பிராந்தியம்:

**ஆரோன்சிங் நர்சாரி & ரீனா**

**துதிக்க:** ஐந்து கிராமங்களில் நடைபெற்ற விசுவாசிகளின் முகாம்களால் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் உற்சாகப்படுத்தப்பட்டனர். பிராந்திய அளவில் நடத்தப்பட்ட திட்டக் கூடுகையால் மிஷனெரிகளின் அர்ப்பணிப்பும் ஊழிய தரிசனமும் விரிவாக்கப்பட்டது. புது கிராமங்களில் நற்செய்தியை எடுத்துச் செல்வதற்கேதுவாக ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஜெபிக்க:** நற்செய்தியை சிறப்பாக எடுத்துச்செல்ல கிராமங்களில் புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; தந்தையை இழந்து தவிக்கின்ற செலினா முர்முவின் ஆறுதலுக்காக; பொதோவா கிராமத்தில் புதிதாக ஆராதனை தொடங்கப்பட; பொர்போனடா, சகோலா கிராமங்களில் ஆலயக்கட்டுமானப்பணி தொடங்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மெயின்ராஜ் ஜே.
திருமதி. சுவர்ணலதா சஞ்சீப் குமார் ஆன்ட்ரப்

## சத்தீஸ்கட்

### சீத்தாபூர்: பத்வி சோமாலியா மான்சுபாய் & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** 10 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; 20 பேர் இயேசு கிறிஸ்துவிடம் வந்துள்ளனர். நவபாரா பகுதியில் நடைபெற்ற விசுவாசிகளின் மூன்றுநாள் மேளா சிறப்பாக நடை பெற்றது; பலர் நற்செய்திக்கு ஆர்வம் தெரிவித்துள்ளனர்; ஜெபத்தின் மூலமாக கர்த்தர் பல அற்புதங்களை நிகழ்த்தி யுள்ளார்.

**ஜெபிக்க:** நவபாரா, போக்சாரி பணித் தளங்களில் ஆலயக்கட்டுமானப்பணி வெகுவிரைவில் முடிய; விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; இம்மாதத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வெற்றிகர மாக நடைபெற ஜெபிப்போம்.

### பத்தல்காவ் சிறுமியர் விடுதி: லவ்லின் புன்யா & கிரண் பெங்ரா

**துதிக்க:** விடுமுறைக்குப்பின் சிறுமியர் நல்ல சுகத்துடன் விடுதிக்குத் திரும்பியுள்ளனர். விடுதியின் புது கட்டிடத்திற்கு விடுதி சுமூகமாக மாற்றப்பட்டுள்ளது. விடுதி யின் அருகில் புதிதாக ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஜெபிக்க:** அரசு தேர்வு எழுத ஆயத்தப்படும் சிறுவர்களுக்காக; அமாகனி கிராமத்தில் மதுவை உற்பத்தி செய்வோர் மனந் திரும்பி அப்பழக்கத்தை விட்டுவிட; விடுதிச் சிறுவர்கள் மூலம் அருகிலுள்ள கிராமங்களில் ஊழியம் செய்ய வேண்டும் என்ற எதிர்காலத் திட்டத்திற்காக; அனைத்து விடுதிச் சிறுமியர்களும் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வர ஜெபிப்போம்.

### பையாதன்: தங்சிங்லியான் & உன்தி யான்சிங், முத்துக்குமார் & நேத்ரவதி

**துதிக்க:** நான்கு கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டது. கோண்ட் மக்கள் நற்செய்திக்கு திறந்த மனதுடன் உள்ளனர். பல புதிய தொடர்பாளர்கள் நற்செய்திக்கு ஆவல் காட்டுகின்றனர்.

**ஜெபிக்க:** கோபா, சர்மா, சோன்பூர் கிராமங்களில் நற்செய்திக்குத் திறந்த வாசல் உருவாக, கிராமத் தலைவர்களான ரிதாசிங் (பார்ன் கிராமம்), சுஷ்மா போன்டோ (கர்சேரா கிராமம்), ஹிராலால் (உமேஷ் பூர் கிராமம்), அதியாலால் (ஜம்காரா கிராமம்) இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வர; விசுவாசி தேவாஜியின் குடும்பம் குழந்தையால் ஆசீர்வதிக்கப்பட; யாதவ், கஷ்வஹா, செர்வா, பான்தோ, பெக்ரா மக்கள் இனத்தின் மத்தியில் நற்செய்திக்குத் திறந்த வாசல் உருவாக ஜெபிப்போம்.

### பிந்தே: பாபுஜி முர்மு, எலிஷா டைம்

**துதிக்க:** ஐந்து கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பகாஞ்சூர் பகுதியில் நடத்தப்பட்ட புறசுவிசேஷ ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். சபை மூப்பர் களுக்கானப் பயிற்சி பங்கு பெற்றோருக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. நீண்டகாலமாக ஜுரத்தால் அவதியுற்ற சூஸ்மா ஜெபத்தால் சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** மொதேமக்கா பகுதியிலுள்ள எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; பிரின்சி லாவை இழந்து தவிக்கின்ற குடும்பத்தின் ஆறுதலுக்காக; ஆராதனைக்கு ஒழுங்காக வருகின்ற வதே கோவாச்சிக்கும் குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

## ஏப்ரல் 20 திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சாந்தா வினயராஜ்
திருமதி. லைசம்மா பாபு
திரு. ஜாஹர் சாய் பன்னா

### லக்கன்பூர், அம்பிகாபூர்:

**அனில் குமார் & சாரதி**

**துதிக்க:** மூன்று கிராமங்களில் சுவிசேஷம் எடுத்துச் செல்லப்பட்டது. லைகஜம் கிராமத்தில் 15 பேர் கிறிஸ்துவினிடம் வந்துள்ளனர். விசுவாசிகளால் நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூடுகையில் 300 பேர் கலந்து கொண்டனர். லதோரி, செமரா கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கங்காபூர், சட்டப்பாரா, சல்கா கிராமத்தினர் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுகின்றனர்.

**ஜெபிக்க:** கண்ணின் கீழ் கட்டியால் அவதியுறும் சுதேச ஊழியர் சன்னஷ் குணமடைய; உடலில் கட்டியால் கஷ்டப்படும் சுதேச ஊழியர் ராயலின் மனைவி சுகம் பெற; கதெத்வார், லதோர், செமரா கிராமங்களில் நடைபெறும் ஆராதனைகள் தொடர்ந்து ஒழுங்காக நடைபெற ஜெபிப்போம்.

## ஒடிசா

### ரிமுலி: சங்கர் &ஜெலின்

**துதிக்க:** பிரிகுலா, துத்துன்டி, கத்தோரி, திரிலோக்சந்பூர், ராஜபாசா கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டது. சிறிது காலம் பிரிந்திருந்த கணேஷ் & அரிபுத் தம்பதியர் ஜெபத்தின் மூலம் மீண்டும் இணைந்தனர். மங்கள்பூர் கிராமத்தில் ஞாயிறு ஆராதனை தொடங்கப்பட்டுள்ளது. சிறிது காலம் காணாமற்போயிருந்த கொங்கடபட் கிராம வாசி லலிதா மீண்டும் வீடு திரும்பினார்.

**ஜெபிக்க:** மாங்குலி சபையில் கர்த்தரைத் தொழுது கொள்கின்ற புதிய விசுவாசி தங்கள் வாழ்க்கையில் அற்புதங்களைப் பெற; மொங்காலு, ஜேமன், பஜூராம் கிராம விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருக்க; கொங்கன் கிராமத்தில் ஆராதனை ஆரம்பிக்கப்பட; சுவிசேஷத்தை எதிர்க்கும் எதிர்ப்பாளர்கள் மனம் திருந்தி, சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

## குஜராத்

### ஜாலோத்:

**பால்ராஜ் & கோயில் புஷ்பம்**

**துதிக்க:** ஐந்து கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டுளது; இருவர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். லக்கன்பூர் ஆலயக் கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆலயக்கட்டுமானத்திற்கு இடையூறாக இருந்த மின் கம்பம் பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னர் அகற்றப்பட்டது. நெஞ்சு வலியிலிருந்து ராவ்ஜிபாயும், காது உபத்திரவத்திலிருந்து சைலேஷ்பாயும் சுகம் பெற்றனர்.

**ஜெபிக்க:** அரசாங்க தேர்வு எழுத இருக்கும் விசுவாசிகளின் பிள்ளைகளுக்காக; குழந்தையை இழந்து தவிக்கின்ற நிகேஷ்பாயின் ஆறுதலுக்காக; ஆலயம் கட்ட நிலம் கொடுக்க மறுக்கும் வகேலா கிராமத்தலைவருக்காக; பக்கவாதத்தால் அவதியுறும் புது விசுவாசி மாதாபாய் சுகம் பெற ஜெபிப்போம்.

**ஏப்ரல் 21 செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அருள்மணி ஆர்., திரு. தியாகராஜன் பி.
திரு. பாகௌமுவான் நைட்டே
திருமதி. ஜெயந்தி மார்டி

## கவாண்ட் :

### ஸ்ரீராம் பஹரியா, ஜோஷி மால்தோ

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; 10 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். கிணற்றுக்குள் விழ இருந்த வசந்த்பாய் கர்த்தரால் பாதுகாக்கப்பட்டார். குடிநீருக்காக விசுவாசி மகேலி ஜெபித்தார், குறைந்த விலையில் அரசாங்கத்தின் மூலம் குடிநீரைப் பெறுகின்றார்.

**ஜெபிக்க:** காட்டமாதி கிராமத்தில் எதிர்ப்புகளின் மத்தியில் விசுவாசிகளும் சபை மூப்பர்களும் விசுவாசத்தில் உறுதியாயிருக்க; எதிர்ப்புகளை கவாண்ட் பணித்தள விசுவாசிகள் தைரியத்தோடு சந்திக்க, பின்வாங்காமல் இருக்க; கணேஷ்பாயின் குடும்பம் குழந்தையால் ஆசீர்வதிக்கப்பட; மதுப் பழக்கத்தை நிறுத்த முடியாமல் அவதியுறும் புஃபா சபை மூப்பருக்காக ஜெபிப்போம்.

## நஸ்வாடி, டபோயி:

### யுவனேஷ் & ஜாண்சி ராணி

**துதிக்க:** விசுவாசிகளின் வயல்களில் அதிக விளைச்சலை கர்த்தர் கொடுத்தார். கடுமையான குளிர் காலத்திலும் விசுவாசிகள் பாதுகாக்கப்பட்டனர். கால் வலியிலிருந்து தனிலாபேன், நீண்டநாள் தலைவலியிலிருந்து பாரதிபாய் ஆகியோர் சுகம் பெற்றனர்.

**ஜெபிக்க:** துங்கராபீல் இனமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட; கலேதியா விடுதிக்கட்டுமானத்திற்கான நிலம் சுமூகமாகப் பத்திரப்பதிவு செய்யப்பட; வாலிப விசுவாசிகளுக்கு கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கைத்துணை கிடைக்க; தண்டுவட பிரச்சனையிலிருந்து சைலேஷ்பாய் சுகம் பெற ஜெபிப்போம்.

## பாஜிபுரா:

### மார்கஸ் மால்தோ & சாரா மார்கஸ்

**துதிக்க:** ஜம்னியா கிராமத்தில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது பர்தோலி ஆலயத்தில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் 60 பேர் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டனர். கம்ப்லா கிராமத்தில் மாலை நேர ஆராதனை மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஜெபிக்க:** வாலிப விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைய; சுரேஷ், ஜிக்னேஷ், குந்தன் ஆகியோர் அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து விடுதலைப் பெற; இருதய அறுவை சிகிச்சைக்குப்பின் வாய்பேச முடியாமலிருக்கும் நமது விசுவாசி அம்ருத் சுகம் பெற ஜெபிப்போம்.

## *விசுவாசியின் ஜெப முன்மாதிரி!*

*உத்தரப் பிரதேசம், டூண்ட்லா பணித்தளம், தானுமாய் கிராமவாசியான நமது விசுவாசி ராம்சேவக் ஜெப வாழ்க்கையில் வளர ஆரம்பித்தார். அவரது ஒழுங்காக, முறையாக, தொடர்ந்து ஜெபித்தல் ஆகியவை பிற விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது. அவரது ஜெப வாழ்க்கையின் வாயிலாகக் கர்த்தர் பல்வேறு வகைகளில் அவரை ஆசீர்வதித்துள்ளார். ஜெபவாழ்க்கையோடு மாத்திரமல்லாது, தன்னிடத்தில் வருகிறவர்களுக்கு அவர் ஜெபத்தைப்பற்றி கற்பிக்கவும் செய்கின்றார். கர்த்தருக்கே மகிமை!*

ஏப்ரல்
22
புதன்
உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் நிக்கல்சன், திரு. ராஜேஷ் கே.
திருமதி. ஜெப ரோஸ் விஜயன்
திருமதி. பிதுகாந்தி லிமா ஸ்ரீதர் மாபிடெனி
திருமதி. ஹத்நேகிம் பைட்டே

## அஹ்வா டாங் புற சுவிசேஷப்பணி:
### பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா

**துதிக்க:** துல்சோந்த் கிராம ஆராதனையில் புதிதாக ஏழுபேர் பங்கு பெறுகின்றனர். துல் சோந்த் சபையில் நடைபெற்ற அறுப்பின் பண்டிகை பலருக்குத் தூண்டுதலாக அமைந்தது. கதாத் ஆலயத்திலும் அம்சர் வன் ஆலயத்திலும் நடைபெற்ற மூப்பர்கள் கூடுகைகளை கர்த்தர் ஆசீர்வதித்தார்; ஊழியத்தை உறுதிப்படுத்துவோம் என்று மூப்பர்கள் உறுதிமொழி ஏற்றுள்ளனர். எவ்வித எதிர்ப்புமின்றி புற சுவிசேஷப்பணி சிறப்பாக நடைபெற்றது.

**ஜெபிக்க:** திருச்சபையின் அன்றாட செலவுகளைச் சந்திக்க திருச்சபையின் நிதி ஆதாரத்தை அதிகரிக்க மூப்பர்கள் ஒத்துழைக்க; சிச்சினகதா சபையின் பின்வாங்கிய விசுவாசி அர்விந்த்பாய் மீண்டும் விசுவாசத்திற்குள்வர; வன்ஜ்கிடெர்முர்ன், சுந்தா, துங்கர்தா கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட; குகாஸ் சுலே, கோக்லி, பம்னாமால், மேபடா கிராமங்களில் நடைபெறுகின்ற ஆலய ஆராதனைகளில் பலர் பங்கேற்க; கத்மால் கிராமத்தில் நற்செய்திக்கு எதிர்ப்பு தெரிவிப்போர், விசுவாசத்தி லிருந்து பின்மாற்றமடைந்தோர் மனம் திரும்ப; வன்ஜ்கிடெர்முர்ன் கிராமத்தில் ஆலயக்கட்டுமானத்திற்குத் தேவையான தண்ணீரை கிராம பஞ்சாயத்து வழங்க ஜெபிப்போம்.

### மாண்சா: செல்லதுரை & கனகநேசம்

**துதிக்க:** சஜன்புராவில் நடத்தப்பட்ட திறந்தவெளி கூடுகையில் பலர் பங்கேற்று, கர்த்தரின் வல்லமையால் தொடப்பட்டனர். விசுவாசி வினோத்பாயின் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகர மாக நடைபெற்றது. ராகேஷ், அவரது குடும்பத்தினர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்றனர். புதிய விசுவாசிகளான கல்பேஷ்பாய், ஹரேஷ்பாய் ஆகியோர் கர்த்தரின் விசுவாசத்தில் வேர் ஊன்றி வருகின்றனர்.

**ஜெபிக்க:** கூடுகையில் பங்குபெற்ற அனைவரும் இரட்சிப்பின் அனுபவத் திற்குள் வர; தனிப்பயிற்சிக்காக வரும் மாணவர்களின் பெற்றோர் இரட்சிக்கப்பட; உனாவா, சங்கர்புரா கிராமங்களில் கூடுகைகள் ஒழுங்காக ஆரம்பிக்கப்பட; புதிய தொடர்பாளர்கள் கர்த்தரில் நன்கு வளர ஜெபிப்போம்.

## மூடப்பட்ட வாசல் திறக்கப்பட்டுள்ளது!

*ஒடிசா மாநிலம், ரிமுலி பணித்தளத்தில் திரிலோக்சந்த்பூரில் ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள் ஊழியம் செய்து வந்தனர். எதிர்ப்புகளின் விளைவாக சில ஆண்டுகளுக்கு முன்னர் தந்தை மார்புன் கொல்லப்பட்டார். எனவே, இந்தக் கிராமத்தில் மிஷனெரி ஊழியம் நிறுத்தப்பட்டது. இக்கிராமத்தில் நமது மிஷனெரிகள் புற சுவிசேஷ ஊழியம் செய்தனர். கர்த்தரின் வல்லமை விளங்கியதால் கிராமத்தினர் நற்செய்திக்கு ஆவலாயிருந்தனர். இச்சூழலைப் பயன்படுத்தி இக்கிராமத்தில் ஊழியத்தை உறுதிப்படுத்த மிஷனெரிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக நம்முடைய ஜெபமும் தேவைப்படுகின்றது.*

ஏப்ரல்
23
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. பவர் ராம்தாஸ் ஜார்மல்

# தாத்ரா மற்றும் நகர் ஹவேலி

### சில்வாசா :

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** மொர்க்கால் பகுதியிலிருந்து மூவர் கிறிஸ்துவண்டை வந்தனர். ஃபதேபூர், அம்பாபாரி கிராமங்களில் ஆலயங்கள் கட்டுவதற்கான பத்திர வேலைகள் நிறைவுற்றன. 30 குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வம் தெரிவிக்கின்றனர். அறுவடைப்பண்டிகையில் விசுவாசிகள் உற்சாகமாய்ப் பங்கேற்று கர்த்தரை மகிமைப்படுத்தினர்.

**ஜெபிக்க:** சில்லித்ஃபதக் கிராமத்தில் ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்கப்பட; கவுஞ்சா திருச்சபையில் நடைபெறவுள்ள விடுமுறை வேதாகமப்பள்ளி பயிற்சித் திட்டங்களுக்காக; டிஸ்காதி ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் கட்டிமுடிக்கப்பட; சிக்காலி, கோர்தி கிராமங்களில் ஆலயங்கள் கட்டுவதற்குத் தேவையான நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

### சுர்கானா:

**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** சத்பாபல், பொக்கேர்பாடா என்ற இரு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பெண்களுக்கான கூடுகையில் 100 பெண்கள் பங்கு பெற்றனர். பார்திபாடா கிராமத்தில் நடைபெற்ற மூப்பர்களுக்கானப் பயிற்சியில் 35 மூப்பர்கள் பங்கு பெற்று, சுவிசேஷ ஊழியத்திற்கானப் பயிற்சி பெற்றனர். ஆலய ஆராதனைக்குப்பின் வீடு திரும்பிய சாக்ஷி சாலை விபத்திலிருந்து அற்புதமாகப் பாதுகாக்கப்பட்டார்.

**ஜெபிக்க:** எதிர்ப்பு நிலவுகின்ற சத்கம் கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கத் திறந்தவாசலை கர்த்தர் உருவாக்க; இம்மாத நிழ்ச்சிகள் எதிர்ப்புகளின்றி சிறப்பாக நடைபெற; ஆலயத்திற்குச் செல்வதால் எதிர்ப்புகளைச் சந்திக்கின்ற பாஸ்கரின் மனைவி, குழந்தைகளுக்காக; இம்மாதம் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள வாலிபர் முகாம் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### ஆலப்பள்ளி:

**நிங்கிஹவுதம் அலோன் சிங்**

**துதிக்க:** 14 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; 4 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். விட்டன்வாடா, லாங்கன், நெல்கூர் பகுதிகளில் நடைபெற்ற புற சுவிசேஷ ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். எல்லூர் கிராமத்தில் நடைபெற்ற விசுவாசிகள் கூடுகை பலருக்குப் பயனுள்ளதாக அமைந்தது. எட்டு மணிநேர ஜெபம், 10 மணி நேர ஜெபம் புதிய விசுவாசிகள் மத்தியில் நமது ஊழியத்திற்கான ஆதரவையும், ஆவலையும் பெருகச் செய்துள்ளது.

**ஜெபிக்க:** பல்வேறு கூடுகைகளில் செய்திகளுக்குச் செவிமடுத்த மக்கள் கிறிஸ்துவண்டைத் திரும்ப; விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பெட்தடா கிராம விசுவாசி ஷிஸ்ரா காகாஜி புற்றுநோயிலிருந்து சுகமாக; நமது விசுவாசிகளான சந்தீப், சுனில் ஆகியோருக்குத் தகுதியான வேலை கிடைக்க ஜெபிப்போம்.

ஏப்ரல்
24
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண்சன் தமிழ்செல்வன்
திருமதி. சூசன் தாமஸ் மேத்யூ
திரு. சாவ்புன்யா
திருமதி. மாயா தேவி ராஜேந்திர பாபு
திருமதி. சுஸ்மித்தா பர்தன்
செல்வி. ஸ்மிதா ராணி லிம்மா
திருமதி. நான்சி எம்.

## முக்காடா:
### நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டது. சுவாச பிரச்சனையிலிருந்து மீனா சுகமாக்கப்பட்டதால், அவரது குடும்பத்தினர் திருச்சபையில் இணைந்தனர். குடும்பத்தினரின் எதிர்ப்புகள் மத்தியிலும் நமது புதிய விசுவாசி சித்ரா விசுவாசத்தில் உறுதியாயுள்ளார். நசேரா கிராமவாசியாகிய நமது விசுவாசி ராஜ் கர்த்தரிடத்திலிருந்து சுகம் பெற்றதால் தன் மதுப் பழக்கத்தை விட்டொழித்து, கர்த்தரிடமாக மீண்டும் வந்துள்ளார்.

**ஜெபிக்க:** நமது பகல்நேர பராமரிப்பு மையத்திற்கு வரும் சிறுவர்களில் பலருக்கு உள்ள பல்வேறு நோய்களிலிருந்து சுகம் பெற; தன்னுடைய கரங்களால் கட்டப்பட்ட கோவிலுக்கு மக்கள் வரக்கூடாதென்று தடுக்கின்ற பின்மாற்றமடைந்த சுதேச ஊழியர் கிருஷ்ணன் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## கான்தேஷி பீலி வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணி & நேர் :
### அஜய்குமார் லிமா & பிரத்யாசினி

**துதிக்க:** வாஸ்மர் கிராமத்தில் இரு குடும்பங்கள் கர்த்தரைத் தங்கள் சொந்த இரட்சகராகவும், மீட்பராகவும் ஏற்றுக்கொண்டனர். கான்தேஷி பீலி மொழியில் சங்கீதப் புத்தகத்தின் மொழி மாற்றம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 12 ஆண்டுகால திருமண வாழ்விற்குப்பின் சுதேச ஊழியர்கள் அனில் & பபிதா குழந்தையால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். ஒரு ஆண்டு காலமாக மார்புவலி, தலை சுற்றல், சுய நினைவு இழத்தல் போன்றவற்றால் உபாதைப்பட்ட வாஸ்மர் கிராமவாசி கைலாஷை கர்த்தர் குணமாக்கினார். தனித்து ஊழியம் செய்தல் மூலமாக 1000 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. காதிப்பாடா கிராமத்தில் பின் மாற்றம் அடைந்த விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். சுர்பான் கிராமத்தில் பலர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்றனர். கோக்லா, கல்கோன் கிராமங்களிலிருந்து இரு குடும்பங்கள் கர்த்தரை ஏற்றுக் கொண்டுள்ளன.

**ஜெபிக்க:** கான்தேஷ் பீல் மொழியில் சங்கீத புத்தகம் விரைவில் மொழி மாற்றம் செய்யப்பட; காந்தேஷ் பீல் மொழியில் ஒலிவடிவில் புதிய ஏற்பாடு விரைவில் வெளியிடப்பட; பல்வேறு நோய்களால் அவதிப்படும் தன் குடும்ப அங்கத்தினர்களுக்குப் சுகம் கிடைக்க; டெகாவ், போத்காவ் கிராமங்களில் ஆராதனைகள் விரைவில் ஆரம்பிக்க ஜெபிப்போம்.

## ஏப்ரல் 25 சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பெஞ்சமின் பி., திரு. பிரதீப் முஷாஹரி
திருமதி. ஜெபஜோதி பால்ராஜ்
திரு. ஜெருயேல் பானி
திருமதி. மதுகலா ரமேஷ்வர் நிர்மல்

### சாலீஸ்காவ்:

**திம்மன்னா தீமோத்தேயு & மமதா நான்சி**

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதால் இருவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். ஹெதாவே, காண்டி கிராமங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளிகளில் 82 சிறுவர்கள் பங்கேற்று ஆசீர்வதிக்கப்பட்டனர். கந்திகே, அந்தாலி கிராமங்களில் நடைபெற்ற சுவிசேஷ திருப்பணி வெற்றிகரமாக நடைபெற்றது.

**ஜெபிக்க:** பஹால், ஹிராபூர், போரூஸ் கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் நவால், மனோஜ், வந்தாபாய், அக்கபாய் ஆகியோரின் ஆவிக்குரிய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக; ஜான்வே கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட; நடக்க முடியாமல் அவதிப்படும் மனோஜ் சுகம் பெற ஜெபிப்போம்.

### பிளாஸ்நேர்:

**சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி**

**துதிக்க:** ஏழு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதால் இருவர் கர்த்தரண்டை வந்துள்ளனர். அம்ஜீர் கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாம்பு கடித்த ஹிந்திரசிங்கை கர்த்தர் சுகமாக்கினார்.

**ஜெபிக்க:** எவ்விதத் தடைகளுமின்றி இயேசு திரைப்பட ஊழியம் சிறப்பாக நடைபெற; நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்காகவும், ஆராதனைகளில் ஒழுங்காகப் பங்கு பெறவும்; சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து ஜாம்சிங்பாயும், உடல் வீக்கத்திலிருந்து முகேஷ்பாயும் சுகம் பெற ஜெபிப்போம்.

## கர்நாடகா

### முன்ட்கோட்:

**ஆஷாபிரப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா**

**துதிக்க:** நான்கு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இரு சக்கர வாகன விபத்தில் காயம் அடைந்த செக்கரப்பா சுகம் பெற்றார். விசுவாசிகள் தங்கள் வயலில் நல்ல அறுவடையைப் பெற்றனர்; முதற்கனிகளில் தசம பாகத்தை கர்த்தருக்குக் கொடுத்தனர். கழுத்திலிருந்த புண்ணிலிருந்து சுரேஷ் சுகம் பெற்றார்.

**ஜெபிக்க:** மரணப்படுக்கையிலிருக்கிற ஹமாத் சுகம் பெற; மகாதெரியக்காவின் கணவர் வீடு திரும்பி மீண்டும் மனைவியுடன் வாழ; கடனாகப் பெற்ற ரூ.80,000/-ஐ விசுவாசி லிங்கப்பா விரைவாக செலுத்திவிட; வங்கியிடமிருந்து கடன்பெற்று தனது கைபேசி பழுது நீக்கும் கடையை நடத்திவரும் விசுவாசி ரவி லாபத்துடன் கடையை நன்றாக நடத்த; எதிர்ப்பாளர்களின் சவாலை மிஷனெரிகள் சாதுரியமாகக் கையாள; பிம்சி, சன்சிதா, மாருதி ஆகியோர் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வர ஜெபிப்போம்.

## ஏப்ரல் 26 ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கனகநேசம் செல்லத்துரை
திரு. பொன் அகஸ்டின், திரு. சிவகுமார் சி.
செல்வி. காயத்ரி

### ஹனுசானஹள்ளி:

**சந்தியா நாயக் & ரத்தினம்மா**

**துதிக்க:** இரு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; ஒன்பது பேர் புது வாழ்விற்குள் வந்துள்ளனர். கடுமையான வயிற்று வலியிலிருந்து சிக்மந்ஹள்ளி திருச்சபையைச் சார்ந்த மேரியை கர்த்தர் சுகமாக்கினார். இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது, நள்ளிரவில் காட்டிலே சக்கரத்தில் பொத்தல் ஏற்பட்டு காற்று வெளியேறியதால் ஏற்பட்ட விபத்திலிருந்து எஸ்தரையும் அவர் குடும்பத்தையும் கர்த்தர் காப்பாற்றினார். காணாமல் போயிருந்த ஆட்டைக் காட்டிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் விசுவாசி கொதலூர் கண்டுபிடித்தார்.

**ஜெபிக்க:** விசுவாசிகளுக்கு எதிராக மந்திரவாதிகள் செய்யும் மந்திரவாதம் ஒன்றுமில்லாமற்போக; கண்ணில் நடைபெற இருக்கும் அறுவை சிகிச்சையின் மூலம் தன்னார்வத் தொண்டர் தேவராஜ் பூரண சுகம் பெற; கோட்டையூர் ஆலய மின் கட்டணப் பிரச்சனை சுமூகமாகப் பேசித் தீர்க்கப்பட; நமது விசுவாசி மணியின் மகனுடைய திருமணம் சிறப்பாகவும் ஆசீர்வாதமாகவும் அமைய; எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி, இயேசுவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## தெலங்கானா

### அசிஃபாபாத்:

**ரமேஷ் வசாவா & சுனிதா**

**துதிக்க:** சக்லாபாலி, கெருடா என்ற இரு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. வாய் தொற்றுநோயிலிருந்து லட்சுமியும், கடுமையான முதுக வலியிலிருந்து சாவித்திரிபாயும், கல்லீரல் வீக்கத்திலிருந்து நந்தபாயும், இனம் தெரியாத காய்ச்சலிலிருந்து சந்தோஷ், சங்கர், ராமாபாய் ஆகியோரும் சுகம் பெற்றனர்.

**ஜெபிக்க:** இம்மாதத்தில் திட்டமிடப்பட்டுள்ள கூடுகைகள், நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடைபெற; நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கமலாபாய் – தலைசுற்றல், கிஷான் – உடல்வலி, ரஹேல்பால் – குடல் வால் தொற்று, ராமாபாய், தெவ்யா, டெஸ்ஸா– தைராய்டு பிரச்சனை ஆகிய நோய்களிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்

## கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் ஆசீர்வாதங்கள்!

*உத்தரப் பிரதேசம், டூண்ட்லா பணித்தளத்தைச் சார்ந்த விசுவாசி ரமேஷ் சந்திரா தன் சாட்சியைப் பிறருக்குச் சொல்லி வருகின்றார். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின்னர், எவ்வாறு தான் தீய பழக்கங்களிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றும், தன் குடும்பத்தைக் கர்த்தர் எவ்வாறு பலவழிகளிலும் ஆசீர்வதித்து வருகின்றார் என்றும் சாட்சியாகக் கூறுகின்றார். தன்னுடைய பண்ணையிலுள்ள விலங்குகள் அதிகரித்துள்ளன என்றும் தன் மகன்கள், மகள்கள் ஆகியோருக்கு உயர்ந்த பதவிகள் கிடைத்துள்ளன என்றும் பிறருடன் சாட்சி கூறுகின்றார். இவருடைய சாட்சியைக் கேட்டப் பலர், கிறிஸ்துவண்டை ஈர்க்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவுக்கே மகிமையுண்டாவதாக!*

## ஏப்ரல் 27 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் மோசஸ் எஸ்.
திருமதி. ஜோதிமணி மனோஜ்
திருமதி. இடிகினலா மௌனிகா பிரவின்

# ஆந்திரப் பிரதேசம்

### ரோதம்: கென்னத் கரியப்பா & கீதா

**துதிக்க:** 11 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; ஏழு பேர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். மூன்று குடும்பங்களும் இயேசுவைத் தங்கள் சொந்த மீட்பராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டனர். மூன்று கிராமங்களில் நடைபெற்ற மாலைக்கூடுகைகளில் 55 பேர் பங்கேற்றனர்; நான்கு குடும்பங்கள் நற்செய்திக்கு ஆவல் காட்டுகின்றனர். நமது விசுவாசி தமியாவின் ஆழ்துளைக் கிணறு அதிகமாகத் தண்ணீரைத் தருகின்றது. நமது விசுவாசி ரத்தினம்மா தனது குடும்பத்திற்காகப் புது வீட்டைக் கட்டியுள்ளார்.

**ஜெபிக்க:** ரோதம், துரகலபட்டனா, சனிபால்லி கிராமங்களில் ஆலயங்கள் கட்ட நிலம் கிடைக்க; நற்செய்திக்குச் செவிமடுத்த ராமன்ஜி இரட்சிக்கப்பட; சுவிசேஷ ஊழியத்தால் சந்திக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட; நமது முக்கியத் தொடர்பாளர்களான ராமன்ஜிம்மா, ஜெயம்மா, சாவித்திரியம்மா தங்கள் உறவினர்களுக்கு கர்த்தரின் அன்பைப் பகிர்ந்து கொள்ள ஜெபிப்போம்.

### சி.கே. பள்ளி: தேபதத்தா லிமா & சோனியா ராணி ஜெனா

**துதிக்க:** ஒரு கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; ஒருவர் புது வாழ்விற்குள் வந்துள்ளார்; கோட்டப்பெட்டா கிராமத்தில் நடைபெற்ற தேடுவோர் முகாமை கர்த்தர் ஆசீர்வதித்தார். பல சவால்களுக்கு மத்தியில், நியாமதல்கா கிராமத்தில் மாலைக் கூடுகையை நடத்த கர்த்தர் உதவி செய்தார்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு வாஞ்சை காட்டும் வாலிபர்களான லோகேஷ், ஹரி, தருண், மௌமா மனிக்கா, சரண், கங்கார்ஜனா ஆகியோர் இரட்சிக்கப்பட; மோசஸின் குடும்பத்தில் சமாதானம் நிலவ; புதிய தொடர்பாளர்களான கிதுகா, லட்சுமி, சோனா, மகேஷ், லலிதா, சில்பா, கத்னியப்பா, தேவி ஆகியோர் கர்த்தரின் அன்பில் வளர ஜெபிப்போம்.

### மதனபள்ளி: வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** ஏழு கிராமங்களில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பலரைக் கிறிஸ்துவின் மந்தைக்குள் கொண்டுவர புதிய விசுவாசிகள் முயற்சி செய்கின்றனர். பல்வேறு நிகழ்வுகளின் வாயிலாக 480 பேர் நற்செய்தியைக் கேட்டனர். எந்தவித பிரச்சனையுமில்லாமல் விசுவாசி கிருஷ்ணம்மா தன் மகளின் திருமணத்தை நடத்தினார். பெரும் விபத்திலிருந்து கர்த்தர் மோகனைக் காப்பாற்றினார். நீண்டகாலம் பிரிந்து வாழ்ந்து வந்த தம்பதியர் சுரேஷ் & மேரி திரும்பவும் ஒன்றாக இணைந்தனர்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்மாற்றமடைந்த சுவாதி, ராமன் குடும்பம், மாலதி, ரெட்டி குடும்பம், ராஜம்மா மீண்டும் விசுவாசத்திற்குள் வர; தேவராஜ்யப்பணியின் விரிவாக்கத்திற்கு உதவிச் செய்கின்ற தன்னார்வத் தொண்டர்கள் பாலாஜி, பிரசன்னா ஆகியோருக்காக ஜெபிப்போம்.

ஏப்ரல்
28
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வான்மதி மாசிலாமணி

## பலமநேர்:

### சத்தியப்பா & ஷியாமளாபாய்

**துதிக்க:** புதிதாக 32 கிராமங்களில் நற்செய்தி கூறப்பட்டது; 16 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். மூன்று மாத இடைவிடாத ஜெபத்தால் எல்லம்மா புற்றுநோயிலிருந்து சுகம் பெற்றார். கம்மனப்பள்ளி கிராமத்தில் நற்செய்திக்குத் திறந்த வாசல் கிடைத்துள்ளது; ஐந்து குடும்பங்கள் நற்செய்திக்கு வாஞ்சை காட்டுகின்றனர். நம் இயக்கத்தில் தன்னார்வத் தொண்டராக உதவிச் செய்ய யோனா (ஏ) ஜோதீஸ்வர் முன்வந்துள்ளார்; உள்ளூர் மொழியைப் புது மிஷனெரிகள் கற்க ஆரம்பித் துள்ளனர்.

**ஜெபிக்க:** பலமநேர் பணித்தளத்தில் தலைமைத்துவப் பயிற்சி மையம் ஆரம்பிக்கப்பட; கோல்லப்பள்ளி கிராமத்தி லுள்ள எதிர்ப்பை புதிய விசுவாசிகள் தைரியமாக விசுவாசத்தோடு சந்திக்க; களி வீடு பகுதியில் நமக்கு எதிராகத் திரும்பியுள்ள முன்னாள் சுதேச ஊழியர் நமக்கு இடையூறாகச் செயல்படாதபடி; ஆலயங்களைப் பழுதுபார்ப்பதற்கான நிதி கிடைக்க; நமது சுவிசேஷ இரதம் ஊழியத்திற்கு உதவிச் செய்து, தற்போது மனநிலைப் பாதிக்கப்பட்டுள்ள லாசரு குருசாமி சுகம்பெற ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

## தமிழ்நாடு மண்டல அலுவலகம்:

### ஆல்பின் & விஜயராணி

**துதிக்க:** கர்த்தருடைய வார்த்தையில் வளருவதற்கேதுவாக நமது விசுவாசிகளுக்கு TAFTEE வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நம்முடைய சபைகள் எல்லாவற்றிலும் புதன்கிழமை ஜெபங்களும் லெந்து கால ஜெபங்களும் ஒழுங்காக ஏறெடுக்கப்படுகின்றன. அரியக்குளம் பகுதியில் நடத்தப்பட்ட மருத்துவ முகாம் பலருக்கு ஆசீர்வாத மாக அமைந்தது. கொப்பூர் ஆலயத்தில் ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு விசுவாசிகள் தங்கள் பங்களிப்பை அளித்தனர். பல விசுவாசிகள் தங்கள் குடும்ப நிகழ்வுகளைக் கிறிஸ்தவ விசுவாச அடிப்படையில் நடத்துகின்றனர். உள்ளூர் தலைமைத்துவத்தை உறுதிப் படுத்தும் வண்ணமாக திருச்சபை மூப்பர்களுக்கானப் பயிற்சிகள் ஒழுங்காக நடத்தப்படுகின்றன.

**ஜெபிக்க:** விசுவாசிகள் திருச்சபையில் இணைவதற்குத் தடையாக உள்ளவை முற்றிலும் நீக்கப்பட; படிப்பறிவற்ற, பாதி அனாதைகளாக உள்ள இருளர் சமுதாயச் சிறுவர்களின் இரட்சிப்பிற்காக; விசுவாசிகளின் பிள்ளைகளுக்குத் தகுந்த கிறிஸ்தவ வாழ்க்கைத்துணை கிடைக்க; தங்களுடைய வாழ்வாதாரத்தைச் சம்பாதிக்க விசுவாசிகள் எடுக்கும் முயற்சிகள் வெற்றிப் பெற ஜெபிப்போம்.

**ஏப்ரல் 29 புதன்**
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷீபா ஜி. சந்திரா ஸ்ரீனிவாசன்
திருமதி. செல்வ மெரினா மனாசே டேனியல்
திருமதி. லாம்நெய்டிங் தௌதாங்.

## தலைமைத்துவப் பயிற்சி மையம், பெரியமலை:

### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** மூன்று கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; தலைமைத்துவப் பயிற்சி மையத்தில் கூடுகைகள் நடத்தி வரும் எல்லா குழுக்களுக்கும் தேவையான வசதிகள், (நீர்,மின்சாரம்) செய்து தரப்படுகின்றன. பெரும் விபத்திலிருந்து விசுவாசி ராஜேஸ்வரியை கர்த்தர் பாதுகாத்தார்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு வாஞ்சை காட்டுகின்ற விஜயலட்சுமி, சங்கர்லிங்கம், பன்னீர்செல்வி, மாலா மூர்த்தி, அமுதா, தனம், சங்கீதா, ஆறுமுகம், தம்பிதுரை, குமாரவேல், சிவலிங்கம் தனலட்சுமி, கண்ணன் குடும்பம், முத்து லட்சுமி குடும்பம் ஆகியோர் இரட்சிக்கப்பட; நெஞ்சிலுள்ள கட்டியிலிருந்து சுவேதாவும், புற்றுநோயிலிருந்து கவிதாவும் கோகிலாவும், இருதய நோயிலிருந்து தங்க குமாரும் சுகம் பெற ஜெபிப்போம்.

## கெலமங்கலம்: பாலசுப்ரமணியன் & & பரஞ்ஜோதி லூசினா

**துதிக்க:** அஞ்செட்டி பகுதியில் வீட்டு ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒபேபாளயத்தில் இந்தி மொழியில் ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கருங்கல் கிராமத்தைச் சார்ந்த அசோக் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்றார். உடல் பலவீனத்திலிருந்து கர்த்தர் ஜெயக்குமாரையும் செரிலினையும் சுகமாக்கினார்.

**ஜெபிக்க:** ஒபேபாளயத்தின் வாலிபர்கள் இரட்சிக்கப்பட; சூளகிரியைச் சார்ந்த கிருஷ்ணப்பா தலையிலுள்ள கட்டியிலிருந்தும், தெகனப்பள்ளியைச் சார்ந்த ரகு சிறு நீரகப் பிரச்சனையிலிருந்தும், ரமேஷ் புற்றுநோயிலிருந்தும் சுகம்பெற ஜெபிப்போம்.

## *மாண்டவர் மீண்டார்!*

*மத்தியப் பிரதேசம், மேனிமாத்தா, நிவாலி பகுதியில் கேலி கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி பராக்கிபாய் திடீரென சுகவீனமாகி சுயநினைவை இழந்தார். சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டார். அவருடைய உடல்நிலையைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டார் என்று அறிவித்தனர். பிற உறவினர்களுக்குத் தகவலைக் கூறி இறுதிச் சடங்குக்கு ஏற்பாடு செய்ய குடும்ப அங்கத்தினர்கள் திட்டமிட்டனர். தனது தாய்க்காக கர்த்தரின் கிருபையையும் தெய்வீக இரக்கத்தையும் பெற ஜெபிப் போம் என்று மகன் கூறினான். இது தேவையற்ற, அர்த்தமற்றச் செயல் என்று நினைத்த உறவினர்கள், விருப்பமின்றி ஜெபம் செய்தனர். விசுவாசமுள்ள மகனின் ஜெபத்தைக் கேட்டு, தாயைக் கர்த்தர் உயிரோடெழுப்பினார். மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த வித்தியாசமான அற்புதத்தைக் கண்ட மக்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்தனர். உயிர்த்தெழுந்த கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!*

ஏப்ரல்
30
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நகோமி மேத்யூ ஜெபராஜ்
திரு. ஏசு பாபு, திரு. நிரஞ்சன் பால்

## திருவண்ணாமலை பிராந்தியம்:
### டேவிட் பெருமாள் & ஸ்டெல்லா டேவிட்

**துதிக்க:** 34 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. கல்லல்லாளி பணித் தளத்திலிருந்து இருவர் கர்த்தருக்குள் வந்துள்ளனர். வேடப்பட்டி ஆலயத்தில் புதிய நபர்கள் ஆராதனையில் பங்கேற் கின்றனர். முதல் தளத்திலிருந்து கீழே விழுந்த மருதப்பட்டியைச் சார்ந்த வைரனைக் கர்த்தர் பாதுகாத்தார். பெரும் விபத்திலிருந்து செல்வம் கர்த்தரால் பாதுகாக்கப்பட்டார். நாராயணக்குப்பம் பகுதியைச் சார்ந்த பின்வாங்கியிருந்த தேவபண்டலம் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்தார். ஜெங்கம்புண்டி பகுதியில் புதிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

**ஜெபிக்க:** கரியமங்கலம் பணித்தளத்தில் கணவனிடமிருந்து பிரிந்துள்ள சசிகலா மீண்டும் கணவனுடன் சேர; விசுவாச வாழ்விலிருந்து பின்மாற்றம் அடைந் துள்ள பழனிசாமி, பெத்தம்பட்டி யைச் சார்ந்த மகேஷ் குடும்பம், மதி யழகன், கலா, சின்னதுரை, சித்ரா, உஷா ஆகியோர் விசுவாச வாழ்வில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட; தன்னுடைய மனைவியை ஆராதனைக்குச் செல்ல விடமால் தடுக்கும் செங்கம்பள்ளியைச் சார்ந்த சென்ன கிருஷ்ணன் இரட்சிக்கப்பட; சாத்தனூர் ஆலயத்தில் இடையூறுச் செய்வோர் மனந்திரும்ப; மருதம்பட்டியைச் சார்ந்த வீரவன், சின்னத்தாய், ரீட்டா, உண்ணாமலை திருச்சபையில் இணைய; ஞாயிறுபள்ளிக்குச் செல்லக் கூடாதென்று தங்கள் பிள்ளைகளைத் தடுக்கும் மேல் சங்கம் கிராம பெற்றோர்கள் மனந்திரும்ப; வேதவலம் பணித்தளத்தில் நற்செய்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## கடத்தப்பட்ட சிறுவன் வீடு வந்து சேர்ந்தான்!

*உத்தரப் பிரதேசம், பர்த்தனா பணித்தளம் மதிராம்பூரைச் சேர்ந்த நமது விசுவாசி ஜெய்வீர். இவரது மகன் ஆமோஸ் டெல்லி-கான்பூர் நெடுஞ்சாலையில் கடத்தப்பட்டு, ஆக்ராவிற்கு எடுத்துச் செல்லப்பட்டான். சிறுவனைக் கடத்திய நபர் தூங்கிக் கொண்டிருக்கையில், ஆமோஸ் அவ்விடத்திலிருந்து தப்பி, ஒரு ரயில் வண்டியில் ஏறி, தொலைபேசி வழியாகத் தன் தந்தையைத் தொடர்புக் கொண்டான். பின்னர் சுவன்சூரத் ரயில் நிலையத்திலிருந்து வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டான். அவன் தன் பெற்றோரிடம் வந்து சேரும் வரையில், அறிமுகம் இல்லாத ஒருவர் அவனுக்குப் பல்வேறு வழிகளில் உதவிசெய்து வந்தார். சிறுவன் ஆலயத்தில் தன் சாட்சியைப் பகிர்ந்துகொண்டான். இக்கட்டானச் சூழல் களில் கர்த்தர் எவ்வாறு ஆமோஸுக்கு உதவி செய்து அவனைத் தப்புவித்தார் என்பதைக் கேள்விப்பட்ட விசுவாசிகள், தங்கள் விசுவாசத்தைக் கர்த்தரில் அதிகமாக வேரூன்றினர். மெய்யாகவே நம் கர்த்தர் மாபாதுகாவலர்!*

# ஆட்கள் தேவை

**நீங்கள்**

மறுபிறப்பின் அனுபவம் பெற்றுள்ளீர்களா?

சுவிசேஷ ஊழியம் செய்ய அழைப்பு உள்ளவரா?

இந்தியாவின் எந்தப் பகுதியிலும் சுவிசேஷ ஊழியம் செய்ய தயாராக இருப்பவரா?

நல்ல உடல் நலம் கொண்டவரா?

ஆண்களானால் 28 வயதுக்கு குறைவாகவும், பெண்களானால் 24 வயதுக்கு குறைவாகவும் இருப்பவரா?

குறைந்த பட்ச கல்வி தகுதியாக 12-ம் வகுப்பு தேர்ச்சிப்பெற்றவரா?

பட்டதாரி / முதுநிலை பட்டதாரி/ மருத்துவர் / தாதியர் / மருந்தாளுனர் / எக்ஸ்ரே / ஸ்கேன் டெக்னீஷியன் / பொறியாளர் /கணினி வடிவமைப்பாளர் ஆகியோரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு
செயலர், மனிதவள மேம்பாட்டுத்துறை
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 600 053

போன்: 9344743893 | இமெயில் : abraham.d@fmpb.org | hrd@fmpb.org

Regd. Newspaper for India No.17759/69
TN/PMG(CCR)/WPP700/2018-2020
Regd. No. TN/TBM/56/2018-20
Licensed to post without prepayment
Date of publication: Last week of every month




***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Thomson Press India Ltd., A-9, Industrial Complex, Maraimalainagar - 603 209 ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***